
குங்குமத் தேர்
பாலகுமாரன்

# 1

சூரியகாந்தி பூச்செடிகள் கோயிலின் பின்பக்க சுவரை ஒட்டி ஆள் உயரத்திற்கு வளர்ந்திருந்தன. கோயி லுக்கு செய்கின்ற அபிஷேகங்கள் ஜலதாரை வழியாக ஓடி, கோயில் கருவறையின் வழியே வெளியே வந்து, சுற்றுப்பிராகாரத்தைத் தாண்டி, மதில்சுவருக்கு அடியே நுழைந்து பூமி சரிவான இடப்பக்கம் திரும்பி சற்று ஓரமாக தண்ணீர் தேங்குகின்ற இடத்தில் சதாசிவம் தான் அந்தச் செடிகளை பதியமிட்டான்.

அவன் வீட்டுத் தொட்டியிலே விதை போட்டு அவை முளைத்துக் கிளம்பியதும், ஈர மண்ணோடு பிளாஸ்டிக் கவரில் போட்டு பையில் எடுத்து வந்து இங்கே வரி சையாக இடம் பார்த்து நட்டான். சில இடங்களை மேடு செய்து, சில இடங்களை நீர் போகும் வண்ணம் பள்ள மாக்கி திசை திருப்பி விட, அபிஷேக நீர் சுவர் ஓரமே சென்று தொடர்ந்து ஆழ்ந்து பரவியது. எனவே, செடிகள் நன்கு வளர்ந்து கிட்டத்தட்ட பூக்கள் அந்தச் செடிகளில் அழகாய்ப் பூத்திருந்தன.

சிவப்பு, வெள்ளை மதில்சுவருக்கு நடுவே பச்சை இலை களும் மஞ்சள் பூக்களுமாய் பார்ப்பதற்கு மிக அழகாய் திகழ்ந்தன.

அவன் விதை நட்டதும், பதியன் போட்டதும் யாருக் கும் தெரியவில்லை. பூக்கள் பூத்திருந்ததால் துர்காதே வியே விழி விரிய அவற்றைப் பார்த்தாள். “இதெல்லாம் எப்ப முளைச் சுது?” என்று குழந்தை போல் கேட்டாள்.

அவன் வாய்விட்டுச் சிரித்தான். “உன் கண்ணு முன் னாடி முளைச்சதுதான். வந்து உக்காந்து பேசற போது சுத்திமுத்தி யாரு இருக்காங்க, என்ன நடக்குதுன்னு

பார்க்கணும். பார்க்காதயே இருந்தோம்னா...” அவளை சதாசிவம் கேலி செய்தான்.

அதை சிறிதும் பொருட்படுத்தாத துர்காதேவி எழுந்து நடந்துபோய் ஒவ்வொரு செடியாய் தொட்டுப் பார்த் தாள். ஒரு சூரியகாந்தியை முகர்ந்து பார்த்தாள். “அப்பா நாறுது” என்று முகத்தை வேகமாய்த் திருப்பிக் கொண் டாள்

“அது வெறுமே பார்க்கற பூ” என்று சதாசிவம் அவளுக்கு பதில் சொன்னான். “கிட்டகூட போய் பார்க்கக்கூடாது. பூ முழுக்க எறும்பு இருக்கும். சுத்தி சுத்தி தேனீயோ, குள வியோ வந்துகிட்டு இருக்கும். ஒரு தூரத்திலிருந்து அந் தப் பூவைப் பார்த்தா இன்னிக்கெல்லாம் பார்த்துகிட்டே இருக்கலாம்” விளக்கிச் சொன்னான்.

“நீங்கதான் வெச்சீங்களா?” துர்காதேவி சட்டென்று புரிந்து கொண்டு சதாசிவத்தை ஆவலோடு பார்த்தாள்.

“வேற யாரு வைப்பாங்க துர்கா. நாம உக்காந்து இருக் கிற இடத்தை நாம நல்லா பண்ணணுமே அப்படின்னு தோணிச்சு. நீ வர்றதுக்கு காத்திருக்கிற நேரம், நான் வீட் டுல விதை போட்டு முளைச்ச சூரிய காந்திப் பூவை இங்கே கொண்டாந்து நட்டேன்.”

“இங்க நடணும்னு எப்படித் தோணிச்சு?”

“நாம இந்த ஜலத்தைத் தாண்டித்தானே வர்றோம். கோயில்லேர்ந்து வர்ற அபிஷேக ஜலம் இங்கதானே தேங்குது. அதை ஞாபகம் வெச்சுகிட்டு, சூரியகாந்தி பூவைப் பார்க்கற போது, விதையை பார்க்கறபோது, இதை வீட்டில நட்டு இங்க பதியன் போடலாம்னு தோணிச்சு. ரெண்டு, மூணுதான் சரியா வரலை. மத்த எல்லாமே நல்லா வந்திருக்கு பாரு.'

"அட, உன் புத்தி ஏதாவது யோசனை பண்ணிக்கிட்டே இருக்கில்லே."

"ஆமாம், வெறுமனே வானத்தைப் பார்த்து படுத்துக் கினு இருக்கிறதுக்கா இருக்கோம். புத்தின்னா ஏதாவது யோசனை பண்ணிக்கிட்டேதான் இருக்கணும்."

"என்னால முடியலையே"-துர்கா கேட்டாள்.

"என்னா முடியல."

"எப்பவும் யோசனை பண்றதுக்கு எனக்கு தோண மாட்டேங்குது. கொஞ்சம் வேகமா யோசனை பண்ணா கொட்டாவி வருது. கொட்டாவிக்கு அப்புறம் தூக்கம் வருது."

"வேணா, யோசனை பண்ணாதே. உனக்கும் சேர்த்து யோசனை பண்ணத்தான் நான் இருக்கேனே..." -சதாசி வம் அவள் தோள்மீது இறுக்கிக் கொண்டு பேசினான்.

"சரி. எனக்கும் சேர்த்து இப்ப யோசனை பண்ணுங்க. மேற்கொண்டு நாம என்ன பண்ணப்போறோம், எப்ப நம்ம கல்யாணம்?" அவள் கேட்டுவிட்டு அவன் பக்கம் திரும்பி கைகட்டி உட்கார்ந்து கொண்டாள்.

மூன்றாம் வகுப்பு சிறுமிபோல எல்லா பொறுப்பு களை யும் அவன் தலையில் சுமத்திவிட்டு, 'நீ என்ன சொன் னாலும் கேட்கிறேன்' என்பது போல் இருபத்து நான்கு வயதுப் பெண் எதிரே உட்கார்ந்திருப்பதை பிரியத்துடன் சதாசிவம் பார்த்தான். அவளுக்காகவும் யோசனை செய் ய ஆரம்பித்தான்.

"நம்ம கல்யாணத்துக்கு இன்னும் ஒரு வருஷம் நீ பொறுத்துக்கணும்."

"முடியாது." அவள், அவன் பேச்சுக்கு வேகமாக மறுத் தாள்,

"சொல்றதைக் கேளு துர்கா."

"நான் சொல்றதைக் கேளுங்க. ஒரு வருஷம்லாம் என்னால பொறுக்க முடியாது. அதுக்குள்ளே எங்க வீட்ல என்னை எங்கயாவது கொண்டுபோய் பொலி போட்ரு வாங்க. அதிகபட்சம் ஒரு மாசம். அதுக்கு மேல என்னால காத்திருக்க முடியாது. நீங்க ஒரு வருஷம்தான் ஆவும் அப்படின்னா ஒரு மாசம் வரைக்கும் உங்களோட இங்கே உட்கார்ந்து பேசிட்டு, அடுத்த மாசம் எங்கனா ஆறோ, குளமோ, ஏரியோ பார்த்து விழுந்து செத்துப்போறேன்."

"ஏய்... என்னா பேசறே?"

"வேற எப்படிப் பேசினாலும் உங்களுக்குப் புரியாது. திரும்பியும் சொல்கிறேன். ஒரு வருஷம், ஆறு மாசம்... இந்தப் பேச்செல்லாம், விட்டுருங்க. இது டிசம்பர் மாசம். ஜனவரி முப்பது தேதிக்குள்ளே எங்கயாவது, எந்த ஊர்லயாவது நீங்க என் கழுத்தில் தாலி கட்டறீங்க. என்னை பொண்டாட்டின்னு ஏத்துக்கறீங்க. அதுக்கப்புறம் என்ன வந்தாலும் நாம் பார்த்துக் கலாம். அதையும் தாண்டி ஒரு நாள் கூட என்னால் காத்திருக்க முடியாது. அவள் திட்டவட்டமாய் அவனுக்குத் தன் நிலைமையை எடுத்துரைத்தாள்.

சதாசிவம் மௌனமானான். எந்த யோசிப்புமின்றி கோயில் சுவருக்கு அருகே வளர்ந்திருந்த சூரியகாந்தி பூக்களையே வேடிக்கை பார்த்துக்கொண்டிருந்தான்.

"ஒரு பொம்பளை ஒரு வருஷம் காத்து இருக்கலாம். இரண்டு வருஷம் காத்து இருக்கலாம். நான் மூணு வருஷம் காத்திருந்திட்டேன். இதுக்கப்புறமும் காத்திருன்னு சொன்னா, உங்களுக்கு என்னைக் கல்யாணம் பண்ணிக்கற வசதியில் லைன்னுதான் அர்த்தம்... ஆனா, இந்த ரெண்டு சமாதானமும் தயவுசெய்து எங்கிட்ட சொல்லாதீங்க. என் மேல் நீங்க உயிரையே வெச்சிருக்

கீங்கன்னு எனக்குத் தெரியும். உங்களுக்கு கல்யாணம் பண்ணிக்கற வசதி இல்லைன்னு நீங்க நினைக்கிறது தப்பு. கல்யாணம்னு பண்ணிக்கிட்டபிறகு நமக்கும் வச திகள் தானா வந்து சேரும். பண்ற வரைக்கும்தான் நம் மால முடியுமா... முடியுமான்னு ஒரு பயம்."

"இல்ல துர்கா, ஊர்கூடி நல்லபடியா..."

"அதெல்லாம் நடக்காதுங்க. எந்த ஊரும் கூடாது. எது வும் நல்லபடியா நடக்காது. நாமளா பாத்து நடத் திக்கிட்டா தான் அது நல்லபடியா முடியும். ஊரைக் கூட்டினீங்கன்னா சண்டைதான் மிஞ்சும். தயவு செய்து அப்படி ஒரு எண்ணத்தை வெச்சுக்காதீங்க. ரெண்டு பேரும் சேர்ந்து எங்கனா போவோம். தாலியைக் கட்டு வோம், மூணுநாள் வெளியே தங்கியிருப்போம். கிளம்பி ஊருக்கு வருவோம். சேர்த்துக் கிட்டா இருப்போம். இல் லையா, மறுபடியும் கிளம்பி வேற எங்கயாவது போயிடு வோம். இந்த ஒரு முடிவு நீங்க எடுத்தே ஆவணும். இப்ப வீட்டுக்கு திரும்பி போறதுக்கு முன்னாடி, என்னிக்கு போறோங்கறதை சொல்லித்தான் ஆகணும்."

அவன் நட்ட சூரியகாந்திப் பூக்கள் அத்தனையும் அவன் என்ன சொல்லப்போகிறான்' என்பது போல அவனையே பார்த்துக்கொண்டிருந்தன. சூரியன் மேற்கு திசையில் மறைந்து கொண்டிருந்தது. கோயில் கிழக்கு பார்த்து நின்றிருந்தது.

கோயிலின் பின்பக்க சுவரில் வரிசையாய் மலர்ந்திருந்த அந்த சூரியகாந்தி பூக்கள் இவர்கள் இருவரும் போன பிறகு என்னவாகும் என்று சதாசிவம் யோசிக்கத் துவங் கினான். இன்னும் உயரமாய் வளரும். இன்னும் அதிக பூக்களைச் சொரியும். பிறகு ஒரு உயரம் தாண்ட முடியா மல் மெல்ல சுருங்கி இரண்டாய் ஒடிந்து தன் காலிலே விழுந்து மடியும். விழுந்த பூக்களிலிருந்து விதைகள்

வெளிவரும். பிறகு அந்த விதைகள் ஈர மண்ணில் பட்டு மறுபடியும் பதியன்கள் தோன்றி, அந்த பதியன் கிளைத்து வேர்விட்டு உயரமான செடிகளாகி, செடிகள் நன்கு வளர்ந்து மறுபடியும் பூக்கள் பூக்கும். இந்த இடம் முழுவதுமே சூரியகாந்தி செடி காடாக மாறினாலும் மாற லாம்.

முன்பு எப்போதோ ஒரே ஒரு இலந்தைச் செடியை யாரோ நட்டுவிட்டுப் போக, இன்று இந்த கோயிலினு டைய வெளிப்பிராகாரம் முழுவதும். இலந்தைச் செடி காடாக வளர்ந்துவிட்டது. அந்த இலந்தைச்செடியைத் தாண்டி உள்ளுக்குள் வருவதற்கு வெகு சிலராலேயே முடியும். உள்ளே போக வேண்டும் என்ற குறிக்கோள் உள்ளவராலேயே உள்ளே நடந்து போக முடியும்.

காட்டுமன்னார்கோவில் சிவன் கோயிலைச் சுற்றிலும் உள்ள தரிசு நிலத்தில் கருவேல மரங்களும் இலந்தைச் செடிகளும்தான் முளைத்துக்கிடந்தன. ஒரு காலத்தில் இந்த இடம் முழுவதும் வீடுகளாக இருந்திருக்க வேண் டும். அப்படி இருந்த தற்குரிய ஓட்டுச்சில் அடையா ளங்கள் அதிகம் இருந்தன. அது ஆயிரம் காலத்து இடம் என்று சதாசிவத்துக்கு சொல்லப்பட்டிருந்தது. இலந்தைக்காடுகளுக்கு ஊடே, எட்டுப்பக்க மதிலுக்கு நடுவே சில தூண்கள் புதைந்து கிடப்பதும், உடைந்த கருங்கற்கள் கிடப்பதையும் சதாசிவம் கவனித்திருக் கிறான். பழந்தமிழ் எழுத்துகள் எழுதப்பட்டிருந்த ஒரு பெரிய பானை ஓட்டை அங்கிருந்து எடுத்துக்கொண்டு போய் வீட்டில் பத்திரமாக வைத்திருக்கிறான்

கோயிலும் கோயிலைச் சுற்றிய ஒரு ஊரும் ஒரு காலத் தில் மிக அற்புதமாக இங்கு இருந்திருக்க வேண் டும். இப்போது கோயிலைவிட்டு ஊர் நகர்ந்து விட்டது. சிவன் கோயிலை தள்ளி வைத்துவிட்டு, மன்னார் என் கிற விஷ்ணு கோயிலின் பக்கம் ஊர் போய்விட்டது.

எங்கே பிரபந்தங்கள் இருக்கின்றன என்று காட்டுகின்ற மன்னார் கோயில் உள்ள இடம் என்கிற படியால் காட்டுமன்னார்கோவில் என்று இப்போது ஊருக்கு பெயர் வந்துவிட்டது. ஆனால், ஆயிரம் வருடங்களுக்கு முன்னால் இந்த காட்டுமன்னார்கோவிலுக்கு 'உடையார் குடி' என்று பெயர். உடையார் என்று ஒரு பரம்பரையினர் குடியிருந்த இடமென்பதால் அவ்விதம் பெயர் வந்தது.

அந்த உடையார்கள் சிவபக்தர்கள். அப்போது விஷ்ணு ஆலயம் சாதாரணமாக இருந்தது. சிவன் கோயில் கருங்கற்களால் புதுப்பிக்கப்பட்டு மண்டபங்களும். கடைத் தெருக்களும், அக்ரஹாரங்களும், வேளாளர் வீடுகளுமாய் மிகச் சிறப்பாய், தனிநகரமாய் பொலிந்திருந்தது.

ஆயிரம் வருடங்களுக்குமுன் தமிழ்தேசத்தை ஆண்ட சோழர்களுடைய பரம்பரை மெல்ல மெல்ல அழுந்த, பாண்டி யர்களுடைய படையெடுப்பில் உடையார்குடி நாசமாக, பாண்டியர்களுடைய குலதெய்வமான விஷ்ணுவை ஜனங்கள் கொண்டாடஆரம்பித்துவிட்டார்கள். அரசியல் காரணங்களால் கோயிலும் திசை மாறியது.

புத்தகம் படிக்க கோயிலுக்கு வந்தவன் பகற்பொழுதில் கோயில் சாத்தவேண்டிய அவசியத்தை உணர்ந்து கோயிலுக்குப் பின்னே உள்ள மரத்தடிக்குப் போக, மரத்தடியில் உட்கார்ந்திருந்தபோது மற்ற இடங்களைச் சுற்றிப்பார்க்க, இலந்தைக்காடுகள் அடர்ந்து கிடப்பதும் நடுநடுவே கருங்கற்கள் நீட்டிக் கிடப்பதும் அவனுக்கு ஆச்சரியத்தை உண்டு பண்ணின.

'இது என்ன இடம்?' என்று ஊருக்கு வந்த ஒரு சரித்திரப் பேராசிரியரைக் கேட்க, 'இது மகத்தான ஒரு பூமி' என்று அவர் அதன் வரலாறு சொன்னார்.

இந்த இடம்தான் அவன் காதலுக்கு ஏற்பாடு செய்தது. இந்த இடம்தான் அவன் காதலை வேகமாய் மேல் நோக்கி வளர்த்த து.

ஒரு நாள் மாதப் பத்திரிகைகள் ஒரு நான்கைந்து எடுத்துக் கொண்டு ஆங்கில நாவல் ஒன்றை அக்கு ளில் இடுக்கிக் கொண்டு, 'இன்று முழுவதும் படிப்புதான்' என்று வேர்க் கடலை பொட்டலமும், தண்ணீர் பாட்டி லுமாய் போய் உட்கார்ந்து, பாதி நாவலை முடித்துவிட்டு வெளியே காலாற சற்று நடக்கலாம்' என்று நடந்தபோது கோயிலின் இடப் பக்கமிருந்து ஒருவர் தோளைப் பிடித் துக்கொண்டு வந்தார். அருகே வந்து கையை எடுத்தார். தோள் முழுவதும் இரத்தம் வழிந்து கொண்டிருந்தது. வந்தவர் யாரென்று தெரியவில்லை. ஊருக்கு புதியவ ராய்த் தென்பட்டார்.

“என்னங்க, என்ன ஆச்சு?”- வலியப்போய் சதாசிவம் விசாரித்தான்.

“முள்ளு கீறிடுச்சுங்க!” அவர் சட்டையை விலக்கிக் காண்பித்தார்.

முள் குத்தி ஆறு அங்குலத்துக்கு இழுத்திருந்தது ரத் தம் இன்னும் பெருகியபடியே இருந்தது. வேட்டியை மடித்துக் கொண்டு சதாசிவம், குருக்கள் வீட்டுக்கு ஓடி னான். தன் னுடைய கர்ச்சீப்பையும், குருக்கள் வீட்டிலி ருந்த ஒரு பழத்துண்டையும் நீரில் நனைத்துக்கொண்டு திரும்பவும் ஓடி வந்தான். அவன் தோளில் அவற்றைப் போட்டு ஈரப்படுத்தி னான். மறுபடியும் வேறு வீட்டிற்கு ஓடிப்போய் சுண்ணாம்பு டப்பாவும் ஏதோ ஒரு களிம்பும் கொண்டு வந்தான். அவர் சட்டையைக் கழற்றி மறுபடி யும் ஈரத்தால் துடைத்துவிட்டு சுண்ணாம்பு வைத்து அப் பினான். அவர் அலறினார்.

“கட்டுப்படுத்திக் கொள்ளுங்கள். இது விஷ முள்.எனவே, சுண்ணாம்பு வைத்தால்தான் நல்லது” என்று சதாசிவம் ஆசுவாசப்படுத்தினான்.

ரத்தம் நின்று அவர் நிதானமாவதற்கு பதினைந்து நிமிடங்கள் ஆகின. குருக்களிடம் சைக்கிள் வாங்கி, கடைத் தெரு பக்கம் போய் ஒரு சொம்பில் காபி வாங்கி, ஒரு பொட்டலம் வெண்பொங்கல் வாங்கி அவற்றை அவருக்கு கொண்டு வந்து கொடுத்தான். வெண்பொங்கலும் காபியும் சாப்பிட்ட பிறகு அவருக்கு சற்று தெம்பு வந்தது.

“எனக்கு சர்க்கரை வியாதிப்பா, ரத்தம் செலவாச்சுன்னா வேகமா மயக்கம் வந்துடும். ஏதாவது சாப்பிட்டாதான் சரி யாகும். நான் சொல்லாமயே, டக்குன்னு போய் காபியும் பொங்கலும் வாங்கினு வந்தீங்களே... உங்களுக்கு எப்படி நன்றி சொல்றதுன்னே தெரியலைப்பா”- அவர் கைகூப்பினார்.

“சரி, எதுக்கு இலந்தைச்செடிப் பக்கம் போனீங்க, இவ்வளவு பெரிசா கிழிச்சிக்கிட்டீங்க?” சதாசிவம் சிரித்தபடி கேட்டான்.

“என் பேரு தியாகராஜன். நான் அரியலூர் ஆர்ட்ஸ் காலேஜ்ல சரித்திரப் பேராசிரியரா இருக்கேன். பிஹெச்.டி. செய்யறதுக்காக இந்த ஊரைச் தேர்ந்தெடுத்திருக்கேன். இந்த ஊரைப் பத்தி ஆராய்ச்சி செய்து கட்டுரை எழுதி டாக்டர் பட்டம் வாங்கணும்.”

“சரிங்க... நேர்வழி இப்படி இருக்கும்போது கோயிலுக்குப் பின்னாடி ஏன் போகணும்?”

“கோயிலுக்கு பின்னால் வெளிப்புறச் சுவர்ல நிறைய கல்வெட்டு இருக்குங்க. அந்த கல்வெட்டை படிக்கணும். வேற எங்கெல்லாம் கல்வெட்டு இருக்குன்னு பார்க்கணும். அதுக்காக போனேன். அதுவும் தவிர, இந்

தக் கோயிலைச் சுத்தி பெரிய ஊர் இருந்திருக்கணும். இப்ப ஊரு தள்ளிப்போச்சு

வேற எதனா தடயம் கிடைக்குதா, பழைய ஓடு, பானை கிடைக்குதான்னு பார்க்கறதுக்காகவும் வந்தேன்."

"ஏங்க இந்த ஊரைப்பத்தி எழுதறதுக்கு என்ன இருக்கு?" களிம்பு தடவியபடி குருக்கள் கேட்டார்.

"நல்லா கேட்டீங்க, ஆயிரம் வருஷதுக்கு முன்னாடி இதாங்க ஊரு. ரொம்ப முக்கியமான ஊரு. ராஜராஜ சோழனுடைய வம்சங்கள் முழுக்க இந்த இடத்தில்தான் இருந்திருக்கு."

"இது உடையார்குடிங்க. ராஜராஜனுக்கும் இதுக்கும் என்ன சம்பந்தம்?" - இப்பொழுது சதாசிவம் ஆவலாகக் கேட்டான்.

"உடையாருங்கறது ராஜராஜ சோழருடைய குலப்பெயர். அவருடைய வம்சாவளிகள் இங்கே பெரிய அரண் மனை கட்டி, வரிசை வரிசையா வீடு கட்டி ரொம்ப நல்லா வாழ்ந்திருக்கிறாங்க. ஏரியை சுத்தி நிலங்க ளாக்கி அதை உழுது பயிரிட்டு, நெல்லை தஞ்சாவூ ருக்கு அனுப்பிச்சிருக்காங்க. தஞ்சாவூரை விட உடை யார்குடி பெரிய நகரமா இருந்திருக்கு."

"அப்போ மெட்ராஸ்லாம் எப்படி இருந்தது?"

"வெறும் மணல்மேடு. குப்பம். செம்படவர்கள் குடிசைங்க மட்டுமே இருந்த இடம். கடல்லர்ந்து அந்தப் பக்கம் கொஞ்சம் தள்ளி மயிலாப்பூர்னு ஒரு சின்ன கிராமம் மட்டும் இருந்தது. மயிலாப்பூர் கிராமம் மாதிரி முப்பது மடங்கு பெரிசு இந்த உடையார்குடி."

"அடேயப்பா, இது அப்பேர்ப்பட்ட ஊரா இருந்ததா?"

"ஆமாங்க. அதுதவிர இந்த இடத்துல முக்கியமான ஒரு நிகழ்ச்சி நடந்திருக்கு."

"என்னாங்க அது?" - கேட்டுக்கொண்டே சதாசிவம் சொம்பில் மீதியிருந்த காபியை சுழற்றி ஆற்றிக்கொடுத் தான்.

மீண்டும் சிறிது காபியைப் பருகியதும் அவர் இன்னும் தெளிவானார். சிறிதாய் ஏப்பம் விட்டார். "அடேயப்பா. ரொம்ப நல்லயிடுச்சு போங்க" என்று கை கூப்பினார்.

"என்னமோ முக்கியமா விஷயம் நடந்ததுன்னீங்களே. அதச் சொல்லுங்க" - சதாசிவம் ஆவலாகக் கேட்டான்.

"நீங்க யாரு தம்பி?" தியாகராஜன் பதிலுக்குக் கேட்டார்.

"நான் இந்த ஊருதாங்க."

"என்ன வேலை செய்யறீங்க?"

"பி.பி.ஏ. முடிச்சுட்டு மெட்ராஸ்ல ஒரு இன்டீரியர் டெக் கரேட்டர் கிட்ட உதவியாளரா இருந்தேன். அவங்க ஒரு லேடி. வீட்டுக்குள்ள அலங்காரமா பொருள்கள் வைக்க றது, சுவர்லே வால்பேப்பர் ஒட்டறது இதெல்லாம் அழகா செஞ்சி தருவாங்க. அவங்ககிட்ட நான் நல்ல சம்ப ளத்துக்கு வேலை செஞ்சுகிட்டு இருந்தேன். திடீர்னு அவங்களுக்கு வெளிநாடு போகணும்னு ஆசை வந்தி டுச்சு அதனால இங்க இருந்த கம்பெனிய கலைச்சுட்டு வெளிநாட்டுக்குப் போயிட்டாங்க. எனக்கு வேற இடத் துலே வேலை கிடைக்கலே. அதனால இந்தப் பக்கம் வந்துட்டேன்."

"அதாவது தற்சமயம் வேலை ஒண்ணும் இல்லே."

"இப்போதைக்கு படிக்கறதுதான் வேலை. தினம் கையில இருக்கிற காசு கரையறவரைக்கும் புஸ்தகம் வாங்கறது, அதுங்களை கோயில்ல உக்காந்து படிக்க றது. படிச்சுட்டு திரும்பி வீட்டுக்குப் போறது. இதைத் தவிர வேற ஒண்ணும் பண்ண லீங்க."

“அப்போ ஒரு நாலஞ்சு நாள் எனக்கு உதவியா இருக்கீங்களா... என்னால முடிஞ்ச அளவுக்கு ஏதாவது தாம்

“அட, காசு எதுக்குங்க. உங்ககூட இருந்தா நிறைய தகவல் சொல்வீங்க இல்லையா... அது போதும். சரி, இங்க என்ன முக்கிய நிகழ்ச்சி நடந்தது, அதச் சொல்லுங்க முதல்ல?

“இந்த உடையார்குடியிலதான் ராஜராஜ சோழன், தன் அண்ணனான ஆதித்த கரிகாலனை வெட்டிக் கொன்ற ரவிதாஸன், அவனுடைய தம்பி சோமன், பரமேஸ்வரன் மற்ற அவங்க கூட்டத்தைச் சேர்ந்தவங்க எல்லாருக்கும் பெரிய தண்டனை கொடுத்து, அதை கல்வெட்டுல அடிக்கச் சொல்லி கிட்டத்தட்ட நாப்பது பேர் கொண்ட அந்த மொத்த குடும்பத்தையே ஊரைவிட்டு வெளியே துரத்திட்டான்.”

“அந்த கல்வெட்டு எங்கங்க இருக்கு?”

“இதோ கோயிலுக்கு நேர் பின்னாடி உள் பிராகாரத்துல லிங்கோத்பவர் சிலைக்கு கீழே குமுதம் அப்படின்னு ஒரு வளைவான கல்லுல செதுக்கி இருக்கு. 'துரோகிகளான ரவிதாஸன்' அப்படின்னு அதில தெள்ளத்தெளிவா எழுதி யிருக்கு. இந்த தண்டனை கொடுக்கறதுக்கு ராஜராஜன் நேராகூட வரலை. ஒரு ஸ்ரீமுகம் அனுப்பிச்சிருக்கான். ஸ்ரீமுகம்னா அரசாங்க ஆர்டர். அந்த ஆர்டரை வெச்சு இந்தக் கோயில் வாசல்ல பல பெரியவர்கள் ஒண்ணா சேர்ந்து அந்த ரவிதாஸன் குடும்பத்தை ஊரை விட்டே துரத்தியிருக்காங்க. இது எத்தனை வருஷம் நடந்த விசாரணை தெரியுமா... பதினாறு வருஷம். மதுராந்தகர் ஆட்சியில இருக்கற வரைக்கும் ரவிதாஸனை யாரும் ஒண்ணும் பண்ணல. ஆனா, ராஜ ராஜ சோழன் பதவியேத்ததுக்கப்புறம்டக்குன்னு தண்டனையை கொண்ணாந்துட்டான். நான் அதைப்

பத்திதான் ரொம்ப ஆவலா ஆராய்ச்சி பண்ணிக்கிட்டி ருக்கேன்."

"நான் கல்கி எழுதின 'பொன்னியின் செல்வன்' படிச் சிருக்கங்க. அதனால நீங்க சொல்றதெல்லாம் எனக்கு நல்லா புரியுது. உங்களுக்கு என்ன உதவி வேணும்னு சொல்லுங்க?"

"இங்க பின்னாடி இருக்கிற முள் செடியெல்லாம் கொஞ்சம் விலக்கி எடுத்து கல்வெட்டுகள்லாம் தெரி யும்படி பண்ணணும். சில கல்வெட்டுகள்லாம் சுண் ணாம்பு அடிச்சு வெச்சி இருக்காங்க. அந்த சுண்ணாம் பைப் போக்கறதுக்கு கொஞ்சம் ஆசிட் வேணும். கம்பி பிரஷ் வேணும். கந்தைத் துணி வேணும். வைக்கோல் வேணும்."

தியாகராஜனும், சதாசிவமும் நண்பர்களானார்கள். அங் குலம் அங்குலமாக அவர் கோயிலை ஆராய்ந்தார். பல் வேறு சிற்பங்களுக்கு விளக்கம் சொன்னார்.

"மதுராந்தகர் பதவியேறினவுடனே, பழையாறையி லேயோ, தஞ்சாவூரிலேயே ராஜராஜன் இல்ல. நகர்ந்து உடையார்குடிக்கு வந்துட்டான். ஏன்னா, உடையார்கு டியில தான் அவனுடைய முன்னோர்கள் இருந்தாங்க. அது நல்ல நகரமாகவும் இருந்தது. தஞ்சாவூருக்கு வடக்கு எல்லையாவும் இருந்தது. அதனால உடையார் குடியில் வந்து செட்டிலா யிட்டாங்க. இங்கதான் ராஜேந் திர சோழனும் பிறந்திருக்கணும். அதனாலதான் உடை யார்குடிக்கு கிட்டயே, 'ராஜேந்திர சோழன் அகம்' அப்ப டின்னு ஒரு நல்ல ஊர் இருக்கு."

அவர் பேசுவதையே சதாசிவம் வாய்பிளந்து கேட்டுக் கொண்டிருந்தான். அவருக்கு உதவியாய் புதர்களை வெட்டினான். கல்வெட்டுகள் தெரியும்படியாய் கம்பி பிரஷ்ஷால் சுரண்டிக் கொடுத்தான். கல்வெட்டுகளை

சுத்தமாக அமிலம் கலந்த தண்ணீரை மேலே ஊற்றிக் கழுவினான்.

தியாகராஜன் கல்வெட்டுகளை ஒரு வாரப் பத்தி ரிகை படிப்பதுபோல மிக வேகமாய் எளிதாய் படித்துக் கொண்டு போனார். அவர் படிக்க படிக்க அவன் எழுதிக் கொண்டான்.

“பேராசிரியர் அய்யா, எங்க தங்கியிருக்கீங்க?” சதாசிவம் ஆவலாகக் கேட்டான். தன் வீட்டிற்கு கூட்டிக் கொண்டு போகலாமா என்று யோசித்தான்.

“இங்க என் நண்பர் ஒருத்தர் இருக்காரு. அவர் வீட்ல தான் தங்கியிருக்கேன்.” தியாகராஜன் சொன்னார்.

சதாசிவம், தியாகராஜனோடு நடந்து அவர் தங்கியிருக் கும் வீட்டிற்குப் போய், அவருக்காக வாங்கிய உபகர ணங்களை அந்த வீட்டில் வைத்துவிட்டு நிமிரும்போது தான் அந்த தேவதை எதிர்ப்பட்டாள். “யாருங்க என்ன வேணும்” என்று வேகமாகக் கேட்டாள்.

“ஒண்ணும் வேணாங்க” என்று சதாசிவம் பதில் சொன் னான்.

“ஒண்ணும் வேணான்னா இந்த ரூம்ல ஏன் நின்னு கிட் டிருக்கீங்க.” அவள் கலவரத்தோடு அவனைப் பார்த் தாள்.

“நிக்க சொன்னாங்க. நின்னுட்டிருக்கேன்” - இங்கே சதாசிவம் அவளை சாதாரணமாகப் பார்த்தான். அவன் மனம் முழுவதும் ரவிதாஸனோடும், ராஜராஜ சோழ னோடும், குந்தவையோடும், வந்தியத் தேவனோடும் பின்னிப் பிணைந்திருந்தது. நாளைக்கு அடுத்த பக்க கல்வெட்டும் படித்துவிட வேண்டும் என்ற ஆவல் அவ னுக்குள்ளும் அதிகரித்தது.

“அப்பா... யாரோ வீட்டில வந்த நின்னுக்கிட்டு வம்பு பண்றாங்க பாரேன்.” அந்தப் பெண் உரக்கக் கத்தினாள்.

அப்படி அவள் போட்ட கூச்சலுக்குப் பிறகுதான் சதாசிவம் சுய நினைவுக்கு வந்தான்.

“ஏங்க, நான் உங்களுக்கு தெரிஞ்சவரோட வந்திருக்கேன். நீங்க என்ன என்னைப் பார்த்து கத்தறீங்க?”

“வேற யாரு எங்களுக்கு தெரிஞ்சவரு?”

“தியாகராஜன்.”

“யாரு அது தியாகராஜன். அப்படி யாரும் இங்க கிடையாதே.'

“இல்லீங்க. உங்க வீட்டுக்கு வந்திருக்காரே பேராசிரியர்...”

“என்ன சொல்றீங்க. அப்பா இங்க வாயேன். யாரோ வந்து வம்பு பண்றாங்க பாரு.”

ஒரு ஆளைப் பார்த்தால் அவன் 'நல்லவனா,கெட்டவனா' என்று தெரிய வேண்டாம். கேட்ட கேள்விக்கு பதில் சொல்லிக் கொண்டிருக்கிறபோதே உதவிக்கு ஆள் கூப்பிடுவதும், எதிரே இருப்பவரை அலட்சியமாக நடத்துவதும், சந்தேகப்பட்டு கேவலப்படுத்துவதும் எல்லா பெண்களும் செய்யக் கூடிய காரியமில்லை. அறிவில்லாத, சூட்சுமமில்லாத தத்தி யான பெண்கள்தான். இப்படிக் கூச்சல் போடுவார்கள். சதாசிவம் மனதில் நினைத்துக் கொண்டிருந்த வார்த்தைகள், அவன் அனுமதியின்றி தத்தி தவறி வெளியே வந்துவிட்டன.

“சரியான தத்தியா இருக்கு.”

அவனுள் எழுந்த கோபம் முழு வாக்கியமாகித் தரையில் இறைபட்டது.

துர்காதேவி கடுங்கோபத்தோடு சதாசிவத்தைப் பார்த்தாள்.

“யாரைப் பார்த்துடா தத்தின்றே” என்று உரத்த குரலில் அதட்டினாள்.

அந்த அதட்டலையும், முறைப்பையும் பார்த்து சதாசிவம் திடுக்கிட்டுப் போனான் ‘ஏன் பேராசிரியர் இவ்வளவு மோசமான ஒரு இடத்தில் தங்கியிருக்கிறார். இந்த ஊரில் பல லாட்ஜுகள் இருக்கின்றன. இவர் மாதிரியான முக்கியஸ்தர்கள் வந்து உதவி கேட்டால் செய்வதற்கு பெரிய மனிதர்கள் இருக்கிறார்கள். எல்லாம் விட்டு விட்டு ஒரு அடாவடித்தனமான ஆட்கள் நிறைந்த ஒரு இடத்தில் போராசிரியர் ஏன் தங்க வேண்டும். இப்படிப் பட்ட இடத்தில் பேராசிரியருக்கு என்ன மதிப்பு கிடைக்கும். வெறுமே வாசலில் நிற்கும்போதே 'வாடா, போடா' என்று பேசுகிற பெண். வீட்டுக்கு விருந்தாளியாகி வந்திருக்கிற ஒரு பெரிய மனிதரை என்னதான் சொல்ல மாட்டாள். இது ஒரு இரண்டுங்கெட்டான் குடும்பம்' என்று சதாசிவம் வேகமாக யோசித்தான்.

“இதப்பாருங்க. அடா, புடான்னா எனக்கு கெட்ட கோபம் வரும்.”

“நீ என்னை தத்தின்னு சொன்னே இல்ல.”

“நான் உங்களைச் சொல்லலை.”

“இங்க நின்னு என்னைப் பார்த்து சொல்லிட்டு உங்களைச் சொல்லலைன்னா... என்னடா நினைச்சிகிட்டு இருக்கே.”

மறுபடியும் ஒரு 'டா' எகிறி தரையில் விழுந்து துள்ளிக் குதித்தது. இங்கே நிற்பதே நல்லதில்லை என்று நினைத்து சதாசிவம் திரும்ப எண்ணினான்.

“இருங்க தம்பி! இதோ வந்துட்டேன்” - உள்ளிருந்து பேராசிரியர் தியாகராஜன் குரல் கேட்டது.

“அவர் என்னைத்தான் சொல்றாரு.” சதாசிவம், துர்கா தேவியிடம் சொன்னான்.

“அது எனக்கு எப்படித் தெரியும். அவர் கூப்பிடுறதா இருந்தா தெருவுக்கு வந்து கூப்பிடுவாரு. நீங்க தெருவா சல்ல போய் நில்லுங்க” என்று அவள் மறுபடியும் மிரட்டி னாள்.

அவன் வாசலுக்குப் போனானன். அவன் வாசலுக்குப் போன நேரத்தில துர்காதேவியின் அப்பாவும், பேராசிரி யர் தியாகராஜனும் வெளியே வந்தார்கள்.

“இவர்தாங்க. இந்த புள்ளைதான் ரொம்ப நல்லா கூட இருந்து ஹெல்ப் பண்ணாரு.”

“இவரா, நல்லா தெரியுமே எனக்கு.” -துர்காதேவியின் அப்பா உரத்த குரலில் அவனை அடையாளம் தெரிந்து கொண்டதாய் கூறினார்.

காட்டுமன்னார்கோயில் சிறிய ஊர். பத்து முறை குறுக்கே, நெடுக்கே நடந்தால் அந்த ஊரின் பாதிமக் களை எளிதில் பார்த்து விடலாம். ஒரு மாதம் வாழ்ந்தால் அங்குள்ள எல்லோருக்கும் அறிமுகமாகிவிடலாம். ஒரு வருடம் அந்த ஊரில் இருந்தால், அப்படி இருப்பவரு டைய வாழ்க்கைச் சரித்திரம் முழுவதும் காட்டுமன்னார் கோயிலிலுள்ள எல்லோ ருக்கும் நிச்சயமாகத் தெரிந்தி ருக்கும். ஆனால், பெயர் மட்டும் தெரிந்திருக்க வாய்ப்பி ருக்காது. நின்று பேசுகிற சந்தர்ப்பம் ஏற்பட்டிருக்காது.

காட்டுமன்னார்கோவில் போன்ற சிறிய ஊர்களில் இருப்பவர்கள் அதிகம் அரசியல் ஈடுபாடு கொண்ட வர்களாகவே இருக்கிறார்கள். ஏதேனும் ஒரு கட்சி யைச் சார்ந்தவர்களாகத்தான் தன்னை இனம் காட்டிக்

கொள்கிறார்கள். 'நான் எந்தக் கட்சியும் இல்லை' என்று சொல்வதற்கு அங்குள்ள பலருக்கு முடிவதில்லை. வெகுசிலரே நடுநிலை வகிக்கிற திறனும், குணமும் உள்ளவர்களாக இருக்கிறார்கள்.

சதாசிவம் இரட்டைக்கரை வேட்டி கட்சிக்கு அங்கத்தின ராகவும், பகுதிநேர உழைப்பாளித் தொண்டனாகவும் இருந்தான். அவர், துர்காதேவியின் அப்பா, மூன்று கரை கட்சிக்கு முழுநேரத் தொண்டராக இருந்தார். தலைவர் கள் வருவதற்கு முன்பு 'மைக்' பிடித்து பேசுகின்ற கட்சி ஆள் அவர் என்று ஊரில் பல பேருக்குத் தெரியும். அம் மாதிரி மைக்கில் பேசிப் பேசி எல்லா இடத்திலும் சுமா ராகப் பேசுகின்ற ஒரு தன்மை துர்காதேவியின் தகப்ப னுக்கு இருந்தது.

இவர் மாதிரி பெருந்தலைவர்கள் வருவதற்குமுன் பேசு கின்ற சிறிய தலைவர்கள் பெரிய பிரச்னைகளைத் தொடாமல் ஊரிலுள்ள சிறிய பிரச்னைகளை தொட்டு ஊரிலுள்ள எதிர்க்கட்சி அங்கத்தினர்களைத் தொட்டு சில விஷயங்கள் பேசுவார்கள். அவர்களை வம்புக்கு இழுப்பார்கள். “நேற்று நடந்த எதிர்க்கட்சி கூட்டத்திலே ஒரு எருமை பேசிற்று” என்று எதிர்க்கட்சியைத் தாக்க ஆரம்பிப்பார்கள். சிலசமயம் மிக மோசமான வார்த் தைகளால் அர்ச்சனை செய்வார்கள். மைக்கில் பேசுகி றோம் என்பதை மறந்துவிட்டு கெட்ட வார்த்தைகளை இறைப்பார்கள்.

துர்காதேவியின் தகப்பன் அப்படி கெட்ட வார்த்தைகள் பேசுகிற ஆள் இல்லையெனினும், உள்ளூர் விவகாரங் களை மைக்கில் பேசி கடும் எதிர்ப்பைச் சம்பாதித்துக் கொண்டவர்.

“நான் எழுதித் தருகிறேன். நமது எதிர்க்கட்சித் தொண் டர்கள், அவர்கள் ஆளுங்கட்சியாக இருப்பதால் இந்த

ஊருக்கு செய்கின்ற ஒவ்வொரு நல்ல காரியத்தையும் காசு வாங்கிக்கொண்டுதான் செய்கிறார்கள். சொந்த ஊருக்கு நன்மை செய்வதில்கூட ஊழல் செய்கின்ற ஒரு நரித்தனத்தை, ஒரு நாய்த்தனத்தை ஒரு கேவலமான செய்கையை எதிர்க்கட்சியினர்கள் செய்து கொண்டி ருக்கிறார்கள். நான் கேட்கிறேன். எத்தனை நாள் நீ ஆட்சி செய்வாய். எத்தனை நாள் இந்தப் பதவியில் நீடித்திருப்பாய். உன்னை ஜனங்கள் தூக்கி அடித்தார் களே. மறந்து போனாயா... இந்த ஊரில் உனக்கு டெபா சிட் போயிற்றே... ஞாபகமிருக்கிறதா?" என்றெல்லாம் ஒரு முறை பேச, பேச்சுக்கு நடுவிலேயே எதிர்ப்புக் குரல் வந்து விட்டது.

"இது பனங்காட்டு நரி. இம்மாதிரி சலசலப்புக் கெல்லாம் அஞ்சாது. நான் காட்டுமன்னார் தலைமையிலேயே பரணி பாடியவன்" என்று மீண்டும் அவர் சம்பந்தமில்லா மல் ஏதோ சொல்ல, கோபக்குரல்கள் இன்னும் அதிக மாயின.

"யார்ரா அங்கு குரல் கொடுக்கறவ. வந்து எதிர்க்க நில் லுடா பார்க்கலாம். அடிச்சி பின்னிடுவேன்" என்று அவர் மைக்கிலே கத்த, மேடைநோக்கி கற்கள் விழுந்தன.

"சொட்டை கோபால் கல்லடிக்கிறான். அவனைப் பிடிச்சி கொல்லுங்கடா" என்று மைக்கிலேயே அவர் வேகமாகப் பேச, அவர் கட்சி ஆட்கள் அந்த குறிப்பிட்ட நபரை நோக்கி வேகமாக ஓட, அவனும் அவன் ஆட் களும் கம்பு, கட்டைகளோடு அடிக்க வந்தவர்களை எதிர்த்துப் போராட, அங்கு ரகளை துவங்கியது.

அடுத்து பத்து நிமிடத்தில் மேடை பிய்க்கப்பட்டது. மைக்குகள் உடைக்கப்பட்டன. ஒலிபெருக்கிகள் கீழே போட்டு மிதிக்கப்பட்டன. துர்காதேவியின் தகப்பனார் தாக்கப்பட்டார். ஊரிலுள்ள எல்லா ஆண்களும் எதி

ரும்புதிருமாய் நின்று மொத்துமொத்தென்று அடித்துக் கொள்வதால் பெண்கள் களமிறங்கினார்கள். அடித்துக் கொள்பவர்களுக்கு நடுவே கையில் உருளைக்கட்டை களுடன் போய் இரண்டு பக்கமும் அடித்தார்கள்.

எல்லா ரகளையும் ஓய்ந்தபிறகு ஆறு லாரி போலீஸ் வந்தது. "யாருக்கெல்லாம் காயம் பட்டிருக்கு?" என்று ஒரு இன்ஸ்பெக்டர் கேட்டுக்கொண்டு வந்தார். மிகப் பலமான காயம்பட்டவர்கள், வீட்டிற்குள் பதுங்கிக் கொண்டார்கள். லேசாய் காயம் பட்டவர்கள், "ஒண்ணும் இல்லையே. நல்லா தானே இருக்கோம்" என்றார்கள். "என்னமோ சண்டை, ரகளைன்னாங்க..." என்று வந்த அதிகாரி கேட்டபோது, ஊரிலுள்ள எவரும் வாய் திறக் கவில்லை. அவராகவே ஊருக்கு இளைத்த சில ஆட் களை கைது செய்ய முயன்றபோது ஊர் மக்கள் ஒன்று கூடி தடுத்து விட்டார்கள்.

"ஏதோ வாக்குவாதம் நடந்திருச்சு. ஒருத்தரை ஒருத் தர் திட்டிக்கிட்டாங்களே தவிர, கலவரம்லாம் ஒண் ணும் நடக்கலைங்க. உங்களுக்கு யாரோ தவறா தகவல் சொல்லியிருக்காங்க" என்று அடித்துக் கூறி விட்டார் கள்.

ஒரு நாள் முழுவதும் அந்த ஊரில் போலீஸ் நின்று டீக் கடைகளிலும், வீடுகளிலும் காபி, டீ குடித்துவிட்டு வில கிப் போயிற்று.

"எனக்கு நல்லா தெரியும். இந்த ஊரில் ரெண்டு கட்சி ஆளுங்க இருக்கீங்க. ரெண்டு கட்சிக்காரங்க ளும் பிரிஞ்சி பொக்கு பொக்குன்னு அடிச்சிக்கிட்டீங்க. லேடீஸ் சண்டை போட்டாங்க. அத்தினியும் தெரியும். மறு தடவை உங்க ஊர்லர்ந்து கலவரம்னு போன் வந் துதுனா, நாங்க நாலு நாள் கழிச்சிதான் வருவோம். உங்க இஷ்டத்துக்கு நீங்க அடிச் சிக்கறதும், போலீஸ்

காரன் வந்தா, ஒண்ணும் இல்லைன்னு சொல்லி திருப்பி அனுப்பறதும்... விளையாடறீங்களாடா" என்று போலீஸ் அதிகாரிகத்தி சத்தம் போட, ஊர்ப் பெண்கள் அவர்களைச் சமாதானப்படுத்தி அனுப்பினார்கள்.

கட்சித் தகராறு இருந்தபோதும், கைகலப்பு நடந்தபோதும் ஒருவரை ஒருவர் போலீஸில் காட்டிக் கொடுக்காத தன்மைதான் மிகப்பெருமையாய் அந்த ஊரில் பேசப்பட்டது.

"ரெண்டு கரை வேட்டி செயலாளருக்கு கை ஒடிஞ்சிடிச்சி. எங்க தெரியுமா இருந்தான். சொன்ன நம்ப மாட்டே. மூணு கரைக்காரன் வீட்டில் இருந்தான். மூணு கரைக்காரன் வீடு ஊர் எல்லையிலே இருக்கு. அங்க வண்டியிலே போற போது, எதிர்ல போலீஸு. போலீஸு பார்த்தா மடக்கி, 'எங்கே போற, என்னன்னு கேட்டு கைது பண்ணிடுமேன்னு பயந்து சட்டுன்னு மூணு கரைக்காரன் வீட்டுக் கொல்லைப்பக்கம் போயிட்டான். 'ஏன் கொல்லைப்பக்கம் நிக்கறீங்க, வந்து உள்ள உக்காருங்க'ன்னு மூணு கரைக்காரன் அவனை உள்ள உக்கார வச்சி கைக்கு தென்னைமரக்குடி எண்ணெய் தடவி, குடிக்கறதுக்கு கஞ்சி குடுத்து அங்கேயே தலைகாணி, பாய் போட்டு படுக்க வைச்சிருக்கான். போலீஸு போன பிறகுதான் இரட்டைக்கரைக்காரன் ஆஸ்பத்திரிக்கே போனான்.

எனக்கு நம்ம ஊர்ல பிடிச்சதே இந்த ஒத்துமைதான். மனுஷாள்னா அரசியல் இருக்கத்தான் செய்யும். அரசியல் இருக்கறதுதான் அழகு. ஏதோ ஒரு கட்சியா, எதிரெதிரா நாம இருந்தாலும், அதே சமயம், நம்ம சண்டையை நமக்குள்ளே வைச்சிக்கிட்டு, நம்ம ஊர் ஆளுங்களை போலீஸ்காரங்க கிட்ட காட்டிக் கொடுக்காம இருக்கோம் பார், அதான் பெருந்தன்மை" என்று ஒரே விஷ

யத்தை ஊர் பல்வேறு வார்த்தை களில் திரும்பத் திரும்ப பேசிக்கொண்டிருந்தது.

அரசியல் கட்சி ஆளாய் ஒருவன் இருக்க வேண்டும் என்பதும், எதிரெதிரே நின்று சண்டையிட்டுக் கொள்ள வேண்டும் என்பதும், சண்டை முற்றி கைகலப்புக்குப் போனால் அடித்துக்கொள்ள வேண்டும் என்பதும் அப் படி அடித்துக் கொண்டாலும் எவரும் யாரையும் காட் டிக் கொடுக்கக்கூடாது என்ற வித்தையும் வெகுநாள் கழித்து ஊருக்கு வந்த சதா சிவத்துக்கு வினோதமாக இருந்தது.

"இதற்கு பேசிக்கொள்ளாமல், அடித்துக் கொள்ளா மல் இருந்து விடலாமே" என்று கேட்டதற்கு "அப்போ எதுக்கு அரசியல் கட்சியிலே இருக்கறது. எதிராள் ஒண்ணு சொன்னா, நாம ஒண்ணு சொல்வோம். நாம ஒண்ணு சொன்னா அவன் ஒண்ணு சொல்வான். உச்ச கட்டத்துக்குப் போனா அடிதடி, ரகளை வரத்தான் செய் யும். அதுக்காக எங்கேர்ந்தோ வர ஆள்கிட்ட நம்மாளை காட்டிக் கொடுக்கறதா... அது தப்பு" என்று மறுபடியும் விளக்கிச் சொன்னார்கள்.

சதாசிவத்திற்கு இந்த நியாயம் புரியவே இல்லை. இது ஒற்றுமையா வேற்றுமையா அல்லது ஒற்றுமையில் வேற்று மையா' என்று சிறிதும் விளங்கவில்லை.

இப்படிப்பட்ட நியாய குணங்களைக் கொண்ட துர்கா தேவியின் தகப்பனாரைப் பார்த்து அவன் கைகூப்பி னான்.

"தெரியுங்க. இவர் இரட்டைக்கரை வேட்டி ஆளு" என்று அவர் சதாசிவத்தைப் பார்த்து சொல்ல, பேராசிரியர் தியாகராஜன் விழித்தார். அவருக்கு ஊரின் கட்சி நிலவ ரங்கள் விளக்கப்பட்டன.

"ஆனா, தம்பி சண்டைக்கெல்லாம் வரமாட்டாப் போல. நாம பேசினாலும் எதிர்த்துப் பேச மாட்டார் போல. அவரு அவர் கட்சிக்கொள்கையிலே பிடிப்பா இருப்பாரே தவிர, எதிர்க்கட்சிக்காரங்களை ஒண்ணும் குறை சொல்ல மாட்டார் போல" என்று சதாசிவம் பற்றி சகலமும் தெரிந்ததாய் துர்காதேவியின் தகப்பன் சொல்ல, பேராசிரியர் தியாகராஜன் வியப்போடு கேட்டுக்கொண்டிருந்தார்.

"சரி, நீ எதுக்கும்மா கூச்சல் போட்டே" என்று துர்கா தேவியின் தகப்பன் கேட்க, அவள் சதாசிவத்தை நோக்கி கைகாட்டினாள்.

"இங்க வந்து நிக்கிறாங்கப்பா. என்ன, ஏதுன்னு கேட் டாக்க, என்னமோ சொல்றாங்க."

"இவரு பத்தி நான் உனக்கு சொல்லலையா?" தகப்ப னார் பேராசிரியரைக் காட்டினார்.

"தெரியலையே யாருன்னு."

"இவரு பேராசிரியரு தியாகராஜன். கல்வெட்டு ஆராய்ச்சி பண்றதுக்காக நம்ம ஊருக்கு வந்திருக்காரு. சின்ன வயசுல இருந்தே எனக்கு இவரைத் தெரியும். ஒரு வகையில் ரொம்ப தூரத்து சொந்தம். நம்ம பங்காளின்னு வைச்சுக்கயேன்" என்று அவர் விளக்கம் கொடுத்தார்.

"அதைச் சொல்ல வேண்டியதுதானே... எனக்கு என்ன தெரியும். அவர் பங்காளின்னு" - துர்காதேவி சொல்லி விட்டு பேசாது நின்றாள்.

"ஒண்ணும் தெரியாது. தத்தி" என்று சதாசிவம் மெல்லிய குரலில் சற்று கோபமாகக் கூற, துர்காதேவியின் முகத்தில் ஆத்திரம் பொங்கியது. அவன் அவளை அதட்டிப் பேசியது கண்டு தியாகராஜன் திடுக்கிட்டார்.

"ஏன் தம்பி... கோவமா பேசறீங்க."

"பின்னே என்னங்க. உங்களை தேடிக்கிட்டு இங்க வந்து நின்னா, 'யார் நீ, எங்கேர்ந்து வர்றே. ஏன் இங்கே நிக்கிறே, அப்பா இங்கே பாருங்க யாரோ வீட்டுக்குள்ளே வந்து நிக்கி றாங்க' அப்படின்னு கத்துனா என்ன அர்த்தம்? பேசிக்கிட்டு இருக்கும்போது உங்களுக்கு குரல் கொடுத்து, 'அப்பா யாரோ வந்து வம்பு பண்றாங்க' அப்படின்றாங்க. இப்படியா ஒரு வளர்ந்த பொண்ணு பேசறது..."

"இன்னாரைத் தேடிக்கிட்டு வந்திருக்கேன். இதுக்காக வந்திருக்கேன்னு சொல்ல வேண்டியதுதானே... கூடத்தில் நின்னு மோட்டு வளையையே பார்த்துக்கிட்டிருந்தா... இப்படித்தான் போன வாரம் மீட்டர் ரீடிங் பார்க்கறேன்னு ஒருத்தன் வந்தான். உள்ளே வரச்சொல்லி வராண்டாவுல மீட்டர் இருந்த இடத்தைக் காட்டிட்டு ரூமுக்குள்ளே போனேன். திரும்பி வந்த பார்த்தா ஆளையும் காணோம். எங்க தேடியும் கிடைக்கல. அவன் இது மாதிரி பதினேழு வீட்டிலே திருடியிருக்கான். எல்லாரும் ஒட்டுமொத்தமாய் போய் போலீஸ்ல புகார் கொடுத்ததுக்கு, அதை யாரு பண்றதுன்னு தெரியும். அவனை கைது பண்ணிடலாம். ஆனா, சைக்கிள் திரும்ப கிடைக்காது' அப்படின்னு சொல்லிட்டாங்க."

துர்காதேவி பேசிக்கொண்டே போனாள். தியாகராஜன் அவளை இடைமறித்தார்.

"அம்மா... கொஞ்சம் இருங்க. இந்த தம்பியை நான் இங்கதான் பார்த்தேன். இந்த ஊர் கோயில்லதான் சந்திச்சேன். வழக்கமா எந்த ஊருக்கு நான் கல்வெட்டு ஆராய்ச்சி பண்ண போனாலும் அந்த ஊர்ல இருக்கிற ஜனங்க விலகிநின்னு வேடிக்கை பார்ப்பாங்களே தவிர, தானா முன்வந்து உதவி செய்யறவங்க ரொம்ப கம்மி. இந்த தம்பி ரொம்ப ஆர்வமா தானா முன்வந்து உதவி

செஞ்சது மட்டுமில்லாம, தானும் கல்வெட்டுல இருக்கிற விஷயங்களைத் தெரிஞ்சிக்கணும்னு ஆசைப்பட்டாரு.

ஆனா, நான் இதுக்கு முன்னாடி சந்திச்ச ஆளுங்கல்லாம் அப்படி இல்ல. ஒரு ஊர்ல கம்பி பிரஷ்ஷும், சுண்ணாம்பும் வாங்கித் தரேன்னு காசு வாங்கிட்டுப் போனவன், சாராயம் குடிச்சிட்டு திரும்பி வந்து என்னை சிலை திருடன்னு சொன்னான். அப்புறம் ஊருக்கு உண்மையை விளக்கி சமாதானப்படுத்தறதுக்குள்ளே எனக்கு போதும் போதும்னு ஆயிடிச்சி.

இந்த தம்பியைப் பார்த்தவுடனேயே எனக்கு ரொம்ப பிடிச்சுப்போச்சு. அவரும் எனக்கு ரொம்ப நல்லா உதவி செஞ்சாரு. நான்தான் அவரை இந்த வீட்டுக்கு வரச் சொன் னேன். இவரு உங்களுக்குப் பிடிக்காத ஆளா?" என்று தியாகராஜன் பதட்டமாகப் பேசி பயத்தோடு வின வினார்.

"அப்படியெல்லாம் இல்லீங்க. அவர் இரட்டைக்கரை கட்சி. அவ்வளவுதான்" என்று துர்காதேவியின் அப்பா சமாதானமாகச் சொன்னார்.

"இரட்டைக்கரைக் கட்சின்னா... அவரோட பேச மாட்டீங்களா?"

"அப்படில்லாம் ஒண்ணும் இல்லீங்க. ஜாஸ்தி வெச்சுக்கமாட்டோம். தள்ளி தள்ளி நிப்போம்."

"ஏங்க அரசியல்தானே... இதில் தள்ளி தள்ளி நிப்பானேன். மனுஷாளுக்கு மனுஷாள் வணக்கம் சொல்லக் கூடாதா... உள்ள வாங்கன்னு சொல்லக் கூடாதா..."

"சமீபமா இந்த தெருவுல ஒரு நாலைஞ்சு வீட்டில திருட்டுப்போயிடுச்சிங்க. குறிப்பா சைக்கிளைத் திருடற அந்த கும்பல் நம் வீட்டு சைக்கிளையும் எடுத்துட்டுப் போயிடுச்சி. இத்தினிக்கும் நாங்க ரொம்ப ஜாக்கி

ரதையா இருப்போம். வீட்டை பூட்டி பூட்டி வெச்சுக்கு வோம். போலீஸைக் கேட்டா, 'திருடனை பிடிச்சுடலாம். ஆனா, சைக்கிள் கிடைக்காது.' அப்படின்னுட்டாங்க. ரொம்ப வருத்தமா போயிடிச்சு. நடக்கறது அராஜக மான ஆட்சியா, அதனால அராஜகமான ஆளுங்கதான் போலீஸ்காரங்களா இருக்காங்க." பேசிக் கொண்டிருக் கும்போதே துர்காதேவியின் அப்பா பேச்சில் அரசியலை நுழைத்தார்.

"இதப்பாருங்க. நீங்க பொறுப்பில்லாம இருந்துட்டு போலீஸ்காரங்களை குற்றம் சொல்லாதீங்க. உங்க சைக்கிளை யாரு திருடுன்னது... போலீஸ்காரங்களுக் குத் தெரிஞ்சா கேட்டுன்னு வந்து சொல்லுங்க. வாங்கித் தர வேண்டியது என் பொறுப்பு."

சட்டென்று ஒரு பெரிய வார்த்தையை சதாசிவம், துர்கா தேவியின் வீட்டில் இறைத்தான். அந்த வீடு திகைத்து நின்றது.

"போய் கேட்டுக்கிட்டு வாங்கப்பா. இவரு வாங்கித் தர் றாரா பார்க்கலாம்." துர்காதேவி குரல் கொடுத்தாள். அவள் குரலில் ஏளனம் இருந்தது.

"ஏங்க வாங்கித் தர முடியாதுன்னு நெனைக்கிறீங்களா?" சதாசிவம் கேட்டான்.

"நான் அப்படிச் சொல்லலை. எடுத்தவங்க உங்க சொந் தக்காரரா இருக்கலாம். உங்களுக்கு தெரிஞ்சவங்களா இருக்கலாம்.'

"இதோடா... ஐயோ பாவம்னாகூட ஆறு மாசத்து பாவம் சேர்ந்து வருது."

"ஏங்க என்ன பேச்சு இது... இங்க வந்த ஒரு நண்பர் உங் களுக்கு சைக்கிளைத் திரும்பி வாங்கித் தரேன்றாரு.

'சரி வாங்கிக் கொடுங்க'ன்னு சொல்றதை விட்டுட்டு ஏன் துடுக்குத் தனமா பேசறீங்க, தேவையில்லாம்..."

பேராசிரியர் தியாகராஜன் அலுத்துக்கொள்ள, அலுத்துக் கொண்டது வீட்டுக்கு வந்த விருந்தாளி என்பதால், அதுவும் பங்காளி என்பதால் வீட்டுக்காரருக்கு லேசாய் கோபம் வந்தது. அவர் தன் மகளை முறைத்துப் பார்த்தார்.

"ஏய்! உள்ள போ. இன்னார் வந்திருக்காங்கன்னு சொல் விட்ட இல்லே. நான் விசாரிச்சுக்கிறேன். ஏன் இங்கே நின்னு குறுக்க குறுக்க பேசிக்கினு இருக்கே. உள்ளே போ." அவர் துர்காதேவியைத் துரத்த, உள்ளே ஓடினாள்.

"ஏங்க சைக்கிள் திரும்பி கிடைக்குமா... விவரமெல்லாம் போலீஸ் ஸ்டேஷன்ல எழுதி கொடுத்திருக்கேன்."

"என்கிட்டயும் குடுங்க."

சதாசிவம் சைக்கிளின் நம்பர், நிறம், தயாரிப்பு விவரம் எல்லாம் வாங்கிக் கொண்டான்.

"இன்னும் இரண்டு நாள்ல சைக்கிள் உங்க கைக்கு வரும்."

"ஏங்க அவ்ளோ சுலபமா அது." தியாகராஜன் வியப்போடு கேட்டார்.

"போலீஸ்காரனை கொஞ்சம் மிரட்டினாதாங்க இது சரியா வரும்."

"என்ன சொல்றீங்க?"

"போலீஸ்காரங்களோட சண்டை போட்டா இந்த விஷயம் எளிதா முடிஞ்சிடும்."

"போலீஸ்காரங்களோட நீங்க சண்டை போட முடியுமா?"

“நாம ஒரு கட்சியில இருக்கோங்க. அந்த கட்சி பேரை சொல்லி, நமக்குத் தெரிஞ்சவங்க வண்டி தொலைஞ்சு போச்சுன்னு சொல்லி, அதை கண்டுபிடிக்கலைன்னா, உன்னைஎங்க கொண்டுபோய் நிறுத்துவேன் தெரியு மான்னு போலீஸை பயமுறுத்தினா, பதினாறு, பதினேழு சைக்கிள்லேர்ந்து நம்ம சைக்கிளை மட்டும் உருவி கொடுத்துடுவான்.”

“எனக்கு ஒண்ணும் புரியலைப்பா. இங்க திருட்டுபோ றதும் சாதாரணமா இருக்கு. திருட்டுப்போன பொருள் திரும்பி வர்றதும் சாதாரணமா இருக்கு. இது என்ன ஊர்னே தெரியலை.” பேராசிரியர் அலுத்துக் கொண் டார்.

“அய்யா! நீங்க கோயிலாண்ட வந்துருங்க. நான் இன்னும் ஒரு அரை மணி நேரத்தில் அங்க வந்துர்றேன்.'

“சைக்கிள் கிடைச்சிருச்சுங்களா?” துர்காதேவியின் அப்பா ஆவலோடு கேட்டார்.

“அதுக்குத்தான் போறேன்.” சொல்லிட்டு சதாசிவம் தெருவில் இறங்கி நடந்தான்.

காட்டுமன்னார்கோவில் போன்ற ஊரில் சற்று பணவ சதியுடனும், ஆள்படை வசதியுடனும் இருந்தால் எந் தக் காரியத்தை வேண்டுமானாலும் சாதித்துக்கொள்ள லாம். சதாசிவம் இதுவரை தன்னை அதிகம் வெளிப் படுத்திக் கொள்ளாது, தான் இன்ன கட்சியைச் சேர்ந் தவன் என்பதை மட்டும் முன்னிலைப்படுத்தி எப்போ தாவது கட்சிக்கூட்டம் நடக்கிறபோது, மாலைகளுக்கும், சான்றுகளுக்கும் காசு செலவழித்து, பந்தல் செலவை பகிர்ந்துகொண்டு, 'சின்னஞ் சிறிய உதவிகளை செய்தி ருக்கிறானேயொழிய, அவன் தன் ஊரில் தன் கட்சியில் முதல் வரிசை ஆளாய் எப்போதுமே இருந்ததில்லை.

வீட்டுவாசலில் நிற்கவைக்கப்படும்சைக்கிள், கொல்லைக்கு பின்பக்கம் போட்டிருக்கும் தவலை, அண்டா, சில சமயம் கொடிகளில் உலர்த்தப்பட்டிருக்கும் விலையுயர்ந்த புடவைகள், எங்கேனும் கடைகளில் மாட்டப்பட்டிருக்கும் குழல் விளக்குகள் என்று சிறிய பொருள்களைத் திருடும் அந்த மனிதனை போலீஸ்காரர்கள் நன்கு அறிவார்கள். மிகப் பெரும் குடிகாரனான அவனை அவர்களால் எந்தவிதத்திலும் திருத்த முடியவில்லை. மேலும் அவனை தண்டிக்க முடியாதபடி அவனுக்கு ஒரு அரசியல் பாதுகாப்பு இருந்தது.

“எதிர்க்கட்சி கூட்டத்துக்குப்போய், கூட்டத்துக்கு நடுவுல மாடை விரட்டிட்டு வா” என்று சொன்னால் செய்யவும், “எதிர்க்கட்சிக்காரன் கார்ல மிளகாய்ப் பொடியைத் தூவிட்டு வா” என்று கட்டளையிட்டால் நிறைவேற்றவும் அந்த மடையன் தயாராக இருந்தான்.

“ஒரு கோணிப்பை நிறைய இருபத்தேழு சோடா பாட்டில் வீதம் பன்னெண்டு -கார்ல எதிர்க்கட்சிக்காரங்க எதிர்லே வர்றாங்க. ஒரு நிமிஷத்துக்கு மூணு சோடா பாட்டில் சர சரன்னு வானத்தில் விட்டுக்கிட்டே இருந்தான். விட்டுட்டு ஊருக்கு பஸ்ஸேறி போனவன்தான். பதினஞ்சு நாள் கழிச்சி தான் திரும்பி வந்தான். அதுக்குள்ளேயும் இங்க எல்லாம் சரியாப்போச்சு” என்று பெருமையோடு அவன் செயல்களைப் புகழ்வாரும் அந்த ஊரில் உண்டு.

எனவே, இம்மாதிரி காரியங்களுக்கு உபயோகப்படுகிற அவன் சிறிய திருட்டுகள் செய்கிறபோது தண்டிக்கப்பட முடியாதவனாக போய்விட்டான். அந்த மனிதனைப் பற்றியும் அவன் செயல்களைப் பற்றியும் சதாசிவம் கேள்விப்பட்டிருக்கிறான். போலீஸ் ஸ்டேஷனுக்குப் போய் அவன்தானா என்று கேட்டுக்கொண்டான். பிறகு

திரும்பி கட்சி அலுவலகம் நோக்கி நடந்தான். அங்குள்ள வட்டச்செயலாளரை அணுகினான்.

"எனக்குத் தெரிஞ்சவங்க சைக்கிள் திருட்டுப்போயிடுச்சு. நம்மாளுதான் லவுட்டிட்டதா போலீஸ்ல சொல்றாங்க. எனக்கு சைக்கிள் மட்டும் திருப்பிக் குடுத்துடச் சொல்லுங்க. நான் எதனா குடுத்துர்றேன்" என்று வட்டச் செயலாளரிடம் பேரம் பேசினான்.

"அவன் அப்படிப் பண்றதைத்தான் விட்டுட்டானா மேம்ப்பா..."

"சும்மா இருங்க துரை. இது சொந்தக்காரங்க சைக்கிள்னு சொல்றேன். விட்டுட்டானாமேப்பான்னு என்கிட்டயே கதை அடிக்கறியே!" - சதாசிவம் சீறினான்.

அடுத்த அரை மணி நேரத்தில் சிறிய பழுதுகூட இல்லாமல் சைக்கிள் அவனிடம் ஒப்படைக்கப்பட்டது. சைக்கிளைக் கொண்டு வந்தவனிடம், சதாசிவம் இருநூற்றைம்பது ரூபாய் காசை பையிலிருந்து எடுத்து நீட்ட, அவன் வெட்கப்பட்டு பின்னடைந்தான். சதாசிவம் அவனை முன்னுக்கு இழுத்து காசு வைத்தான்.

"யாரு திருடினதுன்னு எனக்குத் தெரியும். அவனுக்கு நஷ்டமாயிடுமில்ல. செலவுக்கு வைச்சிக்க சொல்லு" என்று இருநூற்றைம்பது ரூபாயை அவனிடம் கொடுத்து விட்டு, சைக்கிளை ஏறி மிதித்து துர்காதேவியின் வீட்டு வாசலை அடைந்தான். வாசலில் நின்று மணியடித்தான். பேராசிரியர் தான் திடுக்கிட்டு எழுந்து பார்த்தார்.

"ஏங்க அந்த புள்ளையாண்டான் சைக்கிளோட வந்துருக்கான்" என்று ஆச்சரியமாகச் சொன்னார்.

துர்காதேவியின் வீடு முழுவதும் வெளியே வந்தது. அம்மா, பாட்டி, சித்தி என்று பல்வேறு பெண்கள் வாசலில் சேர்ந்தார்கள்.

சதாசிவம் சைக்கிளை விட்டு இறங்கி, உள்ளே தள்ளிக் கொண்டு வந்து, வீட்டு முற்றத்தில் வைத்து ஸ்டாண்டு போட, துர்காதேவியின் அப்பா அருகே வந்து மெல்ல அவன் கையைப் பற்றிக் கொண்டார்.

“என்னமோன்னு நினைச்சேன். ரொம்ப சந்தோஷம். உங்களை எதனா தப்பா பேசியிருந்தா மன்னிச்சுக்க ணும்” என்று மன்னிப்பு கேட்டார். அவன் “அதெல்லாம் ஒண்ணும் இல்லீங்க” என்று நகர்ந்து கொண்டு துர்கா தேவியைத் தேடினான்.

துர்காதேவி வேகமாய் பின்னடைந்தாள். இருட்டுக்குப் போனாள். அங்கிருந்து அவனைப் பார்த்து மெல்ல சிரித்தாள். அந்த சிரிப்பில் பல்வேறு அர்த்தங்கள் இருந் தன. 'டேய் பாஸ் பண்ணிட்ட' என்ற சந்தோஷமும் இருந் தது.

“தம்பி! நான் சாப்பிட்டுட்டேன். போலாங்களா?' பேராசிரி யர் தியாகராஜன் எழுந்தார்.

“போலாங்க.” சர்வசாதாரணமாய் சதாசிவம் பதில் சொன்னான்.

“தம்பி! நீங்க சாப்பிட்டீங்களா?”

“வாங்க, வழியில் சாப்பிடறது.”

தியாகராஜன் உபசரிக்கத் தொடங்கினார். “டக்குன்னு உள்ள கூப்பிட்டு சாப்பாடு போட்டா நம்ம கட்சியில எதுனா சொன்னாலும் சொல்லுவாங்க. அதனால அவ ருக்கு எதுனா உண்டானதை கொடுத்துடுவோம்” என்று துர்காதேவி வீட்டில் மெல்லப் பேச, தியாகராஜனுக்கு கோபம் வந்தது.

“வேணாங்க. நான் வாங்கி கொடுத்துக்கறேன். வாங்க தம்பி போலாம்” - அவர் சதாசிவத்தை நோக்கி நகர்ந்து,

அவன் தோளில் கைபோட்டுக் கொண்டு வெளியே நடந்து போனார்.

"என்ன இந்த ஊரு இப்படி இருக்கு. நீங்க ஒரு பார்ட்டி. அவரு ஒரு பார்ட்டி. அதனால என்ன... பேசினா தப்பா. சாப்பிட்டா தப்பா. காபி குடிச்சா தப்பா..."

"ஆமாங்க இந்த ஊர்ல தப்பு. 'என்னடா அங்க போயி காபி குடிச்சுட்டு வர்றே. வெக்கம் மானம் இல்லாம' அப்படின்னு எங்க கட்சிக்காரங்க கேட்டாலும் கேப்பாங்க. அவரு போடறது மட்டும் இல்லீங்க. நான் போய் சாப்பிடறதும் எனக்குத் தொந்தரவு."

"கடவுளே! எனக்கு இந்த நியாயம் புரியவே இல்லைய்யா..." பேராசிரியர் வாய்விட்டு சொன்னார்.

"எல்லா நேரமும் இல்லீங்க. இது கொஞ்சம் எலெக்ஷன் வர்ற நேரமா இருக்கு. காரசாரமா தாக்கிப் பேசிக்கிறோம். அதனால் ரெண்டு பக்கமும் அதிகம் பேசாத இருக்கிறோம். எலெக்ஷன் வந்து ரிசல்ட் நம்ம பக்கம்தான் அப்படின்னு முடிவாயிடுச்சுன்னா நாங்களும் ஜாஸ்தி ரவுஸ் பண்ணி பேச மாட்டோம். அவர்களும் வம்புக்கு வரமாட்டாங்க.

இப்பப் பாருங்க. அடுத்த மாச மத்தியிலே எலெக்ஷன் வரப்போவுது. இப்பவே ஆளுக்கு ஆள் டிக்கெட் கேட்டு கட்சியிலே ஏகப்பட்ட பிரச்னைங்க நடக்குது. இந்த நேரத்தில நாம் எதிர்க்கட்சி பக்கம் போனா நல்லாவா இருக்கும்."

"நீங்கடிக்கெட் கேட்டிருக்கீங்களா?"

"அய்யய்யோ... அதெல்லாம் இல்ல சார்! நமக்கு வேண்டப்பட்டவர் டிக்கெட் கேட்டிருக்காரு. நண்பர் டிக்கெட் கேட்டிருக்கும் போது நான் போய் இவர் வீட்டில் சாப்பிட்டன்னா 'அவங்க ஆளு பாரு, எங்க போய் சாப்பி

டறான்'னு சொல்லி, அவருக்கு டிக்கெட் கொடுக்காம நிறுத்தினாலும் நிறுத்திடுவாங்க. நான் அந்த வம்பில் மாட்டிக்க தயாரா இல்லை. அவர் சோறு போடறேன்னா கூட நான் சாப்பிடறா மாதிரி இல்லை சார்."

"யப்பா... உங்களுக்கு ஒரு கும்பிடு. உங்க அரசியலுக்கு ஒரு கும்பிடு" - தியாகராஜன் பெரிதாய் கைகூப்பினார்.

மறுபடியும் அவர்கள் கோயிலுக்குள் போனார்கள். புதர் களை கழித்தார்கள். கல்வெட்டுகளை மெல்லியதாய் தேய்த்தார்கள். கம்பி பிரஷ்ஷால் சுத்தம் செய்தார்கள். சுண்ணாம்பு பூசி, கல்வெட்டுகளை பிரதி எடுத்தார்கள்

"நீ ஒண்ணுமே சாப்பிடலே சதாசிவம்." தியாகராஜன் பொருமலோடு கூறினார்.

"வேணாம் சார். பசி முத்திப்போச்சு. இப்ப போய் சாப்பிட் டேன்னு வச்சிக்குங்க, 'கேஸ் ட்ரபிள் 'தான் வரும். இப்ப விட்டுட்டு ராத்திரி சாப்பிட்டோம்னா கூட ரெண்டு சப் பாத்தி சேத்து சாப்பிட்டுக்கலாம்."

அவன் சொல்லி முடிக்கும்போது கோயிலுக்குள் துர்கா தேவி வருவது தெரிந்தது. புடவைத் தலைப்பில் எதையோ மூடியிருந்தாள். கோயிலைச் சுற்றிக்கொண்டு அவர்களை நோக்கி வந்தாள். நந்திக்கருகே கல்வெட் டுகள் படித்துக் கொண்டிருந்த அவர்கள் இருவருக்கு அருகேயும் போய், ஒரு வட்ட டிபன்பாக்ஸை வைத்தாள்.

"இதில் புளியோதரையும், ஊறுகாயும், இருக்கு. அவரை சாப்பிட சொல்லுங்க மாமா", என்று தியாகராஜனிடம் கூறிவிட்டு துர்காதேவி வேகமாய் நகர்ந்து போனாள்.

தியாகராஜன் அந்த பெரிய டிபன்பாக்ஸை திறந்தார். புளியோதரை வாசனை மூக்கைத் துளைத்தது. அவ ருக்கும் சாப்பிட வேண்டும் என்ற ஆசை எழுந்தது.

இரண்டு பேரும் கோயிலின் பின்பக்கம் போய் மண்டபத்தில் உட்கார்ந்து ஆற அமர சாப்பிட்டார்கள்.

“தம்பி, என்கூட மத்த ஊருங்களுக்கும் வர்றீங்களா? நீங்க வந்தா எனக்குத் துணையா இருக்கும்.” ஆர்வத்தோடு தியாகராஜன் கேட்க, 'நிச்சயமாய் வருகிறேன்' என்று சதாசிவம் வாக்கு கொடுத்தான்.

“எந்த ஊரு போறோம்னு சொல்லுங்க. அம்பது கிலோ மீட்டரா இருந்தா, என் ஃப்ரெண்டுகிட்டேயிருந்து மோட்டார் சைக்கிள் வாங்கிட்டு வந்திர்றேன். பெட்ரோல் மட்டும் நீங்க போட்டுக்கிட்டீங்கன்னா...”

“அடடே... அதைவிட சௌகரியம் உண்டா,நல்லா போலாமே. மேற்கொண்டு காசு ஏதாவது கேட்டாலும் குடுத்துடலாம் தம்பி. உங்களால மோட்டார் சைக்கிள் வாங்கிட்டு வர முடியுமா...” அதிக ஆர்வத்துடன் தியாகராஜன் கேட்க, மறுநாள் காலை சதாசிவம் சுஸூகி மோட்டார் சைக்கிளோடு வந்து வாசலில் நின்று ஹாரன் அடித்தான்.

மோட்டார் சைக்கிளை வீட்டு வாசலில் கொண்டு வந்து நிறுத்திய அந்தக் கணம்தான் சதாசிவத்திற்கும் துர்கா தேவிக்கும் நடுவே குப்பென்று காதல் பற்றிக் கொண்டது. பேச்சு இல்லை. ஒரு சைகை இல்லை. வெறும் பார்வை மட்டுமே பரிமாறப்பட்டது. ஆழ உற்றுப் பார்த்த அந்தப் பெண்ணின் பார்வையும், திகைத்துப்போய் அதை உள் வாங்கிய ஆணின் பார்வையும் அவர்களுக்குள் ஒரு மலர்ச்சி ஏற்படுத்திவிட்டது. 'சொன்னபடி மோட்டார் சைக்கிள் கொண்ணாந்திட்டியே. கெட்டிக்காரன்டா நீ' என்ற வாக்கியம் அந்தப் பெண்ணின் பார்வையில் இருந்தது. 'நேத்து உன்னை தப்பா நினைச்சிட்டேன் இல்ல. ஸாரி' என்ற மன்னிப்பும் அந்தப் பார்வையில் இருந்தது. 'உன்னை எனக்குப் பிடிச்சிருக்கு.

என்னை உனக்கு பிடிச்சிருக்கா' என்ற கேள்வியும் அந்த பார்வையில் இருந்தது. 'சரி போய்ட்டு எப்ப வருவே, எப்பவும் உன் நினைப்பாவே இருக்குப்பா' என்ற கெஞ்சலும் அந்தப் பார்வையில் இருந்தது.

எந்த வார்த்தையும் பேசாமல், எந்த செய்கையும் செய்யாமல் யாராவது இவ்வளவு பெரிய நான்கு வாக்கியங்களைப் பேச முடியுமா?

யுவதிகளால் பேச முடியும். இளைஞர்களால் புரிந்து கொள்ள முடியும். இதற்கு ஒரு வயதும், மனோநிலையும் தேவைப்படுகிறது. அந்த வயதில் அந்த மனோநிலையில், துர்காதேவியும், சதாசிவமும் இருந்ததால் அவர்கள் ஒருவரைப் பற்றி ஒருவர் என்ன நினைக்கிறார்கள் என்பதை எளிதில் புரிந்துகொண்டார்கள்.

'மோட்டார் சைக்கிள்ல கூட்டிக்கிட்டுப் போறேன்னு சொல்லிட்டேனே. அதனால போய்த்தானே ஆகணும். போய்ட்டு சல்லுன்னு வந்துர்றேன். புளியோதரை கொண்டு வந்து கொடுத்தே பாரு. அப்பவே எனக்குத் தெரிஞ்சு போச்சு, மறைமுகமா வருத்தப்படறேனு. எதுக்கு வருத்தப்படணும். ஆல் இன் தி கேம்' என்று கம்பீரமாய் சிரித்துக் கொண்டே அவனும் பார்வையால் பேசினான்.

ஒரு வினாடி அவளைப் பார்த்து, அடுத்த வினாடி மற்றவர்களைப் பார்த்து, தன் பார்வையை ஒரே இடத்தில் நிலைக்க விடாமல் நாலாபக்கமும் அலையவிட்டு ஒரு பரபரப்போடு சதாசிவம் இயக்கிக் கொண்டிருந்தான். வண்டி உறுமிக் கொண்டிருந்தது. பேராசிரியர் தியாகராஜன் கைப்பையோடு வெளியில் வந்து வண்டியில் ஏறிக் கொண்டார். வண்டி கடப்பூர் மாளிகை எங்கிருக்கிறது என்று தேடிக்கொண்டு போனது.

ஊர் இருட்டி, விளக்குகள் வைத்த பிறகு பேராசிரியர் தியாகராஜன் வீட்டு வாசலில் இறங்கிக் கொண்டு அவனை உள்ளுக்குள் அழைத்தார்.

"தம்பி, உள்ள வாங்க."

"வேணாம் சார். நான் இன்னொரு தடவை வரேன். வண்டியைக் கொண்டுபோய் கொடுக்கணும் இல்ல."

"இல்லப்பா. தயவுசெய்து உள்ள வா.' பேராசிரியர் அழுத்தம் திருத்தமாய் கட்டளை போல் அவனிடம் பேசினார். அவன் மறுபடியும் தயங்கினான்.

"உள்ள வந்துட்டு போ, நீ அப்படியே போனா எனக்கு மனசு ஆறாது" என்று மீண்டும் பேராசிரியர் வேகமாகச் சொல்ல, அவன் வண்டியை நிறுத்தி, ஸ்டாண்ட் போட்டு விட்டு வீட்டிற்குள் நுழைந்து வாசற்படியைப் பிடித்துக் கொண்டு நின்றான்.

"ஏங்க குளவி கொட்டுன காயத்துக்கு எதனா மருந்து இருக்கா? ஆஸ்பத்திரிக்கு போகணுமா, கொஞ்சம் தயவு செஞ்சு சொல்லுங்க."

"என்ன, என்ன ஆச்சு?"

வீட்டிலுள்ள அனைவரும் பதட்டப்பட்டார்கள்.

துர்காதேவி கொல்லைப் பக்கம் கைவேலையாக இருந்தாள். குரல் கேட்டு சட்டென்று வேலையை நிறுத்தி விட்டு உள்ளுக்குள் ஓடிவந்தாள்.

"என்ன, என்ன ஆச்சு?" - பின்பக்கமிருந்தபடி கேட்டாள்.

"குளவி கொட்டிடிச்சு துர்கா. அது என்ன பண்ணும். எனக்குத் தெரியலை. ரெண்டு, மூணு கொட்டு. ஒரே குளவி சுத்தி சுத்தி வந்து கன்னத்துல ஒண்ணு, கைல ஒண்ணு, கழுத்துல ஒண்ணுன்னு பட்டு பட்டுன்னு போட்டிருச்சு. எதுவும் தப்பாயிடுமான்னு எனக்கு பயமா

இருக்கு. மருந்து போட்டா போதுமா, இல்ல ஆஸ் பத்திரிக்குப் போய் டாக்டரை பார்க் கணுமா... இவ ரைக் கேட்டா, 'ஒண்ணும் இல்ல. லேசா கடுக்கிற மாதிரி இருக்கு. அவ்வளவுதான்' அப்படின்றாரு. குளவி... விஷம் தானே?", தியாகராஜன் பரிதாபமாகக் கேட்டார்.

காதலில் ஈடுபட்டவர் மனம் ஒருமிப்பதுபோல ஒரு தபஸ் வியின் மனம்கூட ஒருமிப்பதில்லை. 'தான் கடம்பூருக் குப் போவது பேராசிரியர் தியாகராஜனுக்கு செய்யும் வேலையல்ல. துர்காதேவியின் பங்காளிக்குச் செய்யும் உதவி என்பதாய் சதாசிவம் மனம் மாறி, தியாகரா ஜனை கண்ணும் கருத்துமாய் கவனித்துக் கொண் டான். அவரால் ஏற முடியாத இடங்களிலெல்லாம் அவன் தாவி ஏறி, 'என்ன செய்ய வேண்டும் சொல்லுங்கள்' என்று கேட்டான். 'உச்சியில், அந்த கலசத்தின் அளவை எடுக்க முடியுமா' என்று தியாகராஜன் கேட்க, அந்த வாக்கியம் முடிவதற்குள் அவன் பாதி தூரம் போய்விட் டிருந்தான். 'ஒரு முழங்கை, பதினாறு விரல் உயரம்' என்று அளந்து சொன்னான். 'கலசத்தில் ஏதோ எழுதி யிருக்கிறது' என்று தடவிப் பார்த்துக் கத்தினான். தியா கராஜன் அத்தனை உயரம் போவதற்கு அஞ்சினார். 'படியெடுப்பது எப்படி' என்று அவனுக்கு கீழிருந்தப டியே சொல்லிக் கொடுத்து, பேப்பர் அனுப்பி, கரித்தூள் அனுப்பி அங்கு எழுதியிருப்பதை படியெடுக்கச் சொன் னார். படியெடுக்க, கலசத்திலுள்ள மண்ணைச் சுரண்டு கிறபோது, கம்பி பிரஷ் குளவி கூட்டில் பட்டு ஒரு குளவி பறந்து அவனை மூன்று, நான்கு இடங்களில் கொட்டி கொடுக்கை முறித்துக் கொண்டது. அவனால் அந்த வலியைத் தாங்கமுடியாதபோது, இறங்கி விடு, இறங்கி விடு' என்ற தியாகராஜன், அதே நேரம் அவன் கழுத்தும், கையும், கன்னமும் வீங்கியிருப்பதைப் பார்த்து வேத னைப்பட்டார். வீட்டிற்கு வந்ததும் என்ன செய்ய வேண்

டும், என்ன செய்ய வேண்டும் என்று பதறினார். 'வாங்க தம்பி, டாக்டர்கிட்ட போயிட்டு வந்துடலாம்' என்று அவன் கைபிடித்து அழைத்தார்.

"இதுக்கு ஏங்க டாக்டர்கிட்ட போகணும். நான் சுண் ணாம்பும், குப்பைமேனியும் சேர்த்து அரைச்சுப் பத்துப் போடறேன்.'துர்காதேவி பரபரத்தாள். கொல்லைப்புறம் ஓடினாள். குப்பைமேனிக் கீரைகளைத் தேடிப் பறித் தாள். பத்து, பன்னிரண்டு செடிகள் எடுத்து வந்து, அம் மியில் வைத்து மழுங்க அரைத்து அதில் சுண்ணாம்பு நீர்விட்டு கலந்தாள். சதாசிவத்தை, சட்டையைக் கழற் றச் சொல்லி, கழுத்தின் பின்புறமும், கன்னத்து மேட் டிலும், கைவிரல்களின் மேலேயும் பத்து போட்டாள். அதற்குள் துர்காதேவியின் தாயார் காபி கொண்டு வந்து கொடுக்க, வீடு முழுவதும் அவன் செய்த உதவியைப் பாராட்டிக் கொண்டிருந்தது.

"வலிக்குதுங்களா?" துர்காகேட்க, "வலி மாதிரி இல் லைங்க. கடுக்குது. ஒரு மாதிரி... உள்ளுக்குள்ளே ஊசி சொருகிவைச்சா மாதிரி ஒரு வேதனை இருக்கு."சதாசி வம் சொன்னான்.

"ராத்திரி நீங்க டிபன் சாப்பிடுவீங்களா... சாப்பாடு சாப்பி டுவீங்களா...'

"பசிக்கு எதனா ஒண்ணு சாப்பிடணுங்க."

"இங்க டிபன் செய்து தரேன். அதை சாப்பிட்டுட்டு, பால்ல விளக்கெண்ணெய் கலந்து தர்றேன். அதையும் குடிச்சிடுங்க.".

"என்னது" - சதாசிவம் துர்காதேவியின் பேச்சுக்கு பயந் துபோய் கத்தினான். "எதுக்குங்க விளக்கெண்ணெய்?" கலவரத்தோடு கேட்டான்.

"உள்ள விஷம் இறங்கிட்டு இருக்கும். அந்த விஷம் வெளியே போகணும்னா வயிறு கொஞ்சம் காலியாக றது நல்லது. டிபன் சாப்பிட்டுட்டு, அரை டம்ளர் பால்ல ரெண்டு டீஸ்பூன் விளக்கெண்ணெய் விட்டு சாப்பிட் டுட்டா காலையிலேயே வயிறு சுத்தமாயிடும். வயிறு சுத்தமாயிடுச்சுன்னா விஷம் உடம்புல தங்காது. இல் லன்னா அமாவாசைக்கு அமாவாசை இந்த விஷம் பொங்கிடும்" என்று துர்காதேவி பயமுறுத்தினாள்.

வீடு மௌனமாக இருந்தது.

"செய்திருங்களேன் தம்பி!" - தியாகராஜன் இழுத்தாற் போல் பேசினார்.

சதாசிவம் சற்று யோசித்து, 'சரி' என்று தலையாட்டி னான்.

துர்காதேவியின் அம்மா இட்லியும், ரவை உப்புமா வும் பரிமாற, துர்காதேவியின் கையால் முதன்முதலாய் விளக் கெண்ணெய் கலந்த பால் வாங்கிக் குடித்தான். வீட்டிற்கு கிளம்பினான். அவன் கிளம்பும்போது, தியாக ராஜன் காசு கொடுக்க முயல, கையெடுத்துக் கும்பிட்டு, 'என்னை அவமானப்படுத்தாதீங்க சார்' என்ற கேட்டுக் கொண்டான் அவன் பேச்சுக்கு தியாகராஜன் பதறிப் போய் காசை பையில் போட்டுக் கொண்டார்.

"வேற எப்படி என் நன்றியை சொல்றது தம்பி?"

"இதப்பத்தி, எதனா புத்தகத்துல கட்டுரை எழுதுவீங்க இல்ல. அந்தக் கட்டுரையில் என் பேரு எழுதுங்க போதும். அதான் எனக்குக் கிடைக்கற பெரிய மரியாதை. அது மட்டும் இல்ல. உங்களை மாதிரி சரித்திரப் பேராசி ரியர்கள் யாராவது இந்த ஊருக்கு வந்தாக்கா என் விலா சம் கொடுங்க. இல்லைன்னா இங்க... இவங்க வீட்டு விலாசம் கொடுத்துட்டு என் பேரு சொல்லச் சொல் லுங்க. அவங்களுக்கு என்னால முடிஞ்ச உதவியை

நான் செய்யறேன். எங்க ஊரைப்பத்தி நான் இவ்வளவு தெரிஞ்சுகிட்டதுக்கு காரணமா இருந்த உங்களுக்கு நான்தான் நன்றி சொல்லணும்." - கைகூப்பினான்.

அவரை கடைசி பஸ்ஸில் ஏற்றி உட்கார வைத்துவிட்டு வீட்டிற்குப் போனான்.

இரவு படுக்கப்போகும்போதுதான் கடுப்பு அதிகமாகி யது. தூக்கம் வராமல் புரண்டு புரண்டு படுக்க நேரிட்டது. குளவி கொட்டியது மட்டுமல்லாமல், துர்காதேவி ஆழ ஊடுருவிப் பார்த்ததும், மெல்லச் சிரித்ததும், வெட்கப் பட்டதும் திரும்ப திரும்ப மனதுக்குள் தோன்றி அவனை அலைக்கழித்தன. இதற்கு என்ன அர்த்தம்' என்று யோசிக்க வைத்தன. 'மறுபடியும், எப்போது போய்ப் பார்ப்பது', 'என்ன வென்று பார்ப்பது', 'போய் மறுபடியும் பார்ப்பது சரியா, பார்க்காமல் இருப்பது சரியா' என்று யோசித்தான். எழுந்து உட்கார்ந்து கொண்டான். சரி யாக யோசிக்க முடியவில்லை. வீட்டை விட்டு வெளியே வந்து, வீட்டு வராண்டாவில் குறுக்கும், நெடுக்கும் அலைந்தான். என்ன செய்து துர்கா தேவியைக் கவரு வது என்று ஆழமாக சிந்தித்தான்.

மனம் ஒரு பக்கம் காதல் உணர்வில் துள்ளிக் கொண் டிருந்தாலும், அதை மெல்ல புறக்கணித்துவிட்டு, 'தன் மனம் எதற்கு ஆசைப்படுகிறது, எதை நோக்கிப் போய்க் கொண்டிருக்கிறது' என்று யோசிக்கத் துவங்கினான்.

பாடல்கள் சடக்கென்று உள்ளுக்குள்ளிருந்து பொங்கி எழுந்தன. பார்த்த சினிமாக்களும், காட்சிகளும் நெஞ் சுக்குள் நிழலாய் ஓடின. அவற்றை தடுத்து நிறுத்துவது அவனுக்கு சிரமமாக இருந்தது. ஆனாலும் நிறுத்தியே ஆகவேண்டும், நிறுத்தினால்தான் தெளிவாக யோசிக்க முடியும் என்று முடிவுசெய்து, அந்த நடுநிசியில் பின்

கைகட்டி தொலைதூரம் பார்த்து யோசிக்கத் துவங்கி னான்.

'இன்னி தேதிக்கு சதாசிவம், உனக்கு வேலையில்லை, கையில ஏதோ கொஞ்சம் காசு வெச்சிருக்கே. அவ் ளோதான் இதை வெச்சுக்கிட்டு கல்யாணத்தில் இறங்க றது முட்டாள் தனம். நம்ம ஊருல காதல்ன்றது பொண் ணைப் பார்த்து 'கிளுகிளு'ன்னு சிரிச்சிட்டுப் போறது இல்ல. அந்த மாதிரியான காதல் உனக்குத் தேவையும் இல்ல. ஒரு நல்ல பொண்ணைப் பார்த்து கல்யாணம் பண்ணிக்கறதுலே இருக்கற சந்தோஷம், வேற எதில யும் கிடையாது. நாம காதலிக்கற பொண்ணு, நல்ல பொண்ணா, நம்ம வீட்டுக்கு ஏத்த பொண்ணா இருந்தா அதைவிட சந்தோஷம் உலகத்துல எதுவும் இல்லை.

துர்காதேவி அலட்டவில்லை. அதே சமயத்தில் அசடும் இல்லை. இந்த மாதிரி மத்தியதர வர்க்கம்தான் குடித் தனம் செய்வதற்கு ஏற்றது. ஏனெனில், நானும் அதே போல அதே குணம் கொண்ட மத்தியதர வர்க்கம். நான் அதிக ஆடம்பர மானவனும் இல்லை. அபத்தமான அரைவேட்டி ஆளும் இல்லை. என்னால் பட்டணத்தி லும் புகுந்து ஜெயிக்க முடியும், காட்டுமன்னார்கோவில் போன்ற சிறிய ஊரிலும் வாழமுடியும். ஏன், அதைவிட சிறிய கிராமத்திலும் இருக்க முடியும். எனவே, வாழ்க்கை எந்தப் பக்கம் என்று தீர்மானித்துக் கொண்டு அதற்குப் பிறகு காதலில் ஈடுபடுவது நல்லது - மனது ஒரு பக்கம் இப்படிச் சொல்லிற்று.

வேலை கிடைத்த பிறகுதான் காதலிக்க வேண்டுமென் றால், காசுதான் காதல் என்பது போல் ஆகிறது. துர் கா தேவி கனிவோடு பார்த்ததும், சிரித்ததும் சாதாரண மானதாகத் தெரியவில்லை. எனவே, துர்காதேவியிடம் வாய் வார்த்தையாக, 'எனக்கு உன் மீது ஒரு பிடிப்பு ஏற்படுகிறது. உனக்கு என்மீது நாட்டம் உண்டா. நமக்

குள் ஏற்பட்டது காதல்தானா நாம் காதலித்தால் தாங்கு வோமா. திருமணம் வரை நம்மால் நகர முடியுமா. திரும ணம் செய்து நீயும், நானும் சந்தோஷமாய், ஒற்றுமையாய், வெற்றிகரமாய் வாழ்க்கை நடத்த முடியுமா என்று கேட் டுக் கொண்டு பிறகு தொடர்வது நல்லது.' - மனம் இப்படி யும் சொல்லிற்று.

'இது என்ன வியாபார ஒப்பந்தமா... இப்படியெல்லாம் பேசிக் கொண்டா காதல் வருகிறது. என்னைப் பார்த்து கண்சொருகச் சிரித்தது, என்னுடைய காசை வைத்தா அல்லது என் வேலையை வைத்தா. நான் அந்த நேரம் நடந்து கொண்ட விதம் அந்தப் பெண்ணுக்கு பிடித்தி ருக்கிறது. அந்தப் பெண் அந்த நேரம் நடந்து கொண்ட விதம் எனக்கு சந்தோஷமாக இருந்தது. எனவே, இதில் நடத்தைதான் முக்கியமே தவிர, 'வெற்றி பெற்ற ஆணா, வேண்டி நிற்கிற பெண்ணா என்ற குணங்களெல்லாம் இங்கே வரவே இல்லை. இப்போதே அதிக திட்டம் போடாமல், விதை நட்டு முளை விட்டிருப்பது என்ன என்பதைப் பார்த்து, அது துளிர் விட்டவுடன், இலை பெரி தானவுடன், மேலே ஒரு அடி உயரம் படர்ந்த பிறகு அதைப் பற்றி யோசிப்போம். நேற்று சந்தித்து விட்டு இன்று இது காதல் என்று உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டாம் யோசித்து அவஸ்தைப்பட வேண் டாம். அதன் போக்கிலேயே விட்டுவிடுவோம். நாளை போய் மறுபடியும் சந்திப்போம்.'

அப்படியா. நாளை எதற்குப் போய் சந்திக்கப் போகிறாய் என்னவென்று சந்திக்கப் போகிறாய். இப்போது பேரா சிரியர் தியாகராஜன் அங்கு இல்லை. அவர் இருந்தா லாவது போய் நிற்கலாம். அவர் இல்லாதபோது என்ன சொல்லிக்கொண்டு போவாய்' என்று யோசித்தபோது மனதின் இன்னொரு மூலையிலிருந்து ஒரு கட்டளை எழுந்தது.

அவள் வருகிறாளா என்று பார். அப்படி அவள் வந்தால் அவளுக்கு நிச்சயம் உன் மீது நாட்டமிருக்கிறது என் று அர்த்தம். ஆனால், ஒரு பெண்பிள்ளை தடைகளை மீறி வெட்கத்தை விட்டு உன் வீட்டுப் படியேறி உனக்கு குளவி கொட்டின கடுப்பு எப்படி இருக்கிறது என்று விசாரிக்க எப்படி வரமுடியும்? காட்டுமன்னார்கோவில் என்ன சென்னைப் பட்டினமா, மும்பையா, கல்கத்தாவா அல்லது டெல்லியா... இல்லையே.

ஒருவர் இன்னொருவர் வீட்டிற்கு நகர்ந்தால் பார்த்து விசாரிப்பதற்கென்றே இருபது, இருபத்தைந்து பேர் இருக்கிறார்கள். எனவே, இந்த நகர்வு கடினம். துர்கா தேவி அவ்வாறு செய்யமாட்டாள் என்றுதான் தோன்றுகி றது. ஆனாலும் துர்காதேவியின் ரியாக்ஷன் என்ன என் பதை வீட்டிலிருந்த படியே கண்காணிப்பதுதான் நல் லது.' மனது சொல்ல, சதா சிவம் அவ்வாறே செய்வது என்று தீர்மானித்தான். அப்படித் தான் நடக்கவும் நடந் தது.

மறுநாள் காலை வயிறு புரட்டியது. பின்பக்கம் ஓடிப் போய் உட்கார்ந்தபோது சுத்தமாகியது. அந்த பால் கொஞ்சம் தவறான பால், காய்ச்சி காய்ச்சி அது எங்கோ ஒரு இடம் முறிக்கப்பட்டுவிட்டது. அதில் விளக்கெண் ணெயும் சேர்ந்திருந்ததால், அது வயிற்றுக்குள் போன தும் ஒருவித புளிப்பை ஏற்படுத்தி இரைப்பையில் பெரிய இரைச்சல் கேட்டு குடலில் எதுவும் தங்காமல் நான் கைந்து முறை வெளியேறி 'கடவுளே' என்று கத்தும்படி வைத்துவிட்டது.

"என்னடா... காலையிலேர்ந்து பின்பக்கம் போறதும் வர் றதும் இருக்கே?" சதாசிவத்தின் அம்மா அவனை தடுத்து நிறுத்தி கேட்டாள்.

“காலையிலே டீக்கடைல காபி குடிச்சேன்மா. பால் கெட்டுப் போன பால் போல இருக்கு. வயிறு கலக்கி வலி யோட போகுது.”

“அப்படி இருந்தாகூட சரியாயிடணுமேடா. நீ ரெண்டு தடவைக்கு மேல இல்ல பின்பக்கம் போயிட்டு வந்துட் ட!” அம்மா கவலையாக கேட்டாள்.

வாசல் பக்கம் நிழலாடிற்று. காலிங்பெல் கிறீச்சிட்டு ஓய்ந் தது. அவன் வெளியே எட்டிப் பார்த்தான். கம்பிக் கதவு களுக்கு பிறகு துர்காதேவி நின்றிருந்தாள். அவன் ஓடிப் போய் கதவு திறந்தான்.

“உடம்பு எப்படி இருக்கு? வலி பரவாயில்லையா? வயிறு சரியாயிடுச்சா?” அவள் வாசலிலிருந்தபடியே விசாரித் தாள்.

'யார் அந்த பெண்மணி? எதற்கு இங்கே வந்து விசாரிக் கிறாள்?' அம்மாவுக்கு சந்தேகம் வந்தது. பின்னே வந்து நின்றாள். என்ன பேசுகிறார்கள் என்பது போல் முகவா யில் கைவைத்து பார்த்தாள்.

“இது எங்க அம்மா!” அவன் அவளுக்கு அறிமுகப்படுத் தினான்.

அம்மா முகவாயில் இருந்து கையை எடுக்கவே இல்லை.

“வணக்கம்மா!” துர்காதேவி வணக்கம் சொன்னாள்.

“இது யாரு?” அம்மா அதட்டலாய் கேட்டாள். பதில் வணக்கம் சொல்லி அவளுக்கு பழக்கமே இல்லை.

“நம்மூருக்கு ஒரு பேராசிரியரோட போகும்போது குளவி கொட்டிடிச்சி. இவங்க வீட்டுல மருந்து போட்டாங்க.”

“உள்ளுக்கும் மருந்து கொடுத்தேனே!” துர்காதேவி இடைமறித்து சொன்னாள்.

“என்ன மருந்து கொடுத்தே?” அம்மா மெல்லிய கோபத்தோடு கேட்டாள். அந்தக் கோபம் சதாசிவத்திற்கு மட்டும் புரிந்தது.

“நல்லா ஒரு தடவை வயிறு சுத்தமாகட்டும்னு பால்ல விளக்கெண்ணெய் கலந்து கொடுத்தேன்.”

“அத்த சொல்லுடி ராத்தின்னாளாம்!” அம்மா உரக்கக் கத்தினாள்.

“ஏங்க?” துர்காதேவி புரியாமல் கேட்டாள்.

“இதோட பத்து பதினஞ்சு தடவை போயிட்டு வந்துட்டான்.” அம்மா ஈரைப் பேனாக்கி பேனை பெருமாளாக்கி ஆரவாரமாய்ப் பேசினாள்.

“பத்து பதினஞ்சு தடவையா!” துர்காதேவி அதிர்ந்து போனாள்.

“இல்லீங்க. ஒரு நாலஞ்சு தடவைதான் சிரமமாயிடுச்சு. இப்ப பரவாயில்லீங்க.”

“ஐயையோ! இதுக்கு மாற்று மருந்து தரணுமே.”

“ஒரு மருந்து கொடுத்து தொந்தரவு பண்ணது போதாதா. எதுக்கு மாத்து மருந்து. அதெல்லாம் ஒண்ணும் வேணாம். வா. டாக்டராண்ட போலாம். ஏண்டி இங்க வா?” அம்மா உள்ளே போய் தன்னுடைய தங்கையை, வீட்டிலுள்ள மற்ற பெண் களை உரத்துக் கூப்பிட ஆரம்பித்தாள்.

துர்காதேவியை உள்ளே கூப்பிடவும் முடியாமல், வெளியே அனுப்பவும் முடியாமல் சதாசிவம் தடுமாறினான். ஆரம்பமே நன்றாக இல்லையே என்று அச்சப்பட்டான். ஆனால், துர்காதேவி பயந்தது போலவே தெரியவில்லை.

“ஒண்ணும் இல்லைங்க. இதுக்கு இன்னொரு மாத்திரை சாப்பிட்டீங்கன்னா டக்குன்னு நின்னுடும். இருங்க நான் வாங்கிட்டு வரேன். உங்கம்மா ஏதாவது சொல்லட்டும். நீங்க பாட்டுக்கு அந்த மாத்திரையை 'லபக்'குன்னு முழுங்கிடுங்க” என்று சொல்லிவிட்டு வெளியே இறங்கினாள். நான்கு வீடு தள்ளி இருக்கிற மருந்துக்கடைக்குப் போனாள். அந்த மாத்திரைகள் வாங்கிக்கொண்டு மீண்டும் சதாசிவம் வீட்டிற்கு வந்தாள். இரண்டு மாத்திரையையும் கிழித்தாள். கையில் எடுத்துக் கொண்டாள்.

“இது ரெண்டையும் போட்டு தண்ணி குடிச்சுடுங்க. சரியாப் போயிடும். நீங்க இன்னிக்கு மத்தியானம் வரைக்கும் வெறும் வயிறா இருந்திருக்கணும், காபி குடிச்சது தப்பாப் போச்சு. இப்பகூட ஒண்ணும் இல்லை. இந்த மாத்திரையை சாப்டுட்டு ஒரு இரண்டு மணி நேரம் கழிச்சி கொஞ்சமா மோர் சாதம் சாப்பிடுங்க, போதும். மத்தபடி வேற விவ காரமான சாப்பாடு ஏதாவது சாப்பிட்டீங்கன்னா, தொந்தரவு இருக்கத்தான் செய்யும்” என்று சொல்லிவிட்டு துர்காதேவி வெளியேற யத்தனிக்க, அம்மா அவளை 'உள்ளே வா' என்று அழைத்தாள். மீண்டும் உள்ளே வந்த துர்காவை அந்த வீட்டுப் பெண்கள் அரை வட்டமாய் நின்றுகொண்டு வியப்போடு பார்த்தார்கள். 'எங்கே இருக்கிறாள். யார், என்ன ஜாதி, என்ன சமாசாரம்' எல்லாம் விவரமாகக் கேட்டுத் தெரிந்து கொண்டார்கள். மூன்று தலைமுறையாய் காட்டுமன்னார் கோவில்தான் என்று தெரிந்ததும் கொஞ்சம் கலந்தார்கள்.

“ஒரு வார்த்தை எங்களாண்ட சொல்லி இருந்தா நாங்க மருந்து தந்திருக்க மாட்டோமா, இதுக்கெல்லாம் போய் விளக்கெண்ணெய் கொடுப்பாங்களா. குளவி விஷம் உடம்புல இறங்காது. கடிச்ச இடத்தில் கொஞ்ச நேரம்

கடுக்கும். அவ்வளவுதான். அதுக்கு போயி... இது முரட்டு வைத்திய மில்லையா?" கேட்டார்கள்.

"அப்படிக் கொடுக்கறது நல்லதுங்க. ஒருவேளை உடம் புல விஷம் இறங்கி இருந்தாலும் சரியாப் போயிடும்" என்று பதில் சொல்லிவிட்டு துர்காதேவி தன் வீட்டிற்கு போனாள்.

அவள் அந்தப் பக்கம் போனதும் அம்மா அவள் போல் நடித்துக் காண்பித்தாள். நிறைய குறை சொன்னாள்.

"தடுக்குன்னு வீட்டுவாசலுக்கு வந்து கதவைத் தட்டி ஒரு ஆம்பளைப் பையனை, உடம்பு எப்படி இருக் குன்னு கேட்குது பாருங்களேன். இதுங்க படிச்ச படிப் பெல்லாம் கடைசியிலே இப்படி கதவைத் தட்டறதுக் குத்தான் போ" என்று அலுத்துக் கொண்டாள்.

சதாசிவம் மறுபடியும் மனதோடு பேசினான்: 'நீ ஏதோ திட்டமிட, இங்கு ஏதோ நடக்கிறது பார். எனவே, எந் தத் திட்டமும் முன்கூட்டியே போட்டுவிடாதே. காதல் என் றெல்லாம் மனதை தளரவிட்டு விடாதே. துர்கா தேவி வந்து கதவு தட்டியதும், பேசியதும் அம்மா முன் நின்றதும் எளிதான விஷயமில்லை. அவள் தைரியமான பெண், கொஞ்சம் திமிரான பெண்ணும்கூட. இப்படிப் பட்ட திமிரான பெண்ணை உன்னால் தாங்க முடியுமா, உன் வீடு தாங்குமா என்று யோசித்துவிட்டு, அதற்கு மேல் பல்லை இளிப்பதைப் பற்றித் தீர்மானம் செய். உட னடியாக காதலில் இறங்கிவிடாதே' என்று மனம் எச்ச ரித்தது.

காதலிக்கலாமா வேண்டாமா என்று மனதை அப்போது தேர்வு செய்யச் சொன்னால், வேண்டாம் என்பதற்குத் தான் ஓட்டுகள் அதிகம் விழும் என்பது போல் தோன் றியது. ஆயினும், இவற்றைப் பற்றி அதிகம் அக்கறைப் படாமல் சதா சிவம் ஒத்தி வைத்தான். மறுபடியும் துர்

காதேவியை எங்கே பார்ப்பது, எப்படிப் பேசுவது என்று யோசித்தான். 'அம்மா அவனைப்பற்றி குறை சொன்னது போல, அவளும் அம்மாவைப் பற்றி ஏதும் குறை சொல்வாளோ' என்று சிந்தித்தான். குறை சொல்லக் கூடும். அப்படிக் குறை சொன்னால் இந்த உறவு நன்றாக இருக்காது என்றுதான் அர்த்தம். மெல்ல வணக்கம் கூறி விடைபெற்றுவிட வேண்டும். அடுத்த முறை பேராசிரியர் தியாகராஜன் வந்தால், முடிந்தால் உதவி செய்ய வேண்டும். இல்லையென்றால், வேறு அவசர வேலை இருக்கிறது என்று சொல்லிவிட்டு பஸ் பிடித்து பக்கத்து ஊருக்குப்போய், சிறிது நேரம் ஏதேனும் ஒரு சலூனில் முடி வெட்டிக்கொண்டு பிறகு திரும்பி வந்துவிட வேண்டும்.

அன்று மாலை துர்காதேவியின் அப்பா சதாசிவத்தின் வீடு தேடி வந்தார்.

“இப்ப எப்படி இருக்குங்க தம்பி. வீட்டில கூட விசாரிக்க சொன்னாங்க. தியாகராஜன் போன் பண்ணாரு, அவருகிட்ட விஷயத்தைச் சொன்னேன். ரொம்ப துடிச்சிப் போயிட்டாருப்பா. 'என்ன அந்த புள்ளை... இப்படி நீங்க கவனிக்காத இருக்கீங்களே எனக்கு எவ்ளோ உதவி செஞ்சிருக்காரு. தயவுசெய்து அவரு எப்படியிருக்கார்னு பார்த்துட்டு வந்து போன் பண்ணுங்க' அப்படின்னாரு. துர்காதேவியும் போய்ப் பார்த்துட்டு வரச் சொன்னாரு. துர்காதேவியும் போய் பார்த்துட்டு வரச் சொல்லிச்சு. அதான் வந்தேன்.” அவர் நிதானமாகப் பேசினார்.

அம்மா அவரை வரவேற்றாள். கடையில் வாங்கிய காரா பூந்தியும் வீட்டில் போட்ட காபியும் கொடுத்து உபசரித்தாள்.

“இப்ப பரவாயில்லைங்க. ஒரு தொந்தரவும் இல்லை. வயிறுதான் கொஞ்சம் உப்புசமா இருக்கு” என்று சதா

சிவம் சொல்ல, "வாங்க தம்பி. கொஞ்சம் காலாற நடந்துட்டு வருவோம். அவர் வெளியே அழைத்தார்.

அவர்கள் இருவரும் இறங்கி வெளியே நடந்தார்கள். அவர்கள் இருவரும் போவதை அம்மா கவலையோடு பார்த்தாள்.

இருவரும் கோயிலுக்குப் போனார்கள். வெறுமே வலம் வந்து சாமி கும்பிட்டார்கள். சற்றுநேரம் மண்டபத்தில் உட்கார்ந்திருந்தார்கள்.

"நீங்க நேத்து அந்தப் பக்கம் வீட்டுக்குப் போனதும் ராத்திரி முழுக்க வீட்டுல உங்களைப் பத்திதான் பேச்சு. 'இவ்வளவு கெட்டிக்காரத்தனமான ஒரு புள்ளை இந்த காட்டு மன்னார்கோவில்ல வெறுமே கோயில் வாசல்ல உக்காந்து பொழுது போக்குதே' அப்படின்னு தியாகராஜன் ரொம்ப வருத்தப்பட்டாரு. நான் தான், 'இல்லீங்க. அவர் வேற இடத்துல வேலை செஞ்சிட்டு இருந்தாரு. அங்க என்னமோ பிரச்னை போல. இப்பதான் ஊர்ல தங்கறாரு. இல்லன்னா, அது ஊர்ல தங்கற புள்ளையே இல்லை'ன்னு விளக்கிச் சொன்னேன். ஏன் தம்பி ஏன் வேலைக்குப் போகலை?"

சடக்கென்று வாழ்க்கை திசைமாறியதை சதாசிவம் அவருக்கு விளக்கிச் சொன்னான்.

"இன்டீரியர் டெக்ரேஷன்றது சாதாரண விஷயம் இல்லைங்க. ரொம்ப சூட்சுமமான வேலை. நம்ம திருப்திக்கும் வேலை செய்து, கஸ்டமரையும் திருப்திப்படுத்தணும்கறது ரெண்டு குதிரைல சவாரி பண்றா மாதிரி. அந்தம்மா அதை ரொம்ப திறமையா பண்ணிட்டிருந்தாங்க. அந்தம்மாகிட்ட அஞ்சு வருஷம் வேலை செய்ததுலே நான் பல விஷயங்கள் கத்துக்கிட்டேன். அந்தம்மாவுக்கு திடீர்னு லண்டன்லர்ந்து அழைப்பு வந்தவுடனே இங்க இருக்கிற எல்லா வேலையையும் மடமடன்னு முடிச்

சுட்டு கிளம்பிப் போயிட்டாங்க. போகும் போது என் னைக் கூப்பிட்டு பெரிய தொகை கொடுத்தாங்க,

'லண்டனுக்கு கூப்பிட்டாலும் கூப்பிடுவேன். அதனால எதுவும் பெரிய வேலையா ஒத்துக்காத. ஒரு மூணு மாசம் சும்மா இரு' அப்படின்னு சொல்லிட்டுப் போனாங்க. அத னாலதான் இந்தப் பக்கம் வந்து உட்கார்ந்திருக் கேன் அந்தம்மா லண்டனுக்கு கூப்பிடுமா, கூப்பிடா தானு எனக்குத் தெரியலை."

"ஏங்க, அத்த நம்பிக்கிட்டு இங்க வந்து உக்காந்துர்றதா. இதே வேலையை நீங்களா பட்டணத்திலே செய்ய முடி யாதா?"

"செய்யலாங்க. ஒரு கடை போடணும். டெலிபோன் வேணும். நாலஞ்சு காண்டாக்ட் வேணும். அவங்க லேடி. பட்டுன்னு நாலு இடங்களுக்குப் போய் சிரிச்சிப் பேசி வியா பாரத்தை முடிச்சிகிட்டு வந்துரும். நம்மால அப்ப டிச் செய்ய முடியாது. நம்மளை நம்ப மாட்டாங்க. மெல்ல மெல்ல சூடுபிடிச்சு, ரெகுலரா வேலை வர்றதுக்கு மூணு, நாலு வருஷமாயிடும். அந்த மூணு, நாலு வருஷம் நாம லாபமில்லாம வேலை செய்யணும். மூணாவது வருஷத்திலேர்ந்துதான் கொஞ்சமா லாபம் கிடைக்கும். அந்தம்மா அப்படித்தான் வந்தது. அப்படி வர்ற வசதி அதுக்கு இருந்தது. அவங்க உச்சாணிக் கிளையிலே இருந்ததால நாங்கள்லாம் சிரமப் படாத வேலை செஞ் சிட்டு இருந்தோம். அந்த லேடி நகர்ந்த பிறகு எங் களுக்கெல்லாம் கொஞ்சம் திண்டாட்டமாதான் ஆயி டிச்சு. கையில காசு இருக்கறதனாலேயும், வேற வேலை ஒத்துக்காத. நான் கூப்பிடறேன்னு சொன்னதுனால யும் நான் அந்தம்மாவுக்காக காத்துக்கினு இருக்கேன். போன வாரம் கூட போன்ல பேசினேன் 'இன்னும் எனக்கு இந்த இடம் பிடி படலை. எனக்கு பிடிபட்ட பிறகு பேசறே'ன்னு அந்தம்மா சொன்னாங்க.'அப்படி

கூப்பிட்டா நிச்சயம் அதுல முத ஆளா * நீதான் இருப் பேன்'னும் சொன்னாங்க."

"அங்க உங்க வேலை என்ன சதாசிவம்?"

"அவங்க என்ன சொல்றாங்களோ அதை செய்யறது தான் வேலை, அவங்களுக்குன்னு ஒரு ரசனை இருக்கு. அதுபடி அவங்க, 'இத இந்தந்த இடத்திலே வைக்க லாம். இத இங்க ஒட்டலாம். இத இங்கே வெட்டலாம்' அப்படின்னு சொல் வாங்க. இப்படி வெட்டுறதும், ஒட் டறதும், மாட்டுறதும் நான் செய்வேன். அந்தம்மாவோட பழகி பழகி எனக்கும் சில விஷயங்கள் நல்லா தெரிஞ்சி போச்சு. எந்த இடத்தில் எதை வெச்சா நல்லா இருக் குன்னு ஒரு பார்வை வந்திடுச்சு. அதை நான் இன்னும் நல்லா 'டெவலப் பண்ணிக்கணும். இதுக்குன்னு புஸ்த கங்கள் இருக்கு. ஆயிரக்கணக்கான ரூபாய்ங்க போட்டு அந்த புஸ்தகங்களை வாங்கணும். எந்த பக்கம் போற துன்னு தெரியாததான் தடுமாறி உக்காந்து கிட்டிருக் கேன்"

"பட்டணத்தில இதே தொழில் செய்யறவங்க வேற யாரும் உங்களைக் கூப்பிடலையா?"

"நிறைய பேர் கூப்பிட்டாங்க. வந்து காண்ட்ராக்ட்ல சைன் போடு. நீ வாங்கினதைவிட ஆயிரம் ரூபாய் ஜாஸ்தி தரேன்னாங்க. எனக்கு அதில அவ்ளோ விருப் பமில்லே."

"ஏங்க?"

"இந்தம்மா மென்மையா நடத்தினது மாதிரி மத்தவங்க நடத்துவாங்களானு தெரியலை. அதுவும் தவிர, என் னைவிட சர்வீஸ் அதிகம் உள்ள ஆளுங்க அங்க இருக் காங்க. அவங்க என்னை போட்டியா நினைப்பாங்க. நான் அங்க போறது புடிக்காம இருப்பாங்க. அதையெல்

லாம் தவிர்க்கறதுக் காகத்தான் நான் அங்கெல்லாம் போகலை.

ஒருவேளை அந்தம்மா கூப்பிடலைன்னா, நான் பெங்க ளூருக்கோ, இல்ல பாம்பேவுக்கோ போயிடறதா இருக் கேன். டெல்லிகூட நல்ல இடம்னுதான் சொல்றாங்க."

"ஏண்டா சம்பாதிக்கலைன்னு அப்பா, அம்மா கேக்க லையா?"

"இந்த மாசம் கோட்டா ஏழாயிரம் ரூபா கொடுக்கணும். அதை கொடுத்துட்டேன். யாரும் ஒண்ணும் வாயே திறக்கலை. நான் ஊருக்கு வந்து இருவது நாள்தானே ஆவுது."

"தியாகராஜன் உங்களைப் பத்தி ரொம்ப நல்லா சொன் னாரு தம்பி. 'என்ன பணிவு, என்ன அடக்கம். நான் படிக்கற கல்வெட்டு தனக்கு சம்பந்தமில்லாத விஷயமா நினைக்காத, அது என்னன்னு கேட்டுக்கிட்டு அர்த்தம் தெரிஞ்சு அதை ரசிச்சு பார்க்கற ஒரு மனோபாவம் அந்த தம்பிகிட்டே இருக்கு. 'எனக்கு சோழ சாம்ராஜ் ஜியம் பத்தி சொல்லுங்கய்யா' அப்படின்னு சாதாரணமா கேட்டுட்டாரு. ஒரு நாள்ல சொல்ற விஷயமா. என் னால முடிஞ்சது. ஒரு பத்து, பதினஞ்சு நிமிஷம் சொன் னேன். புள்ளை பிசிறுதட்டாத கேட்டிச்சு. இந்த மாதிரி ஆளுங்க அபூர்வம். கல்வெட்டை எப்படிச் சுத்தம் பண் ணணும்னு ஒரு தடவைதான் சொன்னேன். மடமடன்னு வேலையில் இறங்கிடிச்சி. ஒண்ணு, ரெண்டு இல்ல. பதி னஞ்சு கல்வெட்டு. அத்தனையும் சுத்தமா துடைச்சி, கழுவி படிக்கற துக்கு வாட்டமா செய்திருச்சு. கொஞ்சம் கூட அசரலை. நிறைய பேர் நம்மூர்ல சோம்பேறிங்களா இருக்காங்க. இப்படிச் சுறுசுறுப்பா ஒரு ஆள் பார்த்தா ரொம்ப சந்தோஷமா இருக்கு' அப்படின்னு சொல்லி சொல்லி புகழ்ந்தாரு. காசே வாங்கிக்க மாட்டேன்னு

சொல்லிட்டீங்களாமே. அதைச் சொல்லி ரொம்ப வருத் தப்பட்டாரு."

"எதுக்குங்க அவருகிட்ட போய் காசு வாங்கறது?"

"இல்ல. அவரும் ஆராய்ச்சியெல்லாம் பண்ணி எதனா சம்பாதிப்பாரு இல்லீங்களா?"

"என்னங்க ஒரு பேராசிரியருக்கு பெரிசா கிடைச்சிடப் போவுது... கைக்காசை விட்டுத்தான் அவரு செலவு பண்றதா தெரியுதே தவிர, சம்பாதிக்கற மாதிரி தெரி யலை. ஏதோ காலேஜ்ல லெக்சரரா இருக்காரு. அதனால வண்டி ஓடுது. மத்தபடிக்கு அவருகிட்டேயி ருந்து காசு வாங்கறது எனக்கு பிடிக்கலை ஐயா. அவ ருகிட்டேயிருந்து நான் விஷயம் தெரிஞ்சுகிட்டேனே. அதுக்கு நான் இல்ல காசு கொடுக்கணும்."

"சரி, தம்பி. அப்புறம் வீட்டுப்பக்கம் வாங்க. டக்குன்னு சைக்கிள் வாங்கி கொடுத்ததுக்கு நான் ஏதாவது செய் யணும். நீங்க போலீஸ்ல இருநூத்தி அம்பது ரூபா கொடுத்ததா சொன்னாங்க. அதையாவது வாங்கிக்க லாம் இல்லீங்களா?'

"வேணாங்க, சும்மா என்னுடைய அன்பா இருக்கட்டும்."

"இப்படி அன்பு பண்றதுக்கு நாங்க உங்களுக்கு ரொம்ப கிட்ட நெருங்கி வந்துட்டமா என்ன?"

"நெருங்கி வந்துட்டதாதான் நெனைச்சிக்குங்களேன் வேணான்னா தள்ளிடுங்க.'

"இனிமே உங்களை தள்ளமுடியாது தம்பி. ஆனா, என்ன இருந்தாலும், நீங்க இரட்டைக்கரை. நான் மூணு கரை."

"அட போங்க. ஏதோ பொழுதுபோறதுக்காக கட்சியிலே சேர்ந்தோமே தவிர, ஒருத்தரை ஒருத்தர் கடிச்சிக்கற துக்காக சேரலை. நான் அப்படிப்பட்ட ஆள் இல்லீங்க.

ஆனா, வெளிய நீங்களும், நானும் ஒண்ணா நடந்து போனா எதனா சொல்லத் தான் சொல்லுவானுங்க."

"சொல்லிட்டுப் போறானுங்க. நான் அதெல்லாம் பார்க்கப்போறது இல்ல. உங்களுக்கு சௌகர்யமா இருந்தா வந்துட்டுப் போங்க. அசௌகர்யம்னா வேணாம்."

"அடப்போங்க. என்னை யாரு கேக்கறதுக்கு இருக்கு." சதாசிவம் நெஞ்சை நிமிர்த்தி சொன்னான்.

"வந்தீங்கன்னா உங்களால சில காரியம் ஆவும்." - துர்கா தேவியின் அப்பா சொல்லிவிட்டுப் போனார்.

'என்ன காரியம்?' - சதாசிவம் யோசித்தான்.

அவர் பேசிவிட்டுப் போன மூன்றாம் நாள் காட்டு மன்னார்கோவில் பஸ் ஸ்டாண்டில் பஸ் மறியல் நடந்தது. ஏதோ ஒரு கொடிக்கம்பத்தை எவரோ வெட்டிவிட்டதாகவும், எவர் வெட்டியது என்று தெரியாமல் எதிர்பட்டவரை யெல்லாம் எவரோ அடித்ததாகவும், அடித்தவரை ஒரு கும்பல் தாக்கியதாகவும், அவர் உடல்நிலை மோசமாகி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டிருப்பதாகவும், அதைப் பற்றி உடனடியாய் நீதி விசாரணை நடத்தக் கோரி பஸ் மறியல் நடப்பதாகவும் சொல்லப்பட்டது.

"எல்லாம் கலைஞ்சு போங்கப்பா. சும்மா எல்லோரும் இதேமாதிரி திரும்ப திரும்ப செய்துகிட்டு..." என்று சமாதானத்திற்கு போன துர்காதேவியின் அப்பாவையும் அதிரடிப்படை லாரியிலிருந்து இறங்கி அள்ளிக் கொண்டு போயிற்று.

"கூட்டம் கூடாதீங்க. மறியல்லாம் வேணாம்னு சொன்னது தப்பாடா. அதுக்காடா அள்ளி கொண்ணாந்திட்டீங்க, அராஜக ஆட்சிடா!" - ஸ்டேஷனில் துர்காதேவியின் தகப்பனார் உரத்துக் கத்த, போலீஸ்காரர்கள் அவரை எதிர்க்கட்சி என்று இனங் கண்டுகொண்டார்

கள். அவர்தான் எல்லாக் கலவரத்துக்கும் காரணம் என்று சொல்லி, குற்றம் சாட்டப்பட்டுள்ளவர்களில் அவரின் பெயரை ஐந்தாவதாக இடம்பெறச் செய்தார்கள். பொதுமக்களுடைய அமைதிக்கு பங்கம் விளைவித்ததாகவும், கையில் ஆயுதங்களுடன் குறுக்கும் நெடுக்கும் நடந்ததாகவும், பலரை பயமுறுத்தியதாகவும், அரசாங்க ஊழியர்களை வேலை செய்யவிடாமல் தடுத்த தாகவும் பல வழக்குகள் அவர்மீது போடப்பட்டன.

"போடுறா... கொலை கேஸ் போடுறா. எத்தினி நாள்டா இந்த ஆட்சி நடக்கும். எங்க ஆட்சி வராதா... எங்க ஆட்சி நடக்கும்போது கைகட்டி நின்னவுங்கதானடா நீங்கள் லாம்... தலைவரு எப்ப வருவாரு, எப்ப வருவாருன்னு எங்கிட்ட வந்து டைம் கேட்டவன்தானடா நீ. இன்னிக்கு என் மேல வழக்கு போடறியா. போட்டுக்க. ஆனா, காலம் மாறும். சொல்லி வைக்கறேன்." - அவர் கத்த, போலீஸ் காரர்கள் மௌனமாய் உள்ளுக்குள் கறுவிக் கொண் டார்கள். எப்படியாவது கிழவனை எகிற வைத்து, பச் சென்று நான்கு அடிகள் கொடுத்துவிடவேண்டும் என்று தீர்மானித்தார்கள்.

"ஏதோ சின்னப்பசங்க, முதல்ல முரட்டுத்தனமா நடந் துக்குவானுங்க. நாம மிரட்டினா ஓடிப்போயிடுவானுங்க. அப்படின்னுதான் இதுவரைக்கும் அரசியல் இருந்தது. இப்ப கிழப் பன்னாடைல்லாம் ஆட ஆரம்பிச்சிட்டா னுங்க. நம்மளால முன்னையும் போக முடியலை. பின் னேயும் போக முடியலை" என்று ஒரு போலீஸ்காரன் இன்னொரு போலீஸ் காரனைப் பார்த்துப் பேச, துர்கா தேவியின் அப்பா கடும் சினம் கொண்டார்.

"நீ ஆம்பளையா இருந்தா இதே வார்த்தையை வெளி யிலே வந்து சொல்லுடா" என்று சட்டையை மடக்கினார்.

அந்த போலீஸ்காரன் அவர் தோளைப் பிடித்து உட்கார வைத்தார். உட்கார வைக்கிறபோது அடிக்குரலில், “நீயெல்லாம் செருப்படி பட்டாதான் வழிக்கு வருவே” என்று பல்லைக் கடித்துக் கொண்டு பேசினான். “அடிப்பியா, அடிடா பார்க்கலாம்” என்று அவனைத் தள்ளி விட்டு அவர் எகிற, அவன் பின்னடைந்து வேகமாய் சுவரில் மோதிக் கொண்டு தடேரென்று தரையில் உட்கார்ந்தான். பார்த்தவர்கள் அத்தனை பேருக்கும் அது நாடகம் என்று தெரிந்தது.

ஒரு போலீஸ் இன்ஸ்பெக்டர் முன்னேறி, துர்கா தேவியின் தகப்பன் கன்னத்தில் பளீரென்று அறைந்தார். அடுத்த போலீஸ்காரன் முதுகில் அடித்தான். மற்றவன் தலையில் அடித்தான். இன்னும் ஒருவன் தம் பூட்ஸ் காலால் சுண்டுவிரலை மிதித்தான். அடுத்தவன் முழங்காலுக்கு கீழுள்ள எலும்புப்பகுதியை எட்டி உதைத்தான். அவர்கள் அனைவரும் அவர் கழுத்தை அழுத்திப் பிடித்து சரமாரியாய் லட்டியால் பின்பக்கம் தாக்கினார்கள். இரண்டரை நிமிடத்தில் இருபது முப்பது அடிகள் வாங்கி அவர் கதறத் துவங்கினார்.

சதாசிவம் பஸ்ஸேறி சிதம்பரம் போவதற்குள், அவர் அடி வாங்கிய வேகம் தாங்காமல் அரைமயக்க நிலைக்கு போயிருந்தார். ஐம்பத்து மூன்று வயது ஆளை போலீஸ்காரர்கள் அடித்து வராண்டாவில் கிடத்தியிருப்பது பார்த்து சதாசிவத்திற்கு கோபம் வந்துவிட்டது. அந்த கோபத்திற்கு அவரின் ஐம்பத்து மூணு வயதோ, அவரைத் தெரியும் என்பதோ காரணமில்லை. உள்ளூர துர்காதேவியின் மீதிருந்த காதல்தான் அப்போதைக்கு அவனுடைய கோபத்துக்கு முக்கிய காரணமாக இருந்தது.

“என்னங்க. என்னங்க நடக்குது இங்க. அவர் எதிர்க்கட்சியா இருக்கலாம். ஆனா நம்மூர்க்காரரு. நம்மூர்க்

காரரை எங்கியோ இருக்கிற சிதம்பரம் போலீஸ்காரன் மடக்கிப் போட்டு அடிக்கிறான்னா, நீங்கள்லாம் பின்கை கட்டிக்கினு வேடிக்கை பார்த்துட்டு இருப்பீங்களா... இவரு கல்லு எடுத்தாருன்னு எவனாவது ஒருத்தனை சாட்சி சொல்லச் சொல்லுய்யா. இவரு கட்டை எடுத்தாருன்னு யாராவது ஒருத்தனை பேசச் சொல்லுய்யா. நான் அப்புறம் பார்த்துக்குறேன்" என்று நடு போலீஸ் ஸ்டேஷனில் நின்று சதாசிவம் கத்த, அவன் எந்த கட்சி என்ற சந்தேகம் எல்லோருக்கும் எழுந்தது.

"அந்த கிழவர் பஸ் ஸ்டாண்டில் கலாட்டா பண்ணலை தம்பி. போலீஸ் ஸ்டேஷன்ல வந்து கலாட்டா பண்ணாரு. எகத்தாளமா பேசினாரு."

"போலீஸ்காரங்க மரியாதையா நடத்தினா எதுக்கு எகத்தாளமா பேசப் போறாரு. அவரைக் கைது பண்ண வேண்டிய அவசியம் என்ன... நம்மூர் ஆளை இங்க கொண்டாந்து அசிங்கப்படுத்தறீங்க. இது தப்பு."

உள்ளூர் எம்.எல்.ஏ-விடம் சதாசிவம் முறைக்க, அவரை மட்டும் கழற்றிவிட முடியுமா என்று எம்.எல்.ஏ. சிதம்பரம் ஆய்வாளரிடம் கேட்க, அதற்குள் சென்னையிலிருந்து ஒரு உயரதிகாரியின் போன் வந்து சகலரையும் விடுவிக்க உத்தரவு கொடுத்தது. வரும் வாரம் காட்டுமன்னார்கோவிலில் ஒரு சமூக கூடம் திறந்து வைப்பதற்காக மந்திரிகள் வருகின்ற நிகழ்ச்சி இருப்பதால் இந்த விஷயத்தை பெரிதுபடுத்த வேண்டாம் என்றும், எவ்வளவு சமாதானமாகப் போக வேண்டுமோ, அவ்வளவு சமாதானமாகப் போக வேண்டும் என்றும், அனுசரித்து நடந்து கொள்ளுமாறும் கட்சித் தலைவர்களுக்கு உத்தரவிடப்பட்டது.

ஆளுங்கட்சி அனுசரித்துப் போக வேண்டும் என்று சொன்னதால் போலீஸ் சட்டென்று சாய்ந்தது. அவரை

எழுப்பி ஜீப்பில் உட்கார வைத்தது. சதாசிவத்தையும் ஏற்றிக் கொண்டது. இருவரையும் காட்டுமன்னார்கோவில் எல்லையில் இறக்கிவிட்டு வேறுபக்கம் போயிற்று. அங்கிருந்து ஆட்டோ பிடித்துவிட்டு வாசலுக்கு கைத்தாங்கலாய், துர்கா தேவியின் அப்பாவை சதாசிவம் கொண்டுவந்துவிட்டான்.

அவர் வந்த செய்தி ஊர் முழுவதும் பரவ, தபதபவென்று சைக்கிளிலும், ஸ்கூட்டரிலும், மோட்டார் சைக்கிளிலும் ஆட்கள் வந்து வீட்டு வாசலில் குவிந்தார்கள்.

"ஏங்க அடிச்சான், அடிக்கறவரைக்கும் ஏங்க பார்த்துக்கிட்டு இருந்தீங்க" என்று முறைப்பாக ஜனங்கள் அவரிடம் பேசினார்கள். அவர் கட்சி ஆட்கள். 'வாருங்கள், மறுபடியும் புகார் கொடுப்போம்' என்று அவரை உசுப்பேற்றினார்கள் ஆனால், விடுவித்து வந்தது சதாசிவம் என்றதும் லேசாய் வியந்தார்கள். 'இவன் என்னா டக்குன்னு இங்க ஒட்டறான், ஒண்ணும் புரியலையே. கட்சி மாறப் போறானா' என்று தங்களுக்குள் பேசிக் கொண்டார்கள். 'இந்த நேரம் போய் இவன் கட்சி மாறினா, அதைவிட முட்டாள் தனம் வேற எதுவும் இல்ல' என்று தீர்மானித்தார்கள்.

"ஒருவேளை இவரைத் தன் கட்சிக்கு இழுக்கறானோ?"

"இவரை இழுத்து என்ன, இழுக்காத என்னய்யா. இவரு பெரிய பேச்சாளியா. சாதாரண பொதுஜனம்தானே. சும்மா கும்பல்ல வந்து கைதட்டி நிக்கிறவரு. வயசாளி, அனுபவஸ்தருன்னு வேணா வைச்சுக்கலாம். மத்தபடி இவரெல்லாம் கட்சிக்கு வந்து ஒண்ணும் லாபம் இல்லய்யா. சரி... என்னத்துக்கு இவன் அவரு பக்கம் சாயறான்?"

“இவரு பங்காளி ஒருத்தன் கல்வெட்டு ஆராய்ச்சி பண்றான் போல. கூடவே இவன் சுத்தறான் போல. அதில ஏதோ, பத்தோ பதினஞ்சோ பீராயறான்போல இருக்கு.'

“இருக்கும், இருக்கும். அஞ்சு ரூபா கிடைச்சா நம்மூரு ஆளுங்க எதுவேணா செய்வானுங்க” என்று தொடர்ந்து ஊர் பேசிக்கொண்டு போயிற்று. யாருக்கும் துர்காதேவியின் மீதோ, சதாசிவத்தின் மீதோ எந்த சந்தேகமும் வரவில்லை.

சதாசிவம் விடைபெற்றுக்கிளம்பும்போது, “ஒருநிமிஷம்! உள்ள வாங்க.”ஹாலிலிருந்து சமையலறைக்குள் துர்காதேவி அழைத்தாள். சமையலறை தாண்டி கொல்லைப் பக்கம் கூட்டிக்கொண்டு போனாள்.

“நான் எதனா தப்பா நடந்திருந்தா மன்னிச்சிக்குங்க. உங்களைத் தவிர வேற யாராலயும் அப்பாவை வெளிய கொண்டாந்திருக்க முடியாது. எங்க குடும்பத்து மேல மதிப்பு வைச்சு, அப்பா மேல பிரியம் வைச்சு அவரை டக்குன்னு வெளிய கொண்டாந்தீங்களே... எனக்கு ரொம்ப சந்தோஷம்! அப்பா அரசியல்ல ஈடுபடாம நாம பாட்டுக்கு நம்ம வேலையைப் பார்த்துக்கிட்டு இருக்கலாம். எங்கப்பா அதைச் செய்ய மாட்டேன்றாரு. தயவு செய்து அதை அவருக்கு சொல்விட்டுப் போங்க. அவரால அடி தாங்க முடியுமா, சண்டை போட முடியுமா. ஏற்கெனவே நெஞ்சுவலி, நெஞ்சு வலின்னு சொல்லிக்கிட்டு இருக்காரு. காலையில் எழுந்தா பத்து நிமிஷம் இருமிட்டு தான் நிமிர்ந்து உட்காரமுடியும். உடம்பு இப்படி இருக்கச் சொல்ல போலீஸ் ஸ்டேஷன்ல போய் அடி வாங்கிட்டு வந்தா நல்லாவா இருக்கு...” என்று கண்களில் நீர் தளும்ப சொன்னாள்.

“தயவுசெய்து இன்னொரு உதவியும் செய்யணும். தினம் எங்க வீட்டுக்கு வந்துட்டுப் போகணும். அப்பா எழுந்து

நடமாட ஒரு வாரம் ஆகும்னு நினைக்கிறேன். முழங்கால் லல்லாம் நல்லா அடிப்பட்டிருக்கு. சுண்டுவிரல் காயம் இப்போதைக்கு ஆறப்போறது இல்லே" - அவள் கவலையோடு பேச, அவன் தினமும் வந்துபோவதாய் ஒத்துக்கொண்டான்.

மறுநாள் காலை பத்து மணிக்கு அவள் வீட்டிற்குப் போனான். துர்காதேவியின் தகப்பனார் தூங்கிக்கொண்டிருப்பதாய்க் கேள்விப்பட்டு, கூடத்தில் உட்கார்ந்தான். அவள் அவன் எதிரே வந்து அமர்ந்து கொண்டாள்.

"இந்த ஹாலை வேற மாதிரி பண்ணக்கூடாதுங்களா?"

"எப்படி?" - துர்காதேவி ஆவலோடு கேட்டாள்.

"நான் கொஞ்சம்... இந்த இடத்தை வேற மாதிரி செய்து தரட்டுங்களா?"

"நல்லா செய்யுங்களேன்."

"ஒட்டடைக்குச்சி, துடைப்பம் கெண்டாங்க."

"எதுக்கு?"

"முதல்ல ஒரு இடத்தை சுத்தமா வெச்சிக்கணும். மேல நூலாம்படை தொங்குது பாருங்க. அதெல்லாம் எடுக்கணும்."

"அதெல்லாம் நானே எடுத்துடறேன்."

"இல்ல... பரவாயில்ல. கொடுங்க நான் எடுக்கறேன்."

அவர்கள் இருவரும் அந்த இடத்தைச் சுத்தம் செய்யத் தொடங்கினார்கள். அவன் காலண்டரை இடம் மாற்றினான் நாற்காலியை வேறுவிதமாகப் போட்டான். டி.வி-யை வாசற்படிக்கு நேர் எதிரே போட்டு வாசற்படிக்கு முதுகு காட்டி, உட்கார்ந்து டி.வி. பார்க்கும்படி செய்தான்.

“வாசல்லே யார் வர்றாங்கன்னு தெரியாம போயிடுமேன்னுதான் நாங்க இப்படிப் போட்டோம்.” - துர்காதேவி சொன்னாள்.

“இங்க ஒரு நிலைக்காண்டி. ஆறடிக்கு ரெண்டடி அளவுக்கு வைச்சிட்டோம்னாக்கா, இங்க உக்காந்தபடியே வாசல்ல யாரு வர்றாங்கன்னு பார்த்துக்கலாம். நாம இங்க உட்கார்ந்து இருக்கறதும் வெளியே இருக்கறவங்களுக்கு நிச்சயமா தெரியாது. இங்க ஒரு கண்ணாடி கொண்டு வந்து மாட்டிடட்டுங்களா...!“

“கடவுளே... நானே மாட்டணும்னு நினைச்சிட்டிருந்தேன்.” - துர்காதேவி வியந்து சொன்னாள்.

மறுநாள் கண்ணாடி கொண்டுவந்து மாட்டினான். அடுத்தநாள் தரையிலுள்ள ஓட்டைகளை வெள்ளை சிமெண்ட் கொண்டு அடைத்தான். உத்திரக்கட்டையிலிருந்து பறக்கும் மரக்கொக்கு பொம்மையைத் தொங்கவிட்டான். பூத்தொட்டிகளை வராண்டாவுக்கு இடம் மாற்றினான். தோட்டத்தில் வாழைக்கு அடுத்தாற்போலிருந்த சதுப்பு நிலத்தை சரிசெய்து மேலே ஈரமணல் கொட்டி காசித்தும்பைச் செடிகள் நட்டான். சுவரோரம் சூரியகாந்திச் செடிகள் பயிரிட்டான். சிவன் கோயிலுக்கு பக்கத்திலிருந்த காட்டிலிருந்து செண்பக மரத்தின் கன்று ஒன்றை பிடுங்கிக் கொண்டுவந்து, கொல்லைப்புறம் நல்ல இடமாகப் பார்த்து நட்டு உரம் போட்டான். சமையலறையில் நிச்சயமாக புகையை வெளியேக்கும் மின்விசிறி வேண்டுமென்று யோசனை சொன்னான். அறு நூறு ரூபாய் வாங்கிக்கொண்டு போய், அந்த மின் விசிறி வாங்கி வந்து, சமையலறை ஜன்னலில் சட்டமடித்து மாட்டினான்.

“அப்பா... உங்களுக்கு புண்ணியமா போகும். எவ்வளவு பெரிய உதவி செய்திருக்கீங்க தெரியுமா... அடுப்

பைப் பத்தவைச்சுட்டு நான் வெளிய போயிடுவேன். புகை அடங்கின பிறகுதான் உள்ள வருவேன். உள்ள நுழையறபோதெல்லாம் மூக்கு அரிக்கும். சிந்தி சிந்தி மூக்கு ரெண்டு பக்கமும் எரியும், நல்லவேளையா இந்த ஃபேனை போட்டீங்க. இப்படிப் போட ணுன்னே எங் களுக்குத் தெரியலை."துர்காதேவியின் அம்மா புலம்ப லாய் அவனைப் பாராட்டினாள்.

துர்காதேவியின் அப்பாவுக்கு கால் சுண்டு விரல் காயம் முற்றிலுமாக ஆறிய போது, அவர்கள் இரண்டு பேர் மன திலும் காதல் வேரூன்றி சிறிய நாற்றாய் வளர்ந்துவிட் டது. ஒரு நாள் பார்க்கவில்லையென்றால் மனம் பரித வித்தது. 'எங்கே, எங்கே' என்று கண்கள் தேடின. யார் புடவையோடு அசைந்தாலும் துர்காதானோ என்று ஒரு பரபரப்பு சதா சிவத்தின் மனதிற்குள் ஏற்பட்டு விட்டது. வாசலில் யார் மணி அடித்தாலும், துர்காதேவி துள்ளிக் குதித்து ஓடி, சதாசிவத்தின் எதிர்பார்ப்போடே கதவு திறந்தாள். எட்டிலிருந்து ஒன்பதரை மணிக்குள் சீராக உடுத்தி, பல முறை கண்ணாடி முன் நின்று தலை யைச் சரிசெய்து கொண்டாள். ஆடைகளை ஒழுங்கு படுத்திக் கொண்டாள். பத்து மணிக்கு அவன் வருகின்ற நேரத்தை எதிர்பார்த்து காத்திருந்தாள். அவன் வந்தபி றகு முகம் மாறினாள். அதிகம் சிரித்தாள். அதிகம் பேசி னாள். அதிகம் குறை சொன்னாள். அதிகம் கேலி செய் தாள்.

சதாசிவத்திற்கு லண்டனிலிருந்து போன் வந்தது. உடனே சென்னைக்கு கிளம்பி, 'பிரிட்டிஷ் கான்சலேட் ஜெனரலில்' போய் விசாவுக்கான ஏற்பாட்டை கவனியுங் கள் என்று அவனுடைய எஜமானி கட்டளையிட சதாசி வம், துர்காதேவியிடம் விடைபெற்றுக் கொண்டு சென் னைக்கு ஓடினான்.

“போன மாசம் லண்டனுக்கப் போன பெண்மணியை நம்பி, இந்த மாதம் நீ போக விசா கேட்கிறாயா. லண்டனில் அவள்தான் உனக்கு பாதுகாப்பா. அவள்தான் உனக்கு உத்தரவாதமா... அப்படியானால் விசா தரமுடியாது. லண்டன் வாழ் மக்கள் நடத்தும் கம்பெனி ஒன்றில் உனக்கு வேலை கிடைக்குமானால், அப்போது உனக்கு விசா வழங்கலாம். அங்கு போய் வேலையே இல்லாத ஒரு பெண்ணோடு சேர்ந்து கொண்டு நீ என்ன வேலை செய்யப்போகிறாய். உங்களுக்கு விசா கிடைப்பது கேள்விக்குறி, உங்களை லண்டனுக்கு அனுப்ப முடியாது” என்று திருப்பி அனுப்பிவிட்டார்கள்.

“சரி, என்ன பண்றது விடு. நீ யாருன்னு தெரியாம, உன்னைப் பத்தி எந்த விவரமும் தெரியாம, வெறுமனே என் பேச்சை நம்பி, இங்க இருக்கிற எந்த கம்பெனியும் நீ லண்டன் வர்றதுக்கு உத்தரவாதம் கொடுக்கறதுக்கு தயாரா இல்ல. நான் கொடுக்கிற உத்தரவாதம் பேதாதுன்னு 'கான்சலேட் ஜெனரல்' சொல்லிடிச்சு. அதனால இன்னும் ஒரு மூணு நாலு மாசம் வெயிட் பண்ணு. நான் என்னுடைய கம்பெனியைத் திறந்த பிறகு உன்னை நிச்சயமா கூப்பிட்டுக்கறேன்” என்று அந்த எஜமானியைத் தொடர்பு கொண்டபோது அவர்களும் கைவிரித்துவிட, சதாசிவம் சோகத்தோடு ஊர் திரும்பினான்.

ஊர் திரும்பிய சதாசிவம், துர்காதேவியைப் போய் பார்ப்பதற்கு வெட்கப்பட்டான். ஆனால், சதாசிவம் வீட்டிற்கு வராததால் துர்காதேவி தவித்துப் போனாள். மறுபடி அவன் வீட்டிற்கு எப்படிப் போவது, போனால் நன்றாக இருக்குமா' என்று பயந்தாள். அப்பாவை அனுப்பவும் அவளுக்குப் பிரியமில்லை.

சதாசிவம் காட்டுமன்னார்கோவிலில் உள்ள சிவன் கோயிலுக்குப் பின்னே படுத்துக் கொண்டிருப்பதாய் துர்காதேவிக்கு யாரோ சொல்ல, அவள் கோயிலுக்குப்

போவது போல் பூக்கூடையோடு போனாள். கோயிலைச் சுற்றி வந்தாள். மண்டபத்தில் அமர்ந்து வாரப் பத்தி ரிகைகள் படித்துக் கொண்டிருந்த சதாசிவம் எதிரிலே உட்கார்ந்தாள். சதாசிவம் அவளைப் பார்த்து விட்டு தலைகுனிந்து கொண்டான்.

“நல்லா இருக்கா நீங்க பண்றது. என்ன ஆச்சு உங் களுக்கு? எவ்ளோ தவிச்சுப்போவேன்னு தெரியாதா. நீங்க ஊருக்கு வந்துட்டீங்க. ஆனா, என்னைப் பார்க்க வரலைன்னா நான் என்னான்னு நினைச்சுக்கறது?

நான் என்ன தெரியுமா நினைச்சேன். ‘லண்டனுக்குப் போறதுக்கு பாஸ்போர்ட், விசால்லாம் கிடைச்சாச்சு. உடனே கிளம்பறதுக்கு ஏற்பாடு நடக்குது. நாளைக்கு காலையிலேயே போயிடுவாங்க. நாம பார்க்க முடியாது. நாம பார்த்து வழி யனுப்ப முடியாத போகுதே அப் படின்னு பயந்தேன். நீங்க போகலைன்றதுக்கு வருத் தப்பட்டு உக்காந்திருப்பீங்கன்னு நான் நினைக்கவே இல்லை. இப்ப என்ன... போகலைன்னா... மூணு மாசம் கழிச்சுப் போகப் போறீங்க. அவ்வளவுதானே... மெல்ல போய்க்கலாம். இதுக்குப் போயி வீட்டுக்கு வராத இருப் பாங்களா...

உங்க மனசுலே என்ன இருக்கோ எனக்குத் தெரியலை. என் மனசுல இருக்கறதை வெக்கமில்லாம சொல்றேன். இந்த நாலு நாள், நீங்க மெட்ராஸ்ல இருந்த நாலு நாள் என் புத்தி என்னான்னு எனக்குத் தெரிஞ்சு போச்சு. என் மனசு என் னான்னு எனக்கு புரிஞ்சி போச்சு. நான் உங் களைக் கல்யாணம் பண்ணிக்கறதுக்கு தயார். உங்க ளுக்கு என்னைப் பிடிச்சிருந்ததுன்னா, வீட்டுக்கு வந்து அப்பாகிட்ட ஒரு வார்த்தை சொன்னீங்கன்னா போதும். ரொம்ப சந்தோஷமா என்னைத் தூக்கி உங்ககிட்ட கொடுத்துடுவாரு. அப்பா வார்த்தைக்கு வார்த்தை, பேச்சுக்கு பேச்சு உங்களைப் பத்திதான் ‘ஆஹா,

ஓஹோ'ன்னு சொல்லிக்கிட்டிருக்காரு. நீங்க வராத துல அப்பாவுக்கும் வருத்தம். தயவுசெய்து வீட்டுக்கு வாங்க. வீட்டுக்கு வந்து ஏன் வரலைங்கிறதை அப்பா கிட்ட தெளிவா சொல்லிடுங்க. இல்லைன்னா, அப்பா ரொம்ப வருத்தப்படுவாரு. அவர் மனசு எப்படின்னு உங் களுக்கே நல்லா தெரி யும். அப்பாவுக்கு வார்த்தை தாங்காது. எதிராளி மூஞ்சியைத் தூக்கறாங்கன்னா அப்பா தவிச்சுப் போயிடுவாரு. தயவுசெய்து புஸ்தகத் தையெல்லாம் தூக்கிப் போட்டுட்டு, வீட்டிற்கு வந்து என் னன்னு சொல்லுங்க." அவள் எழுந்து கோயிலை வலமா கச் சுற்றிக்கொண்டு வீட்டிற்குப் போனாள்.

அவள் போன பத்து நிமிடம் கழித்து சதாசிவம் அவள் வீட்டிற்குள் நுழைந்தான்.

"ஏம்ப்பா... இங்க ஏதோ கனெக்ஷனாயிடுச்சு போல இருக்கே" என்று ஊர் மக்கள் அவன் துர்காதேவியின் வீட்டிற்குள் நுழைவதைப் பார்த்து பேசிக்கொண்டார் கள்.

"இந்தப் பொண்ணு இப்பதான் கொஞ்ச நேரத் துக்கு முன்னாடி கோயிலுக்கு பூக்கூடையோட போச்சு. பொண்ணு இப்ப திரும்பி வருது. பின்னாடியே பத்து நிமி ஷம் கழிச்சி இந்தப் பையன் வர்றான்னா, என்ன அர்த் தம்... கோயில்ல பேசி இருக்காங்கன்னு அர்த்தம்."

"அப்போ... கோயில்ல பேசின ஆளு மறுபடியும் இங்க வர்றான்னா என்ன அர்த்தம்?"

"கோயில்ல பேசினது போதாது. வீட்டுக்கு வா, பேச லாம்னு அந்த பொண்ணு கூப்பிட்டிருக்குன்னு அர்த் தம்!"

"ஒரு பொண்ணு ஒரு ஆணை வீட்டுக்கு வான்னு கூப் பிட்டா என்ன அர்த்தம்?"

“பொண்ணு துணிஞ்சுடுச்சின்னு அர்த்தம்.”

“பொண்ணு துணிஞ்சுட்டா என்ன ஆகும்?”

“ஒண்ணு, கல்யாணம் ஆகும். இல்ல, ஊரை விட்டு ஓடும். இது ஊரைவிட்டு ஓடுற வகைன்னு நெனைக்கி றேன்.”

“எப்படிச் சொல்றே?”

“எனக்கு சதாசிவம் வீட்டைப்பத்தி நல்லா தெரியும். அவங்க வீட்டுல இந்த ஆட்டத்துக்கெல்லாம் ஒத்துக்க மாட்டாங்க. அவங்கம்மா பெரிய கேடி. எதிரே வந்து நிக் கறவனை எடைபோட்ட பிறகுதான், 'என்ன வேணும்' அப்படின்னு கேள்வியே கேக்கும். அதுவரைக்கும் வேணும்னே முறைச்சி பார்த்துக்கிட்டிருக்கும். அப்பாவி மாதிரி நடிக்கும். காது கேக்காத மாதிரி நிக்கும். ஆனா, அது கண்ணு, காது, வாயி எல்லாம் பவர்ஃபுல்! எதிராளி முட்டாளாகற வரைக்கும் மௌனமா இருந்துட்டு, அப்பு றம் இடது, வலதா பிய்ச்சி எடுத்துடும்.'

“அப்ப... நம்ம ஊர்ல ஒரு காதல் சண்டை இருக்குன்னு சொல்லு.”

“ஆமா... போலீஸ் ஸ்டேஷன் வரைக்கும் போனாலும் போகும்.”

“நாம எதுக்குத்தான் போலீஸ் ஸ்டேஷன் போகாம இருந்திருக்கோம். கொடிமரம் வெட்டறது, சுடுகாட்டுப் பாதை, குழாய் தண்ணிச் சண்டை, தலைவர் சிலை பக் கத்துல ஒண்ணுக்கு போனது, அப்புறம் இந்த மாதிரி காதல் கல்யாணம்... எல்லாத்தையும் நாம போலீஸ் ஸ்டேஷன்ல போய்த்தானே முடிக்கறோம்.”

“சதாசிவம் நல்ல பையனாச்சேப்பா, எந்த வம்புக்கும் போகாம வருவான், பேசுவான், சிரிப்பான், ஓடிப்போயிடு வான். பெரிய பொறுப்பு எடுத்துக்கலைன்னாலும் செய்

யற செயல்ல உறுதியா நிப்பான். ஆனா, இப்ப அந்தப் பக்கம் போய் பொண்ணு பார்க்கறானே... அதான் கவ லையா இருக்கு" - இன்னொருவர் சொன்னார்.

"லவ்வுன்னு வந்திடுச்சின்னா கட்சியாவது, ஒண்ணா வது... பொண்ணுதான்யா முக்கியம். அப்புறம்தான் தலைவரு."

"அப்ப தலைவருதான் முக்கியம்னு சொல்வறனை என் னான்னு சொல்லுவே?"

"பைத்தியம்னு சொல்லுவேன்."

"அப்ப சதாசிவம் கெட்டிக்காரனா?"

"நிச்சயமா கெட்டிக்காரன்."

"எனக்கு என்னமோ இந்தலவ்வு ஒப்பேறும்னுதோ ணலை."

"எனக்குத் தோணுது... ஒப்பேறும்னு. அவன் ஊருக்கு வந்து ஒரு மாசம் ஆச்சு. யாருகிட்டயாவது ஒத்த ரூபா கடன் வாங்கி இருப்பானா... காசு இல்லேன்ற மாதிரி நடந்திருப்பானா... பாக்கெட்ல எப்பவும் நாலு நூறு ரூபா நோட்டு மடிச்சி வைச்சிக்கினு இருக்கான். சிதம்பரம் போறதுக்கு டாக்ஸி பேசினான். டக்குன்னு பஸ் வந்தி டுச்சி. உடனே டாக்ஸியை அம்போன்னு விட்டுட்டு பஸ் ஸில தாவிட்டான். காலையிலே போலீஸ்காரன் அவரை சிதம்பரம் தள்ளிக்கினு போயிருக் கான். சாயந்திரமே கொண்ணாந்துட்டான்னா, துட்டு வீசாதயா கொண் ணாந்திருக்க முடியும்... அத அந்தப் புள்ளை செய்திருக் கான்னா துட்டு இல்லாமயா செய்திருக்க முடியும்... துட்டு இருக்கறவன் தைரியமா பொண்ணைக் கூட்டிக்கினு வெளிய போவானே தவிர, எதுக்கும் பயப்பட மாட்டான். அதனால, சதாசிவத்தை சாதாரணமா எடைபோடாத. கையில துட்டு இல்லாத பசங்கதான் ராவோட, ராவா

ஓடி, திருட்டு ரயில் ஏறி இல்லைன்னா கூட்ஸ் வண்டி யிலே குப்புறப்படுத்து கினு மெட்ராஸ் போறது. இவன் லாம் அப்படி ஓடற ஆள் இல்லை, போயிட்டு வரேன்னு வீட்டுல சொல்லிட்டுப் போற ஆளு."

"அப்ப லவ்வுதான்றியா?"

"என் அபிப்பிராயப்படி ஆமா."

ஊர் ஜனம் சதாசிவத்திற்குத் தெரியாமல், அவன் வாழ்க்கையைப் பற்றி தெரிந்துகொள்வதற்கு, அவன் வாழ்க்கை எந்த திசை மாறும் என்று அறிந்து கொள்வ தற்கு மிக ஆவலாய் காத்துக் கிடந்தது.

விரல்களுக்கு நடுவே சிக்கிக்கொண்ட ரப்பர் பேண்டு போல மனசுக்குள் மாட்டிக்கொண்டு தவித்த காதல், ஒரு காலைப்பொழுதில் பட்டென்று அறுந்து முகத்தில் தெறித்தது.

சதாசிவத்திற்கு முதல் நாள் இரவு முழுவதும் தூக்கமே இல்லை. துர்காதேவி நின்றதும், நடந்ததும், சிரித்ததும், பேசியதும் மனதுக்குள் வலம் வந்துகொண்டே இருந் தன. காலை ஐந்து மணிக்கு எழுந்து பல்தேய்த்து, பஸ்கி தண்டால் எடுத்துவிட்டு, சிறிதுநேரம் வராண்டா வில் கண்மூடி அமர்ந்துவிட்டு, பசித்தவுடன் டீ குடிக்கப் போகலாம் என்று ஆறு மணி இருட்டில் நடந்து டீக்க டைக்குப் போக, அந்த டீக் கடையைவிட இன்னொரு டீக்கடையில் டீ நன்றாக இருக்கும் என்று துர்காதே வியின் வீட்டிற்கருகே மெல்ல நகர, துர்காதேவி வாச லில் கோலம் போட்டுக்கொண்டிருந்தாள். அவன் போய் 'காலை வணக்கம்' என்று சொன்னதும் நிமிர்ந்தாள். முறைத்துப் பார்த்தாள்.

"என்ன ஒண்ணும் பதில் சொல்ல மாட்டேன்றீங்க. உடம் புக்கு ஏதாவது..." லேசாய் திடுக்கிட்டு சதாசிவம் கேட் டான்.

“உடம்புக்கு ஒரு கேடும் இல்லை.” - சற்று அலுப்போடு துர்காதேவி பதில் சொன்னாள்.

“ஏன் ஒரு மாதிரி பேசறீங்க?”

“எனக்கு இதுக்கு மேல தாங்கலை.”

“என்ன சொல்றீங்க?”

“உங்களால எப்படித் தாங்க முடியுதுன்னு எனக்குத் தெரியலை.”

“ஏதாவது புரியும்படியா சொல்றீங்களா?”

“என்னைக் கல்யாணம் பண்ணிக்கிறீங்களா... என்னை லவ் பண்றீங்களா... தயவுசெய்து ஏதாவது வாய்வார்த் தையா சொல்லிட்டுப் போயிடுங்க. முன்னும் பின்னும் நீங்களும் நடக்கிறீங்க. நானும் உங்களை சுத்திக்கிட்டு வரேன். நேத்து ராத்திரி முழுக்க ஒரு பொட்டு தூக் கம் இல்ல, தெரியுமா எழுந்து 'ஓ'ன்னு கத்திடலா மான்னு தோணிச்சு. வீட்டை விட்டு வெளிய வந்து, ரோட்டுல நடந்து, உங்க வீட்டு வாசலுக்கு வந்து வாடா வெளியே'ன்னு கத்தணும் போல ஒரு கோவம். ஆத்தி ரம். பொச பொசன்னு ஒரு ரௌத்திரம் இதப்பத்தி வேற என்ன சொல்றது. எனக்குப் புரியலை. ஏன் இவ்வளவு மாறிப்போனேன். அதுவும் தெரியலை. சரி... காபி குடிச் சீங்களா...”

“இல்லையே- குடிக்கலாம்னுதான் டீக்கடைக்கு வந் தேன்.”

“அங்க இருக்கிற டீக்கடையெல்லாம் விட்டுட்டு இங்க குடிக்கலாம்னு வந்தீங்களா... உள்ள வாங்க. நான் போட்டுத் தர்றேன்...”

“அப்பா...”

“அப்பா தூங்கறாரு. அம்மா தூங்கறாங்க. வாங்க நீங்க”. அவள் கதவு திறந்து அவனை உள்ளே அழைத்தாள்.

அவன் உள்ளே போனான். ஹாலில் துர்காதேவியின் தகப்பன் தூங்கிக் கொண்டிருந்தார். இடப்பக்க அறையில் அவள் அம்மா படுத்திருந்த கால்கள் தெரிந்தன. அவர்கள் சமையல்கட்டுக்குள் நுழைந்தார்கள். சிறிய ஸ்டூலில் அவனை உட்கார வைத்துவிட்டு துர்காதேவி காபி கலந்தாள். அவனுக்கு எதிரே டம்ளர் டபராவை நீட்டினாள். அவன் வாங்கிக் கொள்ள, அவனுக்கு எதிரே முக்கால் டம்ளர் காபியோடு அவளும் உட்கார்ந்தாள்.

எட்டி தொட்டால் அவன் கழுத்தை இறுக்கிக் கொள்ள முடியும் என்ற அளவில் அவள் உட்கார, அவனுக்கு லேசாய் ஒரு பயம் வந்தது. திடீரென்று ஒரு விடியற்காலை வேளையில் அவள் இப்படிப் பேசுவாளென்றோ, வீட்டிற்குள் அழைப்பாள் என்றோ, எல்லோரும் தூங்குகின்ற வீட்டிற்குள் தன்னை எதிரே வைத்துக்கொண்டு உற்றுப்பார்ப்பாள் என்றோ அவன் சிறிதும் நினைக்கவில்லை. பதிலுக்கு அவனும் உற்றுப் பார்த்தபோது அவளுடைய வடிவழகு மேலும் பலமாகத் தாக்கிற்று. ஓரக் கண்ணால் பார்த்துக்கொண்டிருந்த இடுப்புப் பகுதியும் எப்போதாவது கண்ணில் தென்படும் மார்புப் பகுதியும் இப்போது நேர் எதிரே இருந்தன. அவன் நிதானமாகப் பார்த்தான்.

“இவ்வளவு அழகா இருக்கே. என்னைப் போய் ஏன் லவ் பண்றே?” - மெல்லியதாய் ஆச்சரியப்பட்டான்.

“அப்பா... உனக்குள்ளேயும் இப்படி ஒரு எண்ணம் இருக்கா. என்னை உனக்குப் பிடிச்சிருக்கா?” - துர்காதேவி பேசாது கேட்டாள்.

'ஒரு பொண்ணு நீ இப்படி வாயைத் திறந்து பேசியிருக் கன்னா, உள்ளுக்குள்ளே எவ்ளோ அவஸ்தைப்பட்டி ருப்பே.' அவன் அவளையே உற்றுப்பார்த்து மனதிற்குள் பேசினான்.

“என்னா பேச்சையே காணோம்.” - துர்காதேவி அவனை வம்புக்கு இழுத்தாள்.

'பொம்பளையா இருக்கறது ஒருவிதத்துல சௌகர்யம்.” சதாசிவம் சொன்னான்.

'என்ன சௌகர்யம்?'

“பயமில்லாம ஆம்பளைய பாத்து ‘லவ் யூ' சொல்லலாம்.”

“அது எப்படி... ஆம்பளைங்கதான் சொல்வாங்க. நீ ஒண் ணும் வாயைத் திறக்கக் காணோம். அதனால தாங்காம நானே உளறித் தொலைச்சிட்டேன். இப்ப உன் மனசுக் குள்ளே தோணுது இல்ல. 'சரியான கேஸு. அலைஞ் சான்' அப்படின்னு என்னை நினைச்சிக்குவே இல்ல.”

“ச்சீ... வாயை மூடு” - அவன் ஒருமையில் பேசினான். “எப்படிறா சொல்றது அப்படின்னு பயந்துகிட்டு இருந் தேன் ஏதாவது சொல்லித் தொலைச்சோம்னாக்கா இந்த தெரு பக்கமே வராத பண்ணிடுவியோன்னு ஒரு கலவரத்துல இருந்தேன். நீயா சொன்னது வயித்துல பாலை வார்த்தா மாதிரி இருக்கு.”

“அப்போ உனக்கும் அப்படி ஒரு எண்ணம் உண்டா?”

“என்னிக்கு பார்த்தேனோ அப்பவே வந்திடுச்சு.”

“அப்ப ஏன் சொல்லலை?”

“முதல் தடவை வீட்டுக்கு வந்தபோது 'அப்பா, அப்பா'ன்னு கூவுனியே, அந்த மாதிரி கூவிட்டேன்னு வைச்சிக்க. ஊர்ல சும்மா விடுவாங்களா. இதுக்கும் பஸ்

மறியல் நடக்கும். அவன் சொல்ல, அவள் வாய்விட்டுச் சிரித்தாள்.

"சரி... தைரியமா இப்படி என்னைக் கூட்டிக்கிட்டு வந்து உக்காந்திருக்கிறே. அப்பா ஒண்ணும் சொல்ல மாட்டா ரா... அம்மா எதுவும் கத்த மாட்டாங்களா..."

"அவங்க எழுந்துக்கறதுக்கு ஏழு, ஏழரை ஆவும். நானும் ஆறரை மணிக்கு எழுந்திருக்கிறவதான். ஒரு நாலு நாளா ராத்திரி தூக்கமே சரியா இல்ல. பகலெல்லாம் தூங்கித் தூங்கி வழியறேன்."

"ஆனா, நீ இப்படிக் கேட்டதில் ஒரு அழகு இருந்தது. ஒரு விஷயம் ரொம்ப நல்லா இருந்தது." சதாசிவம் முத் தாய்ப் பாய் சொன்னான்.

"என்ன அது?" அவள் இன்னும் நெருங்கிவந்து அவன் முகத்தை ஆவலோடு பார்த்தாள்.

"என்னைக் கல்யாணம் பண்ணிக்கிறியான்னு கேட் டுட்டு தான் என்னைக் காதலிக்கிறியான்னு கேட்கட இல்ல. உனக்கு காதல்னா கல்யாணம்தான். கல்யாணம் இல்லாத ஒரு காதலை உன்னால நெனைச்சே பார்க்க முடியாது இல்ல."

"ஆமா, அப்படித்தான். கல்யாணம் பண்ணிக்கிறேன்னு நீ வாக்குறுதி கொடுத்து, அந்த நம்பிக்கை உன்மேல வந்திடுச்சின்னா. அப்புறம் காதல்ங்கறது என்னன்னு நான் காமிக்கிறேன். அன்பா இருக்கறதுதானே காதல். அன்பை தலையிலே குளிரக் குளிர ஊத்தறதுதானே காதல். பொம்பளையைவிட அன்பை குளிரக் குளிர ஊத்துற ஜென்மம் உலகத்துல வேற ஏதாவது உண்டா. ஆம்பளையால் அப்படிப் பாசம் காட்ட முடியாது. பொம் பளை காதலிக்க ஆரம்பிச்சிட்டா எதனாலும், எவனா லும் தடுக்க முடியாது."

"சரி, இப்ப நான், நீ கேட்ட கேள்விக்கு பதில் சொல்றேன். நான் உன்னைக் கல்யாணம் பண்ணிக்கறேன். என்னிக்கு உன்னைப் பார்த்தேனோ அன்னிக்கே உன்னைப்பத்தி ஒரு மயக்கம் எனக்கு வந்திடுச்சு அது தான் காதலான்னு எனக்குத் தெரியாது. ஒரு செகண்ட் 'அட!' இந்த பொண்ணு கெட்டிக் காரியா இருக்கே. இது நமக்கு வாய்ச்சா நல்லா இருக்குமே' அப்படின்னு தோணும். அப்ப எனக்கு இதை காதல்னு சொல்லவே புடிக்கலை. ஆனா, நேத்து ராத்திரி நானும் தூக்கம் வராம தவிச்சேன். 'யோசிடா, யோசிடா! ஏன் அந்த பொண்ணு ஞாபகமாவே இருக்கே' அப்படின்னு மூளையைக் கசக்கிட்டேன். ஏன் இவளோ யோசனை பண்ணேன். அப்ப எனக்குப் புரிஞ்சுது. இதுக்கு பேரு லவ். உன்னை எனக்கு ரொம்ப பிடிச்சிருக்கு. உன்கிட்ட ஏதோ ஒரு கவர்ச்சி இருக்கு. உடம்பு தாண்டின கவர்ச்சி அது. 'யார் தடுத்தாலும் எது குறுக்க வந்தாலும் எல்லாத்தையும் தூக்கிப் போட்டுட்டு துர்காதேவிதான் என் பொண்டாட்டி, அப்படின்னு திடமா ' சொல்வேன் சரியா!" அவன் அவளுக்கு அருகே போய் மிக நெருக்கமாய் நின்று, அவள் கண்களை உற்றுப் பார்த்தான்.

அவள் இரண்டடி முன்னே வந்தாள். அவன் முழங்காலைத் தொட்டாள். அவனுக்கு உடம்பில் சூடு பரவியது.

அவனும் நெருங்கி வந்தான். இழுத்து அவள் கன்னத்தில் முத்தம் கொடுத்தான். மறு கன்னத்தை அவள் திருப்பிக் காட்ட, அங்கும் இதழ் பதித்தான். அவள் 'தேங்க்யூ' என்று சொன்னாள். காதலிப்பதற்கு விடிகாலைதான் சரியான நேரம் என்று சதாசிவத்திற்கு தோன்றியது. இரண்டு கைகளாலும் அவள் முகத்தை அவன் தேக்கிக் கொண்டான். இன்னும் நெருக்கமாக குனிந்தான். அவளும் அவன் இரண்டு கன்னங் களிலும் அழுந்த முத்தமிட்டாள். அவள் முத்தமிடுகிறபோதே

சதாசிவத்திற்கு காசு பற்றியும், எதிர்காலம் பற்றியும் ஞாபகம் வந்தது.

"எனக்கு என்ன வேலைன்னு தெரியுமா?" சதாசிவம் அவளைப் பார்த்து கேட்டான்.

"அப்பா சொன்னாங்க. இன்டீரியர் டெக்கரேட்டராம். அதில காசு வருமா?"

"சரியா கிளிக்காச்சுன்னா ஏகப்பட்ட காசு வரும். கிளிக்காகறதுக்கு அதிர்ஷ்டம், கடும் உழைப்பு, கெட்டிக்காரத்தனம். பேச்சு சாமர்த்தியம் இப்படி நிறைய விஷயம் தேவைப்படுது. நம்ம ஊரைவிட வெளியூர்ல அதுக்கு ரொம்ப மரியாதை ஜாஸ்தி.

நாங்க வீடு பண்ற இன்டீரியர் டெக்கரேட்டர் இல்ல. ஆபீஸ் பண்ற டெக்கரேட்டர். டேபிள் சேர் முதற்கொண்டு, கண்ணாடி கலர் முதற்கொண்டு லைட் முதற்கொண்டு, ஸ்விட்ச் கலர் முதற்கொண்டு, கார்பெட் முதற்கொண்டு நாங்கதான் தீர்மானம் பண்ணுவோம்."

"லண்டனுக்குப் போகணும்னு காத்திருக்கறதா சொன்னாங்க." துர்காதேவி கேட்டாள். "லண்டனுக்கு போகாம இங்கயே இந்த தொழில்ல பிழைக்க முடியாதா?"

"ஏன் அப்படி கேக்கற துர்கா! நான் லண்டனுக்குப் போறது உனக்குப் பிடிக்கலையா?"

"குடும்பத்தை விட்டுட்டு வெளியே போற விஷயமே எனக்கு புடிக்கலை. மூணு வருஷம், நாலு வருஷம் குடும்பத்தைப் பிரிஞ்சு எங்கயோ போய் கஷ்டப்பட்டு சம்பாதிச்சு ஊருக்கு திரும்பிவந்து ஒரு மூணுமாசம் உக்காந்துட்டு, மறுபடியும் ஒரு மூணு வருஷத்துக்குப் போகணும்னு இருக்கே. அது ரொம்ப கொடுமை. காசு சம்பாதிக்கறதுக்கு மட்டுமே வாழ்க்கைங்கற மாதிரி ஆயிடுது. அப்படிப் போனா, வீடு, வாசல், தோப்பு, தொர

வோட ரொம்ப நல்லா இருக்கலாம். அப்படின்னு பல பேர் நினைக்கிறாங்க. ஆனா, வாழ்க்கைங்கறது வீடு, வாசல், தோப்பு, தொரவு மட்டுமே இல்ல. புருஷன், பொண்டாட்டி, குழந்தைங்க தினம் பார்த்துக்கற, தினம் பேசிக்கிற ஒருத்தரை ஒருத்தர் உற்சாகப்படுத்தற ஒரு விஷயம் அது. நீ லண்டன் போயிட்டபிறகு நான் யாரோட பேசறது. என்னன்னு பேசறது. எதுக்குப் பேசறது. உங்களுக்குள்ள அப்படி ஒரு ஆசை இருக்குன்னா. அதை தயவுசெஞ்சு எடுத்துடுங்க. லண்டன் போக வேணாம்.

அங்க மாசம் நாப்பதாயிரம் ரூபா கிடைக்கும்னா இங்க பத்தாயிரம் கிடைக்காதா. எனக்கு பத்தாயிரம் போதும். நீங்க தினம் சாயந்திரம் வீட்டுக்கு திரும்பிடுவீங்கங்கற சந்தோஷம் மிச்சம் முப்பதாயிரத்தை ஈடு கட்டிடும். இப்படி சாயந்திர மானா புருஷன் வீட்டுக்கு திரும்பற சந்தோஷத்தை உலகத்தில் இருக்கற எல்லா பொம்பளையும் அனுபவிக்கணும், ஜனவரி மாசம் பொறந்து வீடு விட்டு போனாக்கா, அடுத்த ஜனவரிக்குத்தான் புருஷன் வருவார்னா, அய்யோ! இந்த பன்னெண்டு மாசமும் என்ன செய்வா ஒரு பொம்பளை. லட்டர் எழுதிக்கிறதும், போன்ல பேசிக்கறதும் நெருப்பு கொட்டறா மாதிரிதான் இருக்குமே தவிர மனசுக்கு நிறைவாகாது."

"என்ன இப்படிப் பேசற. குடும்பத்தைவிட்டு நிறைய பேர் அப்படிப் போயிருக்காங்க துர்கா."

"எனக்குப் புரியலை. எப்படிப் போறாங்கன்னு புரியலை. அதெல்லாம் தாண்டி காசு முக்கியம்னு அவங்களுக்கு பட்டிருக்கு. நாலு பேருக்கு முன்னாடி காசோட சுத்தி வர்ற சந்தோஷம்தான் ரொம்ப பெரிசுன்னு பட்டிருக்கு. கழுத்து நிறைய நகை போட்டுக்கினு, பட்டுப் புடவை கட்டிக்கினு, 'இது என் சொந்தவீடு' அப்படின்னு ஒரு கல்லு கட்டடத்தை காமிச்சி, நாலு பேருகிட்ட வீட்டுல தனியா உக்காந்து டி.வி. பார்க்கற கொடுமை அது.

எனக்கு கல்லுக் கட்டடம் வேணாம் கூரைக்குடிசை போதும். டி.வி. வேணாம். அதுக்குப் பதிலா புருஷனோட உக்காந்து சிரிச்சி பேசிட்டிருந்தா போதும். பெத்த புள் ளைங்களுக்கு பாடம் சொல்லிக் கொடுத்தா போதும்."

"காசு முக்கியமே இல்லைன்றியா?"

"இங்க சம்பாதிக்கற காசு போதும்யா. அதுக்கு மேல என் னத்துக்கு."

"ரொம்ப நிச்சயமாக சொல்றியா?"

"தெள்ளத் தெளிவா சொல்றேன், நீங்க வெளியூர் போற தில் எனக்கு இஷ்டமில்லை."

"ஆரம்பத்தில் பத்தாயிரம்லாம் கிடைக்காது. அஞ்சாயி ரம், ஆறாயிரம் கிடைக்கறதே கஷ்டம்"

"போதும்ன்றேன்!"

"யப்பா, எவ்ளோ திடமா பேசற?"

"எங்கம்மாதான் சொல்லிக் குடுத்தாங்க. அப்பா மெட்ரா ஸுக்குப் போய் சம்பாதிக்கணும்னாரு. அம்மா வேணாம். நீ என்ன சம்பாதிக்கறயோ, அதை இந்த ஊர்ல சம்பாதின்னு காட்டுமன்னார்கோவிலோட அப்பாவைக் கட்டிப் போட்டுட்டாங்க. அப்பா காசில்லாத நேரத்துல அப்பப்பக் கத்துவாரு. ஆனா மறுநாளே, 'வெளியே போயிருந் தேன்னாக்கா ரொம்ப கஷ்டப்பட்டிருப்பேன்' அப்படின்னு அம்மா இடத்துக்கே திரும்பி வந்திருவாரு. அப்பாவுக்கு சாமர்த்தியம் போறாததுக்கு காரணம் அம் மாதான். 'இந்த சாமர்த்தியம், பொய் சொல்றது, திமிரு, அகம்பாவம், கொடூரம் இதெல்லாம் எதுவும் தேவை யில்லை. நீ நல்ல மனுஷனா இரு. போதும். நீயும், நானும் சேர்ந்து வெறும் கேழ்வரகு கஞ்சி குடிப்போம். அதைவிட ருசி உலகத்துல வேற எதுவுமில்ல, அப் படின்னுவாங்க. உண்மையிலேயே நாங்கள்லாம் கேழ்

வரகு கஞ்சிகூட சிலசமயம் குடிச்சிருக்கோம். அப்பா காட்டுமன்னார்கோவில்லயே வாழையிலை வியாபாரம், நெல் கொள் முதல்னு பண்ணிக்கிட்டு சௌக்கியமா அம்மாவை சுத்தி வந்தாரு. எங்க வீடு மாதிரி ஜாலியான வீடு உலகத்தில வேற எதுவுமே இல்லை தெரியுமா."

காய்ந்த மரத்தில் நெருப்பு பிடித்ததுபோல அவர்கள் பேசிக் கொண்டார்கள். தினந்தோறும் சந்தித்து கொல் லையில் உட்கார்ந்து அவர்கள் பேசத்துவங்கினார்கள். விடியற்காலை சந்திப்பு மட்டும் போதவில்லை. உச்சி வெயிலில் சதாசிவம் துர்காதேவிக்காக கோயிலில் காத் திருந்தான். அவர்கள் சந்திக்கும் சந்தோஷத்தை சூரிய காந்திப் பூக்கள் நட்டு வெளிப்படுத்தினான். அந்த சூரி யகாந்திப் பூக்கள் போல் இவர்கள் காதலும் செழிப்பாக வளர்ந்தது.

"இதை எதனா ஒரு முடிவுக்கு கொண்டாரணும்பா." டீக் கடையில் பேசிக்கொண்டார்கள்.

"எதைச் சொல்ற?"

"எதிர்வீட்டைத்தான் சொல்றேன். தினம் காலையில அஞ்சேகால், அஞ்சரை மணிக்கு வந்துடறான்பா. ஏழு மணிக்குத்தான் வீட்டுக்குப் போறான். அந்த வீட்டுக் கிழவனும், கிழவியும் மெல்லத்தான் எழுந்துக்கறாங்க."

"அந்த ஆளு வாழையிலை வியாபாரம்தானே பண் றான்."

"ஆமா. காலையில வாழையிலை அறுத்து, வெளிய கட்டு வர்றதுக்கு எட்டரை ஆயிடுதே. எட்டரை மணிக்கு கட்டு எடுக்கறான். ஒம்பது, பத்து மணிக்கு லாரியில ஏத்திடறான். அது சாயந்திரம் பட்டணத்துக்கு போய்ச் சேர்ந்துடுது. காசு குடுத்து இலை வாங்கறான். ரெண்டு நாள் கடனுக்கு அனுப்பறான் டப்புன்னு நடுவுல ஒரு கட்டுக்கு நாப்பது ரூபா, அம்பது ரூபா பார்த்துடறான்.

ஒரு நாளைக்கு ஆறு கட்டு, ஏழு கட்டு அனுப்பறான்ப்பா. இன்னிக்கு வாழை இலையோட சாமந்தி வேற நாப் பது கூடை போச்சு, அகத்திக்கீரை கிடைக்குமான்னு பட்டணத்திலேர்ந்து கேட்டாங்களாம். இவன் தோட் டம் தோட்டமா போய் கேட்டுனு இருக்கான். அவன் பொண்ணு வீட்ல ஜல்சா பண்ணிக்குனு இருக்கு."

"நம்ம பார்ட்டி ஆள்தானேப்பா. அவன் ஏன் எதிர் பாட்டி ஆளை உள்ள சேர்க்கறான்?"

"சொந்த விஷயம்னு வரும்போது பார்ட்டியாவது மண் ணாங்கட்டியாவது. கட்சியை தூக்கிப் போட்டுட்டுதான் இவனுங்க எல்லாமே செய்வானுங்க. சும்மா ஆதாயத் துக்காக கட்சியில இருக்கானுங்க."

"அப்ப விடக்கூடாதுன்ற."

"அதத்தான் நானும் ஆரம்பத்துலேர்ந்து சொல்லிட்டு வரேன். நம்ம கட்சி ஆளு. எதிர்க்கட்சி ஆளை வீட்டில சேர்க்கறது நல்லதா. பலவிதங்கள்ல அது இடைஞ்சல் செய்யும் நம்ம திட்டங்களை அவங்களுக்குத் தெரிவிக் கும்படி ஆயிடும்."

"ஆமா. அப்ப கூப்பிட்டு கண்டிச்சுடுப்பா!" ஒருவர் சொன் னார்.

"அப்ப மடக்கி கேட்டுருங்க."

"யாரை?"

"முதல்ல அந்தப் பையனை கேட்டுருங்கப்பா. அப்பு றம் நம்ம கட்சிக்காரரைக் கூப்பிடலாம்." இன்னொருவர் சொல்ல, ஊர் அவர்களைப் பற்றிக் கவலை கொண்டது.

ஊரில் உழைப்பவர்கள், இறக்கை கட்டிக் கொண்டு நாலாபக்கமும் பறப்பவர்கள் அதிகம் இருந்தாலும் பொழுது போகாமல் ஊருக்குள்ளே வெறுமே வலம்வ ரும் வெள்ளை வேட்டிகளும் கணிசமாக இருந்தார்கள்.

“தம்பி! இங்க வாப்பா.” சதாசிவத்தை டீக்கடையில் அமர்ந்திருந்த மனிதர்கள் கூப்பிட்டார்கள்.

சதாசிவம் திகைத்தான் ‘என்ன’ என்பது போல் திரும்பிப் பார்த்தான்.

“அட, உன்னைத்தாம்பா. வா!” அந்த மனிதர்கள் மறு படியும் கூப்பிட்டார்கள். அவன் அருகே வந்து நின்றான்.

“என்னா, அந்த வீட்டுக்கு அடிக்கடி வந்துட்டுப் போறே அந்த வீட்டுல வயசுப்பொண்ணு இருக்கும்போது இப்ப டிச் செய்யலாமா?”

“டேய், போடா!” ஆத்திரத்தை அடக்கிக் கொண்டு சதா சிவம் அவர்களுக்குப் பதில் சொன்னான்.

“தம்பி! எகிறலா பேசாத. அது உனக்கும் நல்லதில்ல, அந்த பொண்ணுக்கும் நல்லதில்லே.”

“என்னடா புடுங்கிடுவியா?” மறுபடியும் சதாசிவம் ஆத்தி ரமானான்.

“என்னான்னு கேட்டா, நேரடியா சொல்ல வேண்டியது தானே. இவ்ளோ கோவப்படறான். அப்ப ஏதோ தப்பு நடக்குது போல. நீங்க சொல்றது கரெக்ட்தான்” என்று வேறு ஆளைப் பார்த்துப் பேசிய ஒரு மூன்றுகரை வேட் டியின் அருகே சென்று, அவன் கையிலிருந்த டீயை வாங்கி பளிச் சென்று அவன் முகத்தில் சதாசிவம் வீசி னான்.

கொதிக்கிற டீ முகத்தில் பட்டு அந்த ஆள் அலற, அங்கே பெரிய ரகளை உண்டாயிற்று. இரண்டு, மூன்று பேர் சதா சிவத்திடம் அடிவாங்கினார்கள். சதாசிவத் துக்கு மர ஸ்டூலால ஒரு அடி விழுந்தது.

அடுத்த அரை மணியில் இரண்டு கட்சிக்காரர்களும் அந்த டீக்கடை எதிரில் வேகமாக மோதிக்கொண்டார்

கள். 'பொத்பொத்தென்று' அடித்துக்கொண்டார்கள். பஸ் மறியல் அடுத்த முக்கால் மணி நேரத்தில் நடந்தது.

“என்னய்யா இது. லேடீஸ் மேட்டருக்குப் போய் இப்படி பஸ்ஸை நிறுத்தறீங்க?” ஊர் முணுமுணுத்தது. ஆனாலும் எவரும் உரக்கப் பேசவில்லை.

போலீஸ் வந்து தலையிட்டு சதாசிவத்தை விடுவித்து, மூன்றுகரை வேட்டி ஆட்கள் நான்கு பேரை கைது செய்து புகார் பதிவு செய்தது. பிறகு அந்த நான்கு பேரையும் ஜாமீனில் விட்டது. மூன்று நாள் கழித்து சிதம்பரம் கோர்ட்டுக்கு வரச்சொல்லி கட்டளையிட்டது.

போலீஸ் பற்றியோ, கோர்ட் பற்றியோ, கேஸ் பற்றியோ, அபராதம் அல்லது ஜெயில் தண்டனை பற்றியோ யாரும் கவலைப்படவில்லை. அவர்களுக்கு அவை மிகச் சாதாரண விஷயங்களாய் இருந்தன.

“கொழுப்பெடுத்த நாயே” என்று துர்காதேவியை அவள் அம்மா அடித்தாள். அவள் அப்பா தடுத்தார். வீட்டில் தினம் தினம் ரகளை அதிகமாயிற்று. துர்காதேவியின் அம்மா டெலிபோனில் செய்தி சொல்ல வெளியூரிலிருந்து அவளுடைய சகோதரர்களும், சகோதரிகளும் வந்தார்கள். துர்காதேவியின் அப்பாவை 'கையாலாகாதவன்' என்று திட்டினார்கள். 'நீ அப்பனா, இல்ல மாமா பையனா' என்று அசிங்கமாய் ஏசினார்கள்.

“நீ வீட்டை விட்டுப் போகக்கூடாது. அவனை நீ கல்யாணம் பண்ணிக்கக்கூடாது. அப்படிச் செய்துகிட்டா எங்களுக்கெல்லாம் மரியாதை குறைவு” என்று துர்காதேவியிடம் கத்தினார்கள்.

சதாசிவம் வீட்டில் ரகளை இன்னும் அதிகமாக இருந்தது. அப்பாவும், அம்மாவும் சேர்ந்துகொண்டு, இடைவிடாது திட்டினார்கள். எல்லா குடும்பத்தினரையும் வரவழைத்தார்கள். 'இன்னும் ஒரு வாரத்தில் கல்யாணம்.

பொண்ணு பாருங்க' என்று இடுப்பில் கை வைத்து சத்தம் போட்டார்கள்.

"கட்டினா அந்தப் பொண்ணு. இல்லையா, எனக்கு கல்யாணமே தேவையில்லை!" சதாசிவம் தீர்மானமாய் சொன்னான்.

"அய்யா சோத்துக்கே சிங்கி அடிக்கறாராம். இந்த முக ரைக்கட்டைக்கு கல்யாணம் ஒரு கேடா!" ஒரு உறவுக் காரன் பேச, அவனைப் பளீரென்று சதாசிவம் அடித் தான்.

"நீ நேத்துவரைக்கும் எச்சைப் பொறுக்கிக்கினு இருந்தே. இன்னிக்கு ஏதோ ஒரு மயிர்ப் புடுங்கி உத்தி யோகம் கிடைச்சிட்டவுடனே பெரிய ராஜா மாதிரி பேச றியா, நாயே! என் கையில தொழில் இருக்குடா" என்று கூவினான்.

"நம்ம பெரியசாமி பொண்ணு படிச்சிட்டு கல்யாணத் துக்கு காத்திருக்கு. இவனுக்கு அது முறைப் பொண்ணு. டக்குன்னு கல்யாணம் பண்ணி வை. இவனை என்னா கேக்கறது. மொத்தமா இவன் கட்சிக்காரங்களை கூட்டி விஷயம் இப்படின்னு சொல்லி இவன் கைய காலை கட் டி கோயிலுக்கு கூட்டிக்கிட்டுப் போய் இவனை தாலி கட் டச் சொல்லு. இல்ல மாட்டேன்னான்னா, மூஞ்சிமேலயே போடு." சதாசிவம் வீட்டில் பலர் சட்டையை மடித்தார் கள்.

காட்டுமன்னார்கோவில் போலீஸ் இன்ஸ்பெக்டரிடம் போய் சதாசிவம் தன் நிலைமையைத் தெரிவித்தான்.

"துரை! இங்க இருந்தா இது பார்ட்டி பிரச்னையா ஆவும். பஸ் மறியல் நிச்சயமா நடக்கும். ஊர்ல விவகாரமா ஏதா வது நடக்காதா, எங்கே, எப்போன்னு அவன் அவன் காத்துக்கினு இருக்கானுக. இந்தப் பிரச்னை சரியான படி சால்வ் ஆகணும்னா தயவுசெய்து பொண்ணைக்

கூட்டிக்கினு ஊரைவிட்டு ஓடிப்போயிடு. நீ நடுராத்திரி பஸ் ஏர்றவரைக்கும் நான் உனக்கு பாதுகாப்பு தரேன். நீங்க ஊர் எல்லை தாண்டற வரைக்கும் பின்னாடி ஜீப் பிலேயே வரேன். இதுமட்டும்தான் நான் செய்யமுடி யும். மத்தபடிக்கு இதில் நியாயம், தர்மம் பேசினோம்னா உனக்குத்தான் கஷ்டம்!"

"நான் இந்த ஊர்லயே துர்காதேவியைக் கல்யாணம் பண்ணிக்கிட்டா என்ன?"

"கல்யாணம் பண்ணிக்கலாம்பா. அதுக்கப்புறம் என்ன நடக்கும். அதை யோசனை பண்ணு. நிச்சயமா அடி தடி ரகளை நடக்கும். உன்மேல கத்திகூட இறங் கலாம். கல்யாணம் பண்ணி கத்திக்குத்து வாங்கறது நல்லதா, இல்ல ஊரைவிட்டு வெளியே போயி எங் கனா கண்மறைப்பா கல்யாணம் பண்ணிக்கறது நல் லதா. நீயே யோசனை பண்ணு. குடிச்சுட்டு, வெறியிலே சதக்குன்னு இறக்கிடுவான்பா. அப்புறம் கேட்டா நான் இல்லேன்னுவான். கேஸ் நடக்கும். ஆதாரமில்லேன்னு தண்டனையே இல்லாம வெளியே வந்துடுவான். இந்த மாதிரி எத்தனை கேஸ் இந்த ஊர்ல நடந்திருக்கு. எவ் வளவோ பாத்ததுக்கப்புறம் புரியாத பேசறியே. எவ்ளோ சீக்கிரம் வெளிய போக முடியுமோ அவ்ளோ சீக்கிரம் வெளிய போயிடுங்க."

"டேய்! அந்தப் பொண்ணும், பையனும் ஊரை விட்டு வெளியே ஓடப் போறாங்களாம். போலீஸ் ஸ்டே ஷன்லே சொன்னாங்க." விஷயம் மெல்ல கசிந்து ஊரில் பரவ, "ரொம்ப சரி. இதுக்குத்தான் ரொம்ப நாளா காத்திருந்தேன். என் மூஞ்சியிலே டீ ஊத்தினான்ல. அவனை ஒண்ணும் பண்ணாத ஊரைவிட்டு அனுப்பிச் சிடக் கூடாது. அவன் மூஞ்சியிலே 'ஆசிட்' ஊத்தணும். இன்னிக்கு சாயந்திரமோ, நாளைக்கு காலையிலயோ அவன் மூஞ்சியிலே ஆசிட் ஊத்தப் போறேன். எவன்

தடுத்தாலும் நிக்கமாட்டேன்." சதா சிவத்தால் முகத்தில் டீ கொட்டப்பட்டவன் சூளுரைத்தான்.

அமிலம் ஊற்றப் போகிறார்கள் என்ற விஷயம் கசிந்து சதாசிவமும் துர்காதேவியும் இரவுநேரம் ஊர் விட்டுப் போகாமல் விடியற்காலை மூன்று மணிக்கு, வாழை யிலை அறுப்பதற்காகப் போகும் டிராக்டர் வண்டியில் ஏறி அடுத்த ஊருக்குப் போய், அடுத்த ஊரில் பஸ் பிடித்து வேறு ஊருக்குப் போய், அங்கிருந்து சென் னைக்கு அவர்கள் பயணப்பட்டார்கள். சென்னையில் திருவான்மியூரிலுள்ள சதாசிவத்தின் அக்கா வீட்டுக்குப் போய் இறங்கினார்கள்.

ஊர் விடியற்காலை தெருவில் அலைந்தது. 'எங்க போனாலும் வெட்டாத விடமாட்டேண்டா' என்று முகத் தில் சூடான டீயை வாங்கிக்கொண்டவன், கையில் உருட்டுக் கட்டையோடு முன்னும் பின்னும் அலைந் தான்.

இதுமாதிரி பல பேச்சுகளை ஊர் கேட்டிருக்கிறது. எனவே, கொட்டாவி விட்டு மீண்டும் புரண்டு படுத்துக் கொண்டது.

"என்னடா, திடும்னு கிளம்பி இங்கே வந்துட்டே!" சதாசி வத்தின் அக்கா திலகவதி ஆச்சரியத்தோடு கேட்டாள்.

"அம்மா லெட்டர் நேத்துதான் கிடைச்சது. 'ஏகப்பட்ட ரவுசு பண்றே' அப்படின்னு பொதுவா எழுதியிருந்தா ளே தவிர, விஷயம் என்னான்னு தெரிஞ்சுக்க முடி யலை. நீ இப்படி ஒரு காரியம் பண்ணிட்டு வருவேனு நான் நினைக்கவே இல்லை. உங்க அத்தானுக்கு இது புடிக்குமோ, புடிக்காதோ தெரியலையேடா."

"புடிக்காதுன்னா நான் வெளியே போயிடறேன்."

“எங்க போவே. ஒண்ணும் அவசரப்படாதே. அத்தான் வெளியூர் போயிருக்காரு. வர்றதுக்கு இருபது நாள் ஆகும். ஆந்திராவுலேர்ந்து புழலேரிக்கு தண்ணி வரு தில்லே. அந்த கால்வாய் சரியா கட்டியிருக்காங்க ளான்னு பார்க்கறதுக்கு பெட்டி, படுக்கையோட கிளம் பிப் போயிருக்காரு. அங்கங்க ஒவ்வொரு ஊர்லயா நின்னு, ஒவ்வொரு இடமா பார்த்து இன்ஸ்பெக்ஷன் பண்ணிட்டு இருபது நாள் கழிச்சிதான் வருவாங்க.”

“நான் அதுக்கு முன்னாடியே கிளம்பிடறேனே.”

“நீ ஒண்ணும் பதட்டப்படாதடா. இந்தப் பொண்ணைப் பார்த்தா நல்லவளா தெரியுது. நீ இங்கயே இருந்துக்க. அக்கா, அவனிடம் காதோரமாய்ப் பேசினாள்.

“எனக்கும் இங்க மனுஷாள் யாரும் இல்லையா. 'ஓ'ன்னு உக்காந்துகினு இருக்கேன். நீங்க வந்தது சந்தோஷம் தான். இருந்தாலும் இப்படி ஊரோட சண்டை போட்டுக் கிட்டு வந்திருக்கீங்களேன்னு கவலையாவும் இருக்கு.”

சென்னையில் சதாசிவம் முதல் வேலையாய் திருவான் மியூர் இரட்டைக் கரை கட்சி வட்டச் செயலாளரைப் பார்த்தான்.

“தெரியுமே தம்பி, உங்களைக் கவனிச்சி இருக்கறேனே. ஏதோ ஒரு மகாநாட்டுல பார்த்தது போல இருக்கு. இதான் மேட்டரா. இதுக்குப் போய் ஏன் ஊரைவிட்டு ஓடி வந்தீங்க. 'போடா, அப்படித்தான் பண்ணுவேன்'னு தாலி கட்டிட்டு ஊர்நடுவுல கைவீசி நடந்து போக வேண்டியது தானே. சரி, நீங்க எதுக்கும் தினம் நம்ம வீட்டுப்பக்கம் வந்துட்டுப் போயிட்டு இருங்க. உங்களை மத்த உறுப் பினர்களுக்கும் அறிமுகப்படுத்தி வைக்கறேன். ஆமா, நீங்க கல்யாணம் பண்ணீங்களா, இல்லை...” அவர் சந் தேகமாய் கேட்டார்.

“இல்லீங்க. ஊரைவிட்டுக் கிளம்பி வந்துட்டோம். இன்னும் கல்யாணம் பண்ணலை.”

“அய்யய்யோ, அது தப்பாச்சுங்களே. உங்க அக்காவை முன்னிறுத்தி உங்க வீட்டுக்குள்ளே தாலி கட்டுங்க. நாங்க வந்து வாழ்த்து சொல்றோம்.” அவர் சொல்லி அனுப்பினார்.

சதாசிவம் அக்காவிடம் இதைத் தெரிவிக்க, அவள் அதிகம் மிரண்டாள். கட்சிக்காரர்கள் உதவியுடன் ரிஜிஸ்டர் ஆபீஸில் தகவல் தெரிவித்து முன்பதிவு செய்து பதிவு செய்த பத்தாம் நாள் சதாசிவம், துர்கா தேவியின் கழுத்தில் தாலி கட்டினான். மெடிக்கல் ஷாப் வைத்திருந்த நண்பர்களும் ஓட்டல் வைத்திருந்த நண்பர்களும், காட்டுமன்னர் கோவிலி விருந்து திருமணத்திற்கு வந்து போனார்கள்.

“நீ போன மறுநாளே எல்லாம் சரியாயிடிச்சுப்பா. சும்மா இவனுங்கள்லாம் வெறும் வாய் உதார்னு உனக்கு தெரியாதா. இவனுங்களுக்கு பயந்து நீ ஏன் போன?” ஒரு நண்பன் கேட்டான்.

“போனதும் ஒருவிதத்திலே நல்லதுதான்!” வேறொரு நண்பன் குரல் கொடுத்தான்.

“நீங்க போனதுனால மேட்டர் சல்லுன்னு அடங்கிடுச்சு. நீங்க இருந்திருந்தீங்கன்னா வேணும்னே பொழுது போகாத ஏதாவது பண்ணியிருப்பாங்க. லாரி ஏற்பாடு பண்ணி நீங்க எங்க போயிருந்தாலும் கண்டுபிடிக்கணும் அப்படின்னு பேசினாங்க. அப்படிப் பேசறபோது. பேசினவுங்களுக்கே சிரிப்பு வந்திடுச்சு. 'போனா போறாங்க விடுங்கப்பா, தப்பான ஜோடி இல்லையே, நியாயமான முறையிலதானே கல்யாணம் பண்ணிக்கப் போறாங்க' அப்படின்னு சமாதானமாயிட்டாங்க. நீ மூஞ்சியிலே டீ ஊத்தினியே... அந்தாள் தான் அப்பப்போ பொருமினு

இருக்கான். அவனை அவங்க கட்சிக்கார ஆளுங்களே அடக்கிட்டாங்க. நீ இன்னும் ஒரு பத்து, பதினஞ்சு நாள் கழிச்சி காட்டுமன்னார்கோவிலுக்கு வந்தா, எதிர்க்கற துக்கு அங்க யாரும் ஆளே கிடையாது. நல்லா இருக் கியான்னுதான் எல்லாரும் கேப்பாங்க, இருந்தாலும் நீ ஒரு வருஷம் கழிச்சே வா. அதான் பெட்டர்!" என்று முத் தாய்ப்பாய் நண்பர்கள் சொன்னார்கள்.

மனம் ஒன்றிவிட்ட பிறகு திருமணம் என்பது வெறும் சடங்குதான் என்பதை சதாசிவமும், துர்காதேவியும் நன்கு உணர்ந்திருந்தார்கள். திருமணம் அவர்களுக் குள் எந்தப் பாதிப்பையும் ஏற்படுத்தவில்லை. இரவு நேரம் அருகருகே படுத்துக்கொள்ளும்போதுகூட வேக மான வெறி ஏற்பட வில்லை. தொட்டுத் தழுவுகி றபோதும் 'நாளை வாழ்க்கை எப்படியிருக்கும்' என்ற கேள்வியே அவர்கள் முன்னே வந்து நின்றது. 'சீக்கி ரம் வேலை கிடைத்துவிடுமா. தனியாகக் குடித்தனம் போகமுடியுமா. கிடைக்கிற காசில் மரியாதையாக வாழ முடியுமா' என்ற கேள்விகளே அவர்களை எப்போதும் தொடந்தது.

"துர்கா, நாம கல்யாணம் பண்ணிக்கிட்டது தப்பா?" சதா சிவம் கேட்டான்.

"என்ன தப்பு?" அவனை இடதுகையால் அணைத்துக் கொண்டு, வலதுகையால் அவன் தலையைத் தடவிக் கொண்டு, அவ்வப்போது அவன் இதழ்களில் முத்தமிட் டுக் கொண்டு துர்காதேவி கேட்டாள்.

"நாம ஊரைவிட்டு வந்திருக்கக்கூடாதோ. இவ்ளோ சீக்கிரம் கல்யாணம் பண்ணியிருக்க வேண்டாமோ. லண்டனுக்குப் போய் செட்டிலாயிட்டு அதுக்குப்பி றகு கல்யாணம் பண்ணியிருந்தா நல்லா இருந்திருக் குமோ?"

“ஏன் அப்படிக் கேட்கறீங்க?”

“நாய்படாத பாடு படறோமே. எங்கயோ, யார் வீட்லயோ உக்கார்ந்துட்டு, உக்கார்ந்தா சரியா, நின்னா சரியா திரும்பினா சரியா, பேசினா சரியான்னு ஒவ்வொண் ணுத்தையும் யோசனை பண்ணிக்கிட்டு இருக்கோமே.'

“இருக்கட்டும். இதுவும் நல்லாதான் இருக்கு.”

“என்ன நல்லா இருக்கு?”

“அன்னிக்கு அங்க லவ் இங்கேயும் ‘கன்டினியூ' ஆகுதே.” அவள் சிரிப்போடு சொன்னாள்.

“எனக்குப் புரியலை துர்காதேவி.”

“ஆஹா, இதோ பொம்பளை. எனக்கு கிடைச்சாச் சுன்னு நீங்களும் மகிழ்ந்துக்க முடியாது. இதோ ஆம் பளை எனக்கு கிடைச்சாச்சுன்னு நானும் உக்காந்துற முடியாது. காட்டுமன்னார்கோவில்ல தவிச்சிக்கிட்டிருந் தோமோ, அதேமாதிரி உங்க அக்கா வீட்டுலேயும் தவிச் சுக் கிட்டிருக்கோம். அப்ப என்னா அர்த்தம்... அந்தக் காதல் தொடர்ந்து நடக்கு துன்னுதானே அர்த்தம். நடு வுல இப்படி 'தொட்டில்' வேலை செய்யறோமே, இதுவும் சந்தோஷமாத்தானே இருக்கு.”

“ஏதோ சமாதானமாய்ப் பேசறே. வேற வழியில்லைன்னு இப்படி எடுத்துக்கிறே.”

“அப்படியும் சொல்லலாம். நான் சொன்னா மாதிரி காதல் தொடர்கிறது அப்படின்னும் சொல்லலாம்.”

“இல்ல துர்கா. எனக்கு குற்ற உணர்ச்சியா இருக்கு. இங்கேருந்து தள்ளி, தாம்பரம் பக்கமா ஏதாவது ஒரு வாடகை வீட்டுக்கு போயிடலாமா”

“நீங்க என்ன வயல்லயா வேலை பார்க்கறீங்க. இல்ல, கோட்டையில் அரசாங்க வேலையா.ட்ரெயின்ல

போயிட்டு வர்றதுக்கு. பத்து பணக்காரங்களுக்கு நடு வுல இருந்தாதான் உங்களுக்கு வேலை கிடைக்கும். வெறுமனே வாடகைக்கு யாரு வீடு தருவாங்க. 'அட் வான்ஸ்' தர வேணாமா. எங்கேயிருந்து அட்வான்ஸ் கொடுப்பீங்க?"

"கையில கொஞ்சம் காசு இருக்கு துர்கா"

"அத இப்ப தொட வேணாம். ஒரு அவசரம், ஆபத்துக்கு அது உதவும்.

"இங்க இருக்கிறதுக்கு உனக்கு கஷ்டமா இல்லையா துர்கா."

"கஷ்டமாதான் இருக்கு. கஷ்டத்தைப் பார்த்தா முடி யுமா? இது பத்திரமான இடம். அக்கா இருக்காங்க. அக்காவுக்கு வேலை செய்ய முடியலை. நான் ஓடியாடி வேலை செய்து, அக்காவை உட்கார வைச்சு சீராட்டி இங்கேயே தங்கிக்கலாம். நாம கேக்காதேயே அவங் களா ரூம் தர்றாங்க. 'என் தம்பி கூட படுத்துக்க' அப் படின்னு ரொம்ப பிரியமா சொல்றாங்க. நானும் லவ் பண்ணி கல்யாணம் பண்ணிக்கலாம்னு நினைச்சேன்டி. ஆனா முடியலை. நீ பண்ணே, அது எனக்கு சந்தோஷம். என் தம்பி பண்ணான். ரொம்ப ரொம்ப சந்தோஷம்' அப் படின்னு சொன்னாங்க."

"அது லவ் பண்ணிச்சு. சரியா வரலை."

"என்ன சொல்றீங்க?"

"காட்டுமன்னார்கோவில்லயே, அதுக்கு பாடம் சொல் லிக்கொடுத்த வாத்தியாரையே அது லவ் பண்ணிச்சு. அந்த வாத்தியாருக்கு நாலு தங்கச்சிங்க. மூணு தங்கச் சிங்களை கல்யாணம் பண்ணிக்கொடுத்துட்டாரு. அப்ப அவருக்கு முப்பத்திரண்டு வயசோ, என்னமோ. இவ

ளுக்கு பத்தொன்பது வயசு. ப்ளஸ் டூ படிக்கிறா. ஒரு மாதிரி கசாமுசான்னு ஆயிடிச்சி."

"அப்புறம்..."

"வாத்தியாரை நம்ம ஊரு ஆளுங்க பள்ளிக்கூடத்தை விட்டு தொரத்திட்டாங்க. இவ படிப்பை நிறுத்திட்டா."

"படுவாவிங்க. நம்மூருக்கு ஏங்க லவ்வுன்னா அத்தினி கோவம்?"

"நம்மூரு மட்டும் இல்ல. நம்மூரு மாதிரி சிறுசா இருக்கற எல்லா ஊர்லயும் இந்த விஷயம் சரியா செய்ய முடியாது. எல்லாருக்கும் லவ் பண்ணணும்னு ஆசை இருக்கும். ஆனா, லவ் பண்றதுக்கு பயம், வெக்கம், அது அவமானம்னு அவங்களா நெனைச்சுக்கிட்டாங்க. அதனால யார் லவ் பண்ணாலும் 'பொசபொச'ன்னு எரியுது. இது காட்டு மன்னார்கோவில்ல மட்டும் இல்ல. சின்ன சின்னதா, மன்னார்குடி., தூத்துக்குடி, திருச்செந்தூர், திருவண்ணாமலை அப்படின்னு நகரமும் இல்லாத கிராமமும் இல்லாத இடங்கள்லே இதுக்கு கடுமையான எதிர்ப்புதான் தெரிவிப்பாங்க. 'லவ்வா அதை அழிச்சே காட்டறேன் பாரு' அப்படின்னு நாலு பேர் வேட்டியை மடிச்சுக் கட்டிக்கிட்டு நிப்பாங்க."

"இதான் காரணமா?"

"இது மட்டும் காரணம் இல்ல. நிறைய பேருக்கு வேலை இல்ல. அதனாலதான் அடுத்தவங்க விஷயத்துல தலையிடறாங்க'

"நிறைய பேருக்கு வேலை இல்லைன்னா சொல்றீங்க?"

"ஆமா, இந்தியாவோட பெரிய பிரச்னையே ஓய்வு நேரம் அதிகம் இருக்கறதுதான். ஒரு பண்டிகை வருதுன்னா அதுக்கு முன்ன நாலு நாள், பின்ன நாலு நாள் லீவ் எடுக்கறவுங்க நிறைய பேர். எந்த குறிக்கோளும் இல்

லாம ஊர் ஊரா சுத்தறவங்க நிறைய பேர். இருக்கற வேலையும் ஒழுங்கா செய்யறதில்லை. வாத்தியாரும் எங்க அக்காவும் லவ் பண்ணினதுக்கு காரணம் வேற வேலை இல்லாததுதான். நாலு கிளாஸ் பாடம் எடுக்கணும். அந்தாளு எடுக்கறதில்லே. சும்மா உக்காந்துக்கினு கதை புஸ்தகத்தை படிச்சிகிட்டு இருப்பான். இது டிரான்சிஸ்டர் ரேடியோவை எடுத்துக்கிட்டுப் போயி, மடியில வைச்சி பாட்டு கேட்டுக்கிட்டு இருக்கும். இதனால கிளாஸே கெட்டுப் போச்சு. அந்த கிளாஸால பள்ளிக்கூடமே கெட்டுப் போச்சு. படிக்கிற பசங்ககூட அவஸ்தைப் பட்டுட்டாங்க.

ஒரு பையனோட அப்பா என்ன தெரியுமா பண்ணாரு. கிளாஸ் சரியா நடக்கறதில்லைன்றதால, தன் பையனுக்கு பாடம் சொல்லிக் கொடுக்கறாமாதிரி அவங்களுக்கு டியூஷன் எடுத்தாரு. காலையிலே பசங்க பள்ளிக்கூடத்துக்குப் போயி, அட்டன்டன்ஸ் கொடுத்துட்டு வீட்டுக்கு வந்திருவாங்க. வீட்டுக்கு வந்து, இந்த பன்னிரண்டு பேரோ, பதினாறு பேரோ ரொம்ப மும்முரமா படிப்பாங்க. அந்த பதினாறு பேர்தான் பாஸ். மத்த அத்தனை பேரும் ஃபெயில். இத ஊர்ல எல்லாரும் பேசி, சிரிச்சி அந்த வாத்தியாரை தூக்கி வெளிய போட்டுட்டாங்க. எங்கக்கா லவ் அதலபாதாளத்துல போய் விழுந்திடுச்சி."

"லவ்வுன்னா வெறும் பேச்சு மட்டுமா?"

"இல்ல. நெருக்கமா பழகிட்டா அப்படின்னுகூட கேள்வி. இவளை கேட்டா, அதுக்கு இவ சரியா பதில் சொல்லலை. ஆனா, நான் சில லெட்டர்லாம் படிச்சேன். 'நீ கொடுத்த முத்தம் தித்தித்தது. உன் உடம்பு முழுவதும் என் உடம்பில் இருந்தது' அப்படின்னு என்னென்னமோ எழுதி யிருந்தா. சரி, இது கெட்டுப்போன புத்தின்னு அதுக்குமேலே படிக்காத விட்டுட்டேன்."

"சரி, இப்ப நீங்களும் நானும் என்ன பண்ண ணும்?"

"நல்ல கேள்வி துர்கா. நாம ரெண்டு பேரும் பிசாசு மாதிரி வேலை செய்யணும். அடுத்தது, அடுத்தது, அடுத்த துன்னு நம்ம புத்தி முழுக்க வேலையில இருந்ததுன்னா படுத்தவுடனே அடிச்சுப் போட்டாபோல தூங்கிடலாம். இப்போதைக்கு என்னை மயக்கறதுக்கு நீயும், உன்னை மயக்கறதுக்கு நானும் முயற்சி பண்ணாம வெறும் அன்பா இருக்கறதுக்கு மட்டும் கத்துக்கலாம். புள்ளை வயித்துல விழுந்திடுச்சுன்னா என்ன பண்றதுன்னு மருந்து, மாத்திரை சாப்பிட்டு உடம்பை கெடுத்துக்காம சுயகட்டுப்பாடா இருக்கலாம். அஞ்சு நிமிஷம் பக்கத் துல படுத்து பேசிட்டு அப்படியே கண்ணை இழுத்தாப் போல தூங்கிடலாம்."

"இது முடியும்னா நினைக்கிறீங்க?"

"மனசு வைச்சா முடியும். நம்ம மனசை மத்த விஷயங் கள்லே செதுக்கினா நிச்சயம் முடியும்."

"நீங்க வெளிய வாசலுக்குப் போயி, நாலு இடம் அலைஞ்சு திரிஞ்சு, களைப்பா வீட்டுக்கு வந்து 'ஹா'ன்னு தூங்குவீங்க. நான் வீட்டுக்குள்ளேயே இருக் கேன். எப்படித் தூக்கம் வரும்?"

தூக்கம் வர மாதிரி வேலை செய். வீடு மொத்தமும் புரட் டிப் போடு. அக்காவை ஒரு வேலை செய்ய விடாதே. எனக்கு வர்ற வாரம் ஒரு கம்பெனியிலே ஹெல்பரா வேலை கிடைச்சிடும். அது ராப்பகலா செய்யவேண்டிய வேலை. டெய்லி வீட்டுக்கு வர்றதுக்கே ரொம்ப லேட்டா யிடும்."

"காசு சுமாரா வருமா?" துர்காதேவி கவலையோடு கேட் டாள்.

"ஏதோ வரும்." சதாசிவம் சுவாரஸ்யமின்றி சொன்னான்.

“சரி, இப்ப சொல்லுங்க. தேவையில்லாம உங்களை மடக்கி தொந்தரவு பண்ணி கல்யாணம் பண்ணிக் கிட்டேனா?” துர்காதேவி அவனை அணைத்துக்கொண்டு பேசினாள்.

“இல்ல, நீ சொன்ன மாதிரி இந்த சோதனை சந்தோஷமா இருக்கு” என்று அவனும் பதிலுக்கு அணைத்துக் கொண்டான்.

'ஏங்க, நீங்க கம்மி சம்பளத்துக்கு வெளிய உதவியாளரா போறதுக்குப் பதிலா, அந்தத் தொழிலை நீங்களே தனியா ஆரம்பிக்க முடியாதா?”

“இல்ல துர்கா! அதுக்கு கொஞ்சம் இங்கிலீஷ் பேசணும். பணக்காரத்தனமா இருக்கணும். அப்பதான் அவங்களுக்கு நம்பிக்கை வரும். நம்மளைப் பார்க்கறபோதே ஒருவொர்க்கரை பாக்கற மாதிரிதான் பார்ப்பாங்களே தவிர, 'இன்டீரியர் டெக்கரேட்டர்'னு பார்க்க மாட்டாங்க. இந்த மாதிரி சங்கடங்கள் நிறைய இருக்கு.

இங்கிலீஷ்ல பேசற லேடீஸுக்கு எதை எங்க ஒட்டறது. எப்படி ஒட்டறதுன்னு தெரியாது. ஆனா, 'இந்த கலர் இங்க கொண்டா, அந்த கலர் அங்க கொண்டா'ன்னு சொல்லி நம்மளையே எல்லா வேலையும் செய்ய வைச்சி, அவங்க நல்ல பேரு தட்டிட்டுப் போயிடுவாங்க. அது ஒரு கெட்டிக் காரத்தனம்னு வெச்சிக்கயேன்.”

“அப்ப உங்க உழைப்பு மொத்தமும் வேற யாரு பேருக்கோ போகுது. அப்படின்றீங்களா?'

“ஆமா.”

“இது வருத்தமா இல்லையா?”

“வேற வழியில்லை.”

இரண்டு பேரும் சிறிது நேரம் பேசாமல் இருந்தார்கள். அந்த பேசாதிருந்த நேரத்தில் அவன் ஆழ்ந்து தூங்கிப்

போனான். அவள் மெல்ல விலகி, அவனுக்கு அருகே உட்கார்ந்து கொண்டாள். அவன் முதுகை தடவி விட்டாள்.

'அப்போ நானும் என் மனசை வேலையிலே திருப்பிக்கிறேன். அக்காவை உட்கார வைச்சு, அவங்களுக்கு பாரம் கொடுக்கறதுக்கு பதிலா என் உழைப்பை கொடுக்கறேன்.' தீர்மானம் செய்தாள். அருகிலேயே படுத்துக்கொண்டாள் சிறிதுநேரத்தில் அவளும் உறங்கிப் போனாள்.

துர்காதேவி விடியற்காலையில் ஐந்து மணிக்கு எழுந்து மெல்ல கதவு திறந்து போய், மோட்டார் போட்டு குடி நீரை மேல்நிலைத் தொட்டிக்கு அனுப்பி, வாசல்கழுவி கோலமிட்டு ஒரு மண் அகல்விளக்கை எண்ணெய் விட்டு ஏற்றி, வாசற் படியில் வைத்துவிட்டு, 'ஹால் முழுவதும் பெருக்கி துடைத்து, அடுப்பில் பால் காய்ச்சி, அடுத்த அடுப்பும் மூட்டி, அரிசி களைந்து போட்டு ஆறு இருபதுக்கு சமையலை முடித்தாள்.

சதாசிவத்தின் அக்கா எழுந்ததும் அவளுக்கு காபி கலந்து கொடுத்தாள். குழந்தையைத் தூக்கிக்கொண்டு போய் கொல்லைப்பக்கம் உட்கார வைத்து பிறகு சுத்தப்படுத்தினாள். வெறுமே உடம்புக்கு ஊற்றி சட்டை போட்டு பவுடர் போட்டு தொட்டிலில் கொண்டு வந்து விட்டாள்.

துணிகளை வாரிக்கொண்டு போனாள். பாத்திரம் தேய்த்தாள். தோட்டத்து செடிகளுக்கு நீருற்றினாள். வீட்டில் மாடி மற்றும் சில இடங்கள் அடைப்பாசமாக இருப்பதைப் பார்த்து, எதெது வேண்டும், எதெது வேண்டாம் என்று அக்காவிடம் பேசித் தெரிந்துகொண்டாள். ஒழிக்க ஆரம்பித்தாள்.

மூன்று நாட்களில் வீட்டின் முகமே மாறிப்போயிற்று.

“ஹால் மட்டும் சுண்ணாம்பு அடிச்சா நல்லா இருக்கும். டிஸ்டெம்பர் பெயிண்ட் அடிக்கலாங்களா?” புருஷனை கிசுகிசுப்பாய்க் கேட்டாள்.

இரண்டு பேரும் அக்காவிடம் போய் டிஸ்டம்பர் பெயின்டுக்கு மட்டும் காசு வாங்கி அவர்களே கரைத்து ஹால் முழுவதும் அடித்து கீழுள்ள இடங்களைச் சுத்தமாகத் துடைத்து, மறுபடியும் படங்களை மாட்டி, மாட்டுகிற போது இன்னும் சில சிறிய அழகிய மாற்றங்கள் செய்து வீட்டி

னுடைய தன்மையை ரசமானதாக மாற்றினார்கள்.

அக்கா அவ்வப்போது 'இதோ உதவிக்கு வருகிறேன்.' என்று எழுந்திருக்க, 'வேண்டாம், வேண்டாம்' என்று இவள் குரல் கொடுக்க, அக்கா நான்காவது நாள் 'உதவிக்கு வருகிறேன்' என்று குரலே கொடுக்கவில்லை. 'ஏம்மா அதை - முடிச்சிடு' என்று அதிகாரத்தோடு நிறுத்திக் கொண்டாள்.

அடுத்த இருபது நாளில் புருஷனும், மனைவியும் வேலை மட்டுமே குறிக்கோளாய் பிசாசு உழைப்பாய், இரவு வந்தால் படுத்ததும் தூங்குவது என்ற அலுப்பாய் தங்களை மாற்றிக் கொண்டார்கள்.

ஒரு முறை கைகோத்துக்கொள்ளும்போது 'உச்' சென்று துர்காதேவி கத்தினாள். சதாசிவம் என்ன என்று கேட்ட போது, அரிவாள்மணையில் நறுக்கிக்கொண்ட காயங்களைக் காட்டினாள்.

“உன்னை நான் சந்தோஷமா வைச்சுக்கலையோன்னு தோணுது. ரொம்ப குற்ற உணர்ச்சியா இருக்கு.” தொண்டை தழுதழுக்க சதாசிவம் பேசினான்.

“போடா அறிவுகெட்டவனே!” துர்காதேவி சீறினாள். “வெறுமனே எங்க வீட்டுல சாப்பிட்டு சாப்பிட்டு தூங்கிட்

டிருந்தேன். கண்டமேனிக்கு கனா, கன்னாபின்னான்னு யோசனை, எதிர்வீட்டுல இருந்த புருஷனும் பொண் டாட்டி யும் ரூமுக்குள்ள போய் கதவை சாத்திக்கறது எங்க வீட்டு ஜன்னல்லேர்ந்து தெரியும். அவங்க ரூமுக் குள்ள போய் கதவை சாத்தினவுடனே, என் இஷ்டத் துக்கு நான் யோசனை பண்ண ஆரம்பிச்சிடுவேனே. பத்து நிமிஷத்துக்கப்புறம், என்ன கண்றாவி இதுன்னு நானே தலையில அடிச்சிக்குவேன். அப்ப எனக்கு வேலையில்ல. பொழுது போகலை. அதனாலதான் அப் படி

இப்ப அதெல்லாம் இல்லை. நிம்மதியா தூங்கறேன். யார் வீட்டையும் எட்டிப் பாக்கறதுமில்லை. யாராவது அப் படி எட்டிப்பார்த்தாலும் ஏன் எட்டிப் பார்க்கறாங்கன்னு யோசிக்கிற புத்தியும் வரலை. இதைத் தவிர, இன் னொண்ணு சொல்லட்டுமா?" துர்காதேவி அவனை நெருங்கிவந்து காதோரம் முத்தமிட்டாள்.

"ஒரு குழந்தையை எப்படித் தூக்கறது. எப்படிக் கொஞ் சறது, அது என்ன கேக்கும், அதுக்கு எப்படிப் பதில் சொல்லணும்னு நல்லா தெரிஞ்சிகிட்டேன். நாளைக்கு நமக்கு ஒண்ணு பொறந்ததுன்னு வைச்சுக்க, அதுக்கு என்ன பண்ணனும்னு யாரும் எனக்கு சொல்லித் தர தேவையில்ல. மொத்த விஷயமும் எனக்கே புரியும். துர் காதேவி சொல்ல, சதாசிவம் பெருமூச்செறிந்தான்.

"ஏன் எதுக்கு இவளோ பெரிய பெருமூச்சு?" அவள் அவனை உலுக்கிக் கேட்டாள்.

"நாம என்னிக்கு தனிக்குடித்தனம் வைச்சு, என்னிக்கு புள்ளை பெத்து, என்னிக்கு அதை சீராட்டப் போறோம். எனக்கு ஒண்ணும் புரியலை."

"ஏன் அவ்ளோ அவநம்பிக்கையா பேசறீங்க?" துர்கா தேவி கேட்டாள்.

"லண்டன்லே அந்த அம்மாகிட்டே பேசினேன். 'எனக்கே ஒண்ணும் வேலை இல்லை சதாசிவம். நீ வேற எங்கியாவது வேலை பார்த்துக்க. வேற யார்கூடவா வது ஒட்டிக்க. என்னை நம்பாதே' அப்படின்னு தெள்ளத் தெளிவா சொல்லிடிச்சு."

"ஏன்ப்பா, லண்டன், லண்டன்னு தவிக்கறே. எங்கவும் போக வேணாம்பா. இங்க எங்கனா வேலை பார்த்துக்க. அதில வர்ற காசு போதும். ரொம்ப தூரம் போய் பிரிஞ்சு தவிக்கிற வாழ்க்கை எனக்கு வேண்டாம்."

"இங்க அடிமை மாதிரி இருக்கியே துர்கா."

"யார் சொன்னா, என்னை அடிமைன்னு. நானா இழுத் துப்போட்டு செய்யற வேலைதானே. உங்கக்கா அழகா படுக்கறதுக்கு ஒரு இடமும், சாப்பிடறதுக்கு சோறும் போடறாங்க இல்ல. அவங்களுக்கு இதுகூட செய்யாட்டி எப்படி. இதுவும் செய்யணும், இதுக்கு மேலயும் செய்ய ணும்."

"எங்கக்கா வரைக்கும் எல்லாம் சரிதான். எங்க அத்தான் வந்தா என்ன ஆகப்போவுதுன்னு தெரியலை. அந்தாள் ஒரு குரங்கு மனுஷன். இப்படியும் பாய்வாரு. அப்படி யும் பாய் வாரு!" சதாசிவம் சொல்லிவிட்டு யோசனையில் ஆழ்ந்தான்.

சதாசிவத்தின் அத்தான் சின்னசாமி தன்னுடைய டூரை முடித்துக் கொண்டு வீட்டிற்கு வந்தார். வீடு விட்டுப் பிரிந்திருந்த அலுப்பும் எரிச்சலும் அவர் பேச்சில் தெள் ளத் தெளிவாகத் தெரிந்தன.

"அட, என்னா இடம்லாம் மாறியிருக்கு" என்று ஒரு கணம் வியந்தார். மறுகணம் "ஆனா, எனக்கு புடிக் கலை. ரொம்ப சுத்தமா இருந்தா என்னமோ 'எக்ஸி பிஷன்' மாதிரி இருக்கு. வீடுன்னா கொஞ்சம் குப்பை இருக்க வேணாமா." என்று குற்றம் சொன்னார்.

“வாடா, கண்ணு! எப்பிடியிருக்கே. லண்டனுக்கு எப்ப போறே?” சதாசிவத்தைப் பார்த்துக் கேட்டார்.

“அவன் லண்டன்லாம் போகலை. காட்டுமன்னார்கோ வில்லயே கல்யாணம் பண்ணிக்கிட்டு பொண்டாட்டி யோட இங்க வந்துட்டான்.” அக்கா சொன்னாள்.

“கல்யாணமா, பொண்டாட்டியா!” அத்தான் அதிர்ந்தார். அவருக்கு விஷயங்கள் விளக்கமாகச் சொல்லப்பட்டன.

“உங்கப்பா நீ எங்கேன்னு தேடலையா?”

“தேடலை.”

“நீ இங்கே இருக்கேன்னு சொல்லிட்டியா?”

“போன் பண்ணி சொன்னேன். இங்கே இருக்கேன் னுட்டு.”

“என்ன சொன்னாங்க அதுக்கு?”

“அவங்க இஷ்டப்பட்டா இரு. இல்லேன்னா எங்கனா போ' அப்படின்னு சொல்லிட்டாரு. எனக்கு கொஞ்சநாள் இங்க இருக்க இடம் கொடுத்தீங்கன்னா...”

“உங்கப்பாவை எதிர்த்துக்கிட்டு நான் எப்படிப்பா உனக்கு இடம் கொடுக்கறது. அப்புறம் நான் உன்னை ஆதரிக்கிறா மாதிரி இல்ல ஆயிடும்? யார் உன் பொண் டாட்டி? எங்க இருக்கிறா இப்ப?”

“நம்ம வீட்டுலதான் இருக்காங்க!” அக்கா பதில் சொன் னாள்.

“நம்ம வீட்டுலன்னா, நான் போய்ப் பாக்கணுமா? எங்க இருக்காங்கன்னு அவங்க வந்து என்னைப் பார்க்கமாட் டாங்களா?”

சமையலறையிலிருந்து துர்காதேவி வெளியே வந்து, கிழக்குப் பார்த்த வண்ணமாய் அவரை நமஸ்கரித்தாள்.

"நீதானா... எங்கே இருக்கீங்க. காட்டுமன்னார்கோ விலா... உங்கப்பா யாரு? உங்கம்மா யாரு?" அத்தான் பதில் எதிர் பார்க்காமல் பேசிக்கொண்டே போனார்.

"உங்க வீட்டுலேர்ந்து உன்னைத் தேடலையா? இவன் வீட்டுல தேடறாங்க, தேடலை. அதப்பத்தி எனக்கு அக்கறை இல்லை. உங்க வீட்டுலேர்ந்து யாராவது வந்து எதனா கேட்டாங்கன்னா, என்பாடுல்ல தப்பா போயிடும். முதல்ல காட்டுமன்னார்கோவிலுக்கு போன் போட்டு பேசிடறேன்" அவர், அவர்கள் இருவரையும் எதிரே நிற்கவைத்து, சதாசிவம் அப்பாவோடு பேசினார்.

"அந்தப் பொண்ணு இங்க இருக்குங்களே வைச்சிக்க லாங்களா? அவங்க வீட்டுல எதுவும் சொல்ல மாட்டாங் களா? நான் ஏதாவது கடத்திட்டு வந்துட்டேன்ற மாதிரி ஆயிடப் போகுது. அதான் பயம் எனக்கு. நான் இந்த மாதிரி வம்பு தும்புக்கெல்லாம் போறதே இல்லே."

அத்தான் தன்னை ஒழுக்கசீலனாய் காட்டிக்கொண் டார். வெளியூரில் எங்கு போனாலும் இவருக்கு பெண் பிள்ளை தேவைப்படும் என்றும், எந்த ஊருக்குப் போய் இறங்கி னாலும் அதுதான் முதலில் விசாரிப்பார் என் றும் கூட வேலை செய்பவர்கள் கேலி செய்வது பல முறை சதாசிவத்தின் காதில் விழுந்திருக்கிறது. அக்கா வும் அதைப் பற்றி புலம்பியிருக்கிறாள். ஆனால், அதைத் தடுக்க செயலற்று கேள்வி கேட்காமல் அமைதியாய் இருந்துவிட்டாள்.

'அத்தானை இவ்வளவு உற்று இதற்கு முன்பு சதாசிவம் பார்த்தது இல்லை. அவருடைய பேச்சும் நடவடிக்கை யும் அவர் மிகவும் கெட்டிக்காரரர் என்பதைத் தெள் ளத்தெளிவாக தெரிவித்தன. பிற மனிதர்களை ஆழம் பார்க்கவோ, எடை போடவோ அவர் இடையறாது முயற்சி செய்கிறார் என்பது புரிந்தது. அப்பாவுக்கு எந்த

காலத்திலும் மரியாதை கொடுக்காத அத்தான், மிகவும் உரிமையோடு 'நல்லா இருக்கீங்களா' என்று அவரை நலம் விசாரித்து, பிறகு வீட்டிலுள்ள ஒவ்வொருவராக நலம் கேட்டு, பிறகு மெல்ல விஷயத்திற்கு வந்தது அவனுக்கு ஆச்சரியமாக இருந்தது. 'இவர் பிரச்னையை தீர்க்கப் போகிறாரா அல்லது பெரிதுபடுத்தப் போகி றாரா' என்ற சந்தேகம் எழுந்தது. வாழ்க்கையில் வளர்ந் தபிறகும் யாருக்கெல்லாம் பயப்பட வேண்டியிருக்கிறது என்று கவலைப்பட்டான். ஒருவேளை பெற்றோர்கள் பார்த்து வைத்திருந்த பெண்ணைத் திருமணம் செய் துகொண்டிருந்தால் இவர்கள் தனக்கு பயந்திருப்பார் களோ, தான் வந்து நின்றால் எழுந்து நின்று கைகூப்பி இருப்பார்களோ. அந்த மாதிரி மரியாதை களையெல் லாம் நான் ஒரே வீச்சில் இழந்துவிட்டேன்.' யோசிக்க, யோசிக்க சதாசிவத்துக்கு மனம் வலித்தது.

துர்காதேவி எதிரே உட்கார்ந்து கொண்டிருக்கிற அந்த மனிதரை உற்றுப்பார்த்தாள். அந்த மனிதருடைய கால் கள் இடம்மாறிக்கொண்டே இருந்தன. நன்கு அழுந்த சோபாவில் உட்கார்ந்திருந்தபோதும், கால்களை அகற் றுவதும் மறுபடியும் பின்னிக் கொள்வதும், வேகமாக ஆட்டுவதும், சட்டென்று நிறுத்தி விறைப்பாக்குவதும், மறுபடியும் கால்களைத் தளர விடுவதும், தளர விட்டபி றகு மீண்டும் தொடைகளை ஆட்டு வதும் அவளுக்கு கண்களை உறுத்தின. மனதில் காம கொந்த ளிப்பு இருப்பவர்களுக்குத்தான் கால்கள் இவ்விதம் அவஸ் தைப்படும். துர்காதேவிக்கு இதை ஒரு டீச்சர் சொல்லிக் கொடுத்திருந்தாள்.

நல்ல ஆண் உட்காரும்போது ஒரு காலை மடித்து ஒரு காலை தொங்கவிட்டு உட்காருவார். இரண்டு கால்க ளையும் வெவ்வேறு நிலையில் வைத்திருப்பவன்தான் மனதை அமைதியாக வைத்திருப்பான். மடிந்த காலும்,

தொங்கும் காலும் வெவ்வேறு நிலைகள். இதுதான் மனம் அமைதியாக இருக்கிறது என்பதற்கான வெளிப் படையான சாட்சி. இந்த மனிதனின் மனம் அவஸ்தைப் பட்டுக் கொண்டிருக்கிறது. கூடவே மற்றவர் அவஸ் தையைப் பார்த்து சிரித்துக்கொண்டிருக்கிறது என்று யோசித்தாள்.

அவள் வந்தபோதும், வந்து வணங்கி குனிந்தபோதும், குனிந்து நிமிர்ந்தபோதும் அந்த மனிதன் துர்காதேவி யின் முகத்தைப் பார்க்கவே இல்லை. மார்புகளை மட் டுமே பார்த்துக்கொண்டிருந்தான். அது மட்டுமே அவன் கண்களை அகல விரிவடையச் செய்தன. அதிலிருந்து பார்வையை சற்றும் விலக்காமல், 'நான் அப்படித்தான் பார்ப்பேன். நீ வேண்டுமானால் எங்கேயாவது போய் ஒளிந்துகொள்' என்பது போல் நடந்து கொண்டான்.

முற்றி, முதிர்ந்த ஆண்கள் எதற்கும் கவலைப்படாத ஆண்கள், அவமானத்துக்கு துணிந்துவிட்ட ஆண்கள் இப்படிப் பார்ப்பார்கள். 'ஏங்க தப்பா பார்த்தீங்களாமே' என்று கேட்டால். 'ஆமா. குட்டி கொஞ்சம் விடைப்பா இருந்துதா, எனக்கு வேறவழி தெரியலை. இதைச் சாப் பிட்டால் எப்படி இருக்கும்னு பார்த்தேன் ஆடு நிக்க றத பார்த்தா. உனக்கு குழம்பு ஞாபகம் வராதா' என்று சொல்லி சிரிப்பார்கள். கேட்பவருக்கு பதில் சொல்லத் தோன்றாத நிலையில். 'எனக்கு வரும்பா, நான் கொஞ் சம் பசி ஏப்பக்காரன்' என்று மறுபடியும் சிரிப்பார்கள்.

இது தர்மமா, நியாயமா என்றெல்லாம் அவர்களைக் கேட்க முடியாது. கேட்டால் அவர்கள் தன் பக்கமுள்ள தருமத்தை அள்ளி வீசுவார்கள். இவர்களை ஜெயிப் பது கடினம். இவர்கள் வலையில் விழாமல் தப்பிப்பதற்கு மிகுந்த கவனம் வேண்டும். இவர்களிடம் நம்பி நெருங்கி வந்து விட்டால், எந்த நேரமும் எது வேண்டுமானாலும்

செய்வார்கள். மிக ஆபத்தானவர்கள், எதற்கும் துணிந் தவர்கள்.

'அக்கா வீடு சௌகரியம் என்று இருபது நாள் நினைத்தி ருந்த விஷயம். இருபது நாள் நினைத்திருந்த நினைப்பு பொடிப் பொடிப்பாயிற்று. எவ்வளவு சீக்கிரம் இந்த இடத்தை விட்டு போக முடியுமோ, அவ்வளவு சீக்கிரம் போவது எனக்கு நல்லது. எனக்கு... எனக்கு நல்லதென் றால் சதாசிவத்திற்கு நல்லது.

ஆனால், சதாசிவம் வெளியே போய்விடலாம் என்று சொன்னபோதெல்லாம், வேண்டாம் என்று தடுத்து நிறுத்தி விட்டு இப்போது வெளியே போகலாம் என்று சொன்னால் அது ஒரு நன்றிகெட்ட செயல் போலத் தோன்றுகிறது. ஒருவேளை தொடர்ந்து இங்கேயே இருந்தால் இந்த ஆள் அத்துமீறினால் என்ன செய்வது?

இப்பொழுதுதான் மெல்ல ஒரு எண்ணம் உள்ளுக் குள்ளிருந்து வெளியே வருகிறது. 'ஓடிவந்தது பிசகோ, இன்னும் சற்று தாமதித்து திருமணம் செய்து கொண் டிருக்கலாமோ. ஓடிவந்தவர்களை ஊர்தாங்கும் என்று நினைத்ததும் தவறோ. எல்லோரும் நல்லவர்கள் என் கிற எண்ணம் எவ்வளவு முட்டாள் தனமானது. இப்படி ஓடிவந்ததாலேயே இவர் களுக்கு நாம் இழிவாகப் போய், இவர்களுக்கு இழிவாகத் தோன்றுவதாலேயே நம்மை அனுபவிப்பதற்கும், தொடுவதற்கும் முயற்சி செய்வார் களோ.'

துர்காதேவி கண்களை மூடிக்கொண்டாள். உடம்பு நடுங்கிற்று. 'சே, நாமாக ஏன் அநியாயமாய் யோசனை செய்ய வேண்டும். எதுவும் நேராதபோது, எல்லாம் நேர்ந்துவிட்ட தாய் ஏன் பயப்பட வேண்டும்? அப் படி மிஞ்சி அருகே வந்தால் கூச்சலிடமுடியாதா. ஊர் கூட்ட முடியாதா. பெண் கூச்சலிட்டு ஊர்கூட்டினால் ஊர்

சும்மா விட்டுவிடுமா." துர்காதேவி வேகமாய் யோசித்தாள். உனக்கு அடைக்கலம் கொடுத்து சோறுபோட்டு, நான் பார்த்துக்கொள்கிறேன் என்று ஒரு வீடு சொல்லும். அந்த வீட்டை ஊர்கூட்டி குறைசொல்வாயா. இதுமட்டும் நியாயமா. உன்னை யார் இங்கு வரச்சொன்னது என்று ஊர் கேட்டால் என்ன செய்வாய்?

"இந்தப் பொண்ணு இதுக்கு முன்னாடி நாலஞ்சு பேரோட ஓடியிருக்குதுங்க. ஒருமாதிரி கேஸுதான் இது. என் மச்சான் ஏமாந்துட்டான்" என்று அப்போது இவர் சொல்லமாட்டார் என்று என்ன நிச்சயம். பிறகு காதல். என்பது சந்தி சிரிக்கிற விஷயமாய் போய்விடும். அந்த காயம் வாழ்நாள் முழுவதும் ஆறாது. வலியோடே தொடர்ந்து இருக்கவேண்டி வரும்.

'கடவுளே, எவ்வளவு மோசமான ஒரு காலகட்டத்தில் நான் இருக்கிறேன்.' அவள் உள்ளுக்குள் கைகூப்பினாள். எந்த அசம்பாவிதமும் நேராமல் காப்பாற்று என்று வேண்டினாள்.

மனிதர்களின் புத்திசாலித்தனம் முடங்கும் போது, உடல் பலம் குறையும்போது கடவுள் நம்பிக்கை அதிகரித்து விடுகிறது.

வாழ்க்கையில் வேதனை வெகுவேகமாய் அந்த இளம் தம்பதிகளைத் தாக்க ஆரம்பித்தது. முதல் இரண்டு நாட்கள், சோறும், தூக்கமுமாக இருந்த அத்தான், மெல்ல மெல்ல துர்காதேவியைப் பின்தொடர ஆரம்பித்தான். 'அந்தப் பொண்ணு ஒண்ணும் நல்ல மாதிரியா தெரியலையேடா' என்று சதாசிவத்திடம் சொன்னான்.

"இவன் என் மச்சானா இருந்தாலும் நான் இவனை நம்ப மாட்டேன். அந்த குடும்பம் மொத்தமுமே முன்ன, பின்ன டான்ஸ் ஆடின குடும்பம்தான். ஒரு ஆம்பளையும் ஒழுக்கம் கிடையாது. இவங்க அப்பனைப்பத்தி நிறைய கதை

சொல்வாங்க." அநியாயமாய் துர்காதேவியிடம் புளுகினான்.

"யார்னா லவ் பண்றேன்னா நீங்களும் பதிலுக்கு லவ் பண்ணிடுவீங்களா. அவனுக்கு என்ன யோக்கியதை, என்ன வேலை, எவ்ளோ சம்பளம் அதெல்லாம் கேக்க மாட்டீங்களா.

ஒரு ஆள் என்ன சம்பாத்தியம் பண்ணா போதும்னு நினைக்கிறே. இன்னி தேதிக்கு பத்தாயிரம் ரூபா சம்பாரிச்சா சுமாரா குடித்தனம் பண்ணலாம். அவனுக்கு அதுகூட வருதோ, இல்லையோ... தெரியலை. எனக்கு எவ்ளோ சம்பளம் தெரியுமா இருபத்து அஞ்சாயிரம் ரூபா. மத்தபடிக்கு மேல் வருமானம்லாம் நிறைய இருக்கு. அப்படிச் சம்பாதிக்கிற நானே அப்பப்ப கஷ்டப் படறேன்னா, இந்த மாதிரி கபோ திங்களை நம்பிக்கிட்டு நீ எப்படி வெளியே வந்தே?" அவளை தனியே அழைத்துப் போய் சின்னசாமி கேள்வி கேட்டான்.

"உங்கக்கா ஒண்ணும் அவ்ளோ ருசியான பொம்பளை இல்லை. ஆனா, எல்லை மீற மாட்டா. வீட்டுப்படி தாண்டமாட்டா. இந்தப் பெண்ணைப் பார்த்தா எனக்கு அப்படித் தெரியலைடா. இவ நிக்கிறது, நடக்கறது எல்லாமுமே பாரு பாருன்ற மாதிரிதான் இருக்குதே தவிர, ஒரு அடக்கமா தெரியலை. இந்த மாதிரி பொண்ணுங்களுக்கு நீ சரிவரதுட்டு கொடுக்கலே, புடவை துணி மணி வாங்கித் தரலேன்னு வை தப்புன்னு பிய்ச்சிக்கினு போயிடுவாளுங்க. ஆம்பளைங்க ளோட பெரிய சோகம் பொண்டாட்டி செத்துப்போறது. பொண்டாட்டி செத்துப் போறதே சோகம்னா, உன்னை விட்டுட்டு உன் பொண்டாட்டி ஓடிப் போயிட்டாள்னா, அதவிட பெரிய சோகம் உலகத்தில் உண்டா? அதைவிட பெரிய அவமானம் உண்டா? என்னத்துக்கு போயும் போயும் இப்படி ஒரு

சனியனை கொண்ணாந்துட்டு அவஸ்தைப் பட்டுக்கினு இருக்கே!" சதாசிவத்திடம் தனியே சொன்னான்.

"ஆம்படையான், பொண்டாட்டி ரூம்ல படுத்துக்கலாம். ஆனா, நீங்க ரூம்ல படுத்துக்கறது எனக்குப் பிடிக்கலை. ஒண்ணு கிடக்க ஒண்ணு ஆச்சுன்னாக்கா, இங்க பிள் ளைப் பேறு நாங்களா பார்க்கறது? கேட்டா ஜாக்கிரதை யா இருக்கிறதாதான் சொல்வீங்க. கடைசியிலே வந்து, என்னா, செய்யறது. கடவுள் குடுத்துட்டாருன்னுவீங்க. அதெல்லாம் பெரிய பிரச்னை. அதனால நீ ஹால் லயே படு. ஹால்ல நல்லா காத்து வரும்டா. இங்க ஏன் கொசுக்கடியிலே உட்கார்ந்துகிட்டு அவஸ்தைப்படறே." அவனை ஹாலுக்கு துரத்தினான். அவளை மாடிக்கு வரவழைத்தான்.

'முதல்ல சதாசிவத்துக்கு ஒரு வேலை வாங்கித் தர ணும். அப்பதான் எல்லாம் சரியா வரும்' என்று தனக் குத்தானே அவ்வப்போது உரத்துச் சொல்லிக் கொண்டு இருந்தான். இந்த வசனத்திற்கு என்ன அர்த்தம் என்று எவருக்கும் புரியவில்லை.

அக்காவுக்கு எல்லாம் புரிந்தது. ஆனால், எதுவும் சொல்ல முடியாது. ஏதேனும் சொல்ல முயற்சித்தால் மிகக் கடுமையான வார்த்தைகளில் அவள் அடக்கப் பட்டு விடுவாள்.

"இதோ பாரு... ஏதோ ஒரு மரியாதைக்குக் கட்டுப்பட்டு உன்கூட நான் குடித்தனம் பண்ணிக்கிட்டிருக்கேன். அதையும் கெடுத்துக்காதே. அப்புறம் சந்தி சிரிச்சிடும்" என்று அக்காவை அதட்டி உட்கார வைத்தான். இங்கே பெருக்கு. இங்கே துடை. இந்த டிபன் செய்து வை' என்று இடைவிடாது துர்கா தேவிக்கு கட்டளையிட்டான்.

"நீ எதுக்கும் கவலைப்படாத. அவன் வெளியூர் போற தாக இருந்தாலும் நான் உன்னைக் கவனிச்சிறேன் நம்ம

வீட்டுலயே தங்கி நீ சந்தோஷமா இருக்கலாம்" என்று இன்னொரு வலை விரித்தான்.

"நீங்களும், அக்காவும் எனக்கு அப்பா, அம்மா மாதிரி. நீங்க இருக்கிறபோது எனக்கு என்ன குறை" என்று பதிலுக்கு துர்காதேவி சொல்ல, அவன் முகம் கோணினான்.

"உனக்கு எத்தினி அப்பா, அம்மா இருக்க முடியும். ஒரு அப்பா, அம்மாதானே. ரோட்டுல போற வர்றவனையெல்லாம் அப்பா, அம்மான்னா நல்லாவா இருக்கு. உங்கம்மாவுக்கு அசிங்கம். அப்படியெல்லாம் சொல்லாதே. நீ என் மச்சான் பொண்டாட்டி. அண்ணன் பொண்டாட்டி அரைப் பொண்டாட்டி, தம்பி பொண்டாட்டி தன் பொண்டாட்டி, மச்சான் பொண்டாட்டி முழு பொண்டாட்டி" என்று சொல்லி வாய் விட்டுச் சிரித்தான்.

அந்த ஆபாசம் துர்காதேவியின் மனதை அதிகம் வலிக்கச் செய்தது. என்ன செய்வது என்று தெரியாமல் அவள் குழம்பிப் போனாள். உறக்கம் வராமல் தவித்தாள். உடல் சோர்ந்து போய் தள்ளாடினாள். உணவு உட்கொள்ள முடி யாமல் திணறினாள். வெறும் கரைத்துக் குடித்தால் கூட அது வயிற்றுவலியைக் கொடுத்தது. மனம் எப்போதும் ஒரு திகிலில், இல்லறத்தில், அருவருப்பில் மிதந்துகொண்டே இருந்தது. தனிக்குடித்தனம் போய்விடலாமா என்று யோசித்தாள். ரகசியமாய் சதாசிவத்திடம் சொன்னாள்.

"லண்டன்ல இருக்கற அந்தம்மாகிட்ட நேத்துதான் போன் பண்ணி விஷயம் சொன்னேன். 'ஒரு ரெண்டு நாள் பொறுத்து போன் பண்ணு. நான் எதனா ஏற்பாடு பண்றேன்' அப்படின்னு சொன்னாங்க. இப்பபோய் தனிக்குடித்தனம் போகலாம்னு சொல்றியே துர்கா!" அவன் கலங்கினான்.

"சரி, வேணாம் விட்டுருங்க."

"இல்ல. நாம தனிக்குடித்தனம் போகலாம்." அவன் மறு படி துவங்க, "இல்ல, வேண்டாம் விட்டுருங்க. அவங்க ஏதாவது ஏற்பாடு பண்ணாக்க அப்ப நம்ம கையில காசு வேண்டியிருக்கும்." துர்காதேவி இடைமறித்தாள்.

"இல்ல துர்கா. அவங்க என்ன ஏற்பாடு பண்ணாலும் நான் போகலை. நீ சொன்னாபோல உன்கூடயே இருந் துர்றேன்."

"இல்லைங்க. நீங்க என்கூட இருக்கறது முக்கியமில்ல. நீங்க ஊருக்குப் போய் நல்லா சம்பாதிக்கணும். நான் எங்க வீட்டுக்குப் போயிடறேன். எங்க வீடுதான் எனக்கு சௌகரியம். நீங்க வெளியூர் போய் சம்பாதிச்சீங்கன்னா அதுவும் எனக்கு மரியாதையா இருக்கும்."

"உங்க ஊருக்குப் போறதா இருந்தா இன்னிக்கு இப் பவே போகலாமே."

"இல்ல... எவ்ளோ முடியுமோ, அவ்ளோ தாக்குப்பிடிப் போம். நாம ஊருக்குப் போறதை கடைசிபட்சமா வைச் சுக்கு வோம். நாம ஊருக்குத் திரும்பிப் போனா, அது நமக்கு மட்டும் அவமானமா. எங்க அப்பா, அம்மாவுக்கு அவமானம் இல்லையா. உங்க வீட்டுக்கு அவமானம் இல்லையா. வீட்டைச் சுத்தி என்னன்னமோ பேசமாட் டாங்களா. காட்டு மன்னார்கோவில்ல எப்படிப் பேசு வாங்கன்னு உங்களுக்குத் தெரியாதா? எத்தினி மாச மானாலும் வீட்டைவிட்டு வெளியே வரமுடியாது. வந்தா எதனா பேச்சு வரத்தான் செய்யும். பேச்சுமேல பேச்சு விழுந்து, அது பெருசாகி மறுபடியும் அடிதடி, கலாட்டா, பஸ்ஸ்டிரைக், ரகளைன்னு பேப்பர்ல போடாத குறையா எல்லா விஷயமும் சந்தி சிரிக்கும். அத னாலதான் ஊருக்குப் போக பயப்படறேன். சின்ன விஷயமும் பெரு

சாயிடுமே, ரகளையாயிடுமே. போலீஸ் கேஸ் ஆயிடு மேன்னு அச்சப்படறேன்." துர்காதேவி சொல்லி முடிக்க.

"காட்டுமன்னார்கோவில்ல ஒரு மாதிரி ரகளை, இங்கே வேற மாதிரி ரகளை. என்ன செய்யறதுன்னே புரியலே..." சதாசிவம் திகைத்துப்போய் மனம்கலங்கிப் பேசினான். அவள் அவன் தலையைக் கோதி விட்டாள்.

"கடவுளை வேண்டிருக்குங்க. இடைவிடாம வேண்டிக் குங்க. நம்ம சிவன் கோயிலுக்கு தினமும் பதினோரு குடம் சுத்தமான ஜலம் கொண்டாந்து ஊத்தறதா நான் வேண்டிக் கிட்டிருக்கேன். 'முப்பது நாள் தொடர்ந்து செய் வேன்' அப்படின்னு சங்கல்பம் பண்ணியிருக்கேன். குளி ரக் குளிர சிவ பெருமானை ஜலம் ஊத்தி சந்தோஷப்ப டுத்தினா நம் வாழ்க்கையும் ஜில்லுன்னு ஆவும். எல்லா மூளைக்கொதிப்பும் நிச்சயம் குறைஞ்சு போகும். அவள் மனமுருகிப் பேசினாள்.

"சதாசிவம் வீட்டுல சும்மாதானே இருக்கான். அவருக்கு இன்னிக்கு நைட் ட்யூட்டி. ராத்திரிக்கு ஆப்பம், தேங் காய்ப் பால் செய்து அனுப்பேன். ஆப்பம் சாப்பிட்டு ரொம்ப நாள் ஆச்சு!" அக்கா வேண்டுகோள் விடுக்க, துர்காதேவி சரியென்று தலையசைத்தாள்.

சதாசிவம் ஆப்பம், தேங்காய்ப்பாலோடு பதின்மூன்று கிலோமீட்டர் தள்ளி இருக்கின்ற அத்தான் சின்னசாமி யின் அலுவலகம் போகும்போது அவர் அங்கு இல்லை. வீட்டுக்குப் போறேன்னு போய்ட்டாரே' என்று அங்குள் ளவர்கள் சொன்னார்கள்.

"வீட்டுக்குப் போறேன்னு சொல்லலைப்பா. வேற எங் கியோ ஒரு முக்கியமான வேலையா போறதா சொன் னாரு."

"வேற எங்கியோ முக்கியமான வேலைன்னா அந்தாளு வீட்டுக்குத்தான் போறான்னு அர்த்தம். சிங்கப்பூர்க்கா

ரன் கிட்ட 'பாடி ஸ்ப்ரே'ல்லாம் வாங்கினு இருந்தான். அந்தாளு ரொம்ப குஷால் மூடுல இருந்தான்."

"ஆமாய்யா, அவங்க வீட்டுக்கு யாரோ ஒரு சொந்தக் கார பொண்ணு வந்திருக்குதுதாம். நல்ல ஜாதி கட்டை யாம். அதை எப்படியாவது மடக்கிடணும்னு பேசினுருந் தான்."

"டேய், சும்மா இருடா. அவங்க சொந்தக்காரரு வந்திருக் காரு. அவரு எதிர்லயே கன்னாபின்னான்னு பேசறியே. அறிவுகெட்டவனே!" அந்த அலுவலகத்தில் அவரைப் பற்றி இனங்காட்டினார்கள். அவனுக்கு பகீரென்றது. மறுபடியும் பஸ் பிடித்து வீட்டிற்கு வந்தான். கதவு தட்டி னான். துர்காதேவி வந்து கதவு திறந்தாள்.

சதாசிவம் உள்ளே போக, அவன் அக்கா ஹாலில் குப் புறப் படுத்து அழுதுகொண்டிருந்தாள். வீடு நிசப்தமாக இருந்தது. தரையில் பாத்திரங்களும், வேறு சில பொருட் களும், காகிதங்களும் இறைந்து கிடந்தன. துர்காதேவி யிடம் 'என்ன' என்று விசாரித்தான்.

"அத்தான் வந்தாரு. எங்கிட்ட கன்னாபின்னான்னு ஏதோ பேசிட்டிருந்தாரு. நான் எங்க போனாலும் பின் னாடியே வந்தாரு. 'எனக்கு தூக்கம் வருதுங்க'ன்னு சொல்லி நான் ரூமுக்குள்ள போய் கதவை தாழ்ப்பாள் போட்டுக்கிட்டேன். ஒரு பத்து நிமிஷம் சைலண்ட்டா இருந்தாரு. சரி, தூங்கிட் டாரு போலன்னு நினைச் சேன். அப்புறம் பார்த்தா, அக்காவை கூப்பிட்டு, 'ஏண்டி அங்க நிக்கறே, ஏண்டி அங்க உக்காந்தே, ஏண்டி உங் கப்பா எனக்கு சரியா மரியாதை பண்ணலை, என்னடி சீர் கொண்ணாந்தே. உன்னாலே எனக்கு என்ன உப யோகம்'னு அவங்களை வம்புக்கு இழுத்து, அவங்களை பேச வைச்சி, 'என்னையாடி எதிர்த்து பேசறே'ன்னு நாலு அறை கொடுத்துட்டு வேலைக்குப் போயிட்டாரு.

ரொம்ப பாவமா இருந்திச்சி. தலைமுடியைப் பிடிச்சி, 'தரதர'ன்னு கூடத்துக்கு இழுத்துக்கினு வந்து முதுகி லேயே பளார் பளார்னு அறைஞ்சாரு. துடிச்சிப் போயிட் டாங்க.

எனக்கு ஒண்ணுமே புரியலை. எங்கயோ ரொம்ப பெரிய பாவம் பண்ணிட்டோம். நாம ரெண்டு பேரும் சேர்றது உலகத்திலே யாருக்குமே புடிக்கலைன்னு நினைக்கி றேன். இல்ல, என்னைப் பார்த்தாதான் கெட்ட ஜாதி பொம்ளையா தோணுதா. அதுவும் தெரியலை."

"இப்ப என்ன பண்ணலான்றே?"

"தனியா வீடு பார்த்துன்னு போயிடலாங்க. அக்கா அதான் சொல்லிச்சு. 'நீ இங்க இருக்கிறவரைக்கும் எனக்கு இதாண்டி கிடைக்கும். நீ என்னமோ உதவியா இருப்பேன்னு நினைச்சேன். நீ உதவியில்லைடி. உன் னால எனக்கு அடி, உதைதான் மிச்சம்' அப்படின்னு அக்காவே சொல்லிடுச்சி. நாளைக்கு காலையிலேயே நாம ரெண்டு பேரும் கிளம்பி போயி தாம்பரம், கூடு வாஞ்சேரி எங்கனா ஒரு இடத்துலே வீடு பார்த்து டக் குன்னு குடிபோயிடுவோம்."

"குடி போயிட்டா சரியாயிடுமா?"

"வேறவழி தெரியலையே. இங்க இருந்தா, எனக்கும் நல் லதில்ல. அக்காவுக்கும் நல்லதில்ல."

"சரி, காலையிலே ஆறு மணிக்கு கிளம்பிடலாம்." சதாசி வம் தீர்மானித்தான்.

விடிவதற்கு அவர்கள் காத்திருந்தார்கள். காலை ஐந்து மணிக்கு எழுந்தார்கள். குளித்தார்கள் காபிகூட சாப் பிடாமல் அக்காவிடம் ஒரு வார்த்தை சொல்லிவிட்டு அவர்கள் வெளி யேறினார்கள். உள் பக்கம் அக்கா கதவை தாழ்ப்பாள் போடுவது கேட்டது. வெளியே

இறங்கி நடந்தார்கள். நடந்த சில வினாடிகளில் உள்ளுக்குள் டெலிபோன் மணி அடிப்பது கேட்டது. அவன் தயங்கி நின்றான்.

"வாங்க அவராதான் இருக்கும். அவர் ஏதாவது கூப்பிட்டுப் பேசுவாரு. ஏதாவது சொல்லுவாரு. நாம இருக்கோமா, இல்லையா அப்படின்னு தெரிஞ்சுக்கறதுக்கு போன் பண்ணுவாரு. வாங்க போகலாம்."துர்கா சொல்ல, அவர்கள் தொடர்ந்து நடந்தார்கள்.

உள்ளிருந்து அக்கா குரல் கொடுத்தாள். "டேய், சதாசிவம்! உனக்கு லண்டன்லேர்ந்து டெலிபோன்."

சதாசிவம் திரும்பி வீட்டை நோக்கி ஓடினான். கதவுக்கு அருகே நின்றான். அக்கா கதவு திறந்தாள். உள்ளே போய் டெலிபோன் எடுத்து காதில் வைத்தான்.

"இங்க எனக்கு ஒரு பெரிய ஹோட்டல்ல வேலை கிடைச் சிருக்கு. அதில் ஒரு பகுதியை ஆயிரத்து தொள்ளாயிரத்து நாப்பதாவது வருஷத்து பிரிட்டிஷ் சூழ்நிலையில் வைச்சிருக்காங்க. அங்க வேலை செய்யறவங்களும் அந்த சூழ்நிலைக்கு ஏத்தமாதிரி அந்தக் காலத்து பிரிட்டிஷ் டிரஸ்ஸோட வேலை செய்யறாங்க. அந்த இடத்தை இன்டீரியர் டெக்கரேட் பண்றதுக்கு நான் டிராயிங் போட்டு காமிச்சேன். அவங்களுக்கு அது பிடிச்சுப்போயி 'சரின்னு அந்த வேலையை எனக்கு கொடுத்துட்டாங்க. நீ வந்துட்டின்னா நல்லா இருக்கும். வரும்போது அங்கேயிருந்து நீ நிறைய சாமான் வாங்கிட்டு வரவேண்டியிருக்கும். நிறைய போட்டோஸ் புடிச்சுக்கிட்டு வரவேண்டியிருக்கும். வந்துடறியா, காசுபத்தி என்னால இப்போதைக்கு ஒண்ணும் சொல்ல முடியாது'

"வந்துடறேன் மேடம்!" அவன் இங்கிருந்து கூவினான்.

"அங்கேயே இரு. இன்னும் ரெண்டுநாள்ல மெட்ராஸ் கம்பெனிக்கு ஃபேக்ஸ் பண்றேன். நீ போய் கேட்டுத்

தெரிஞ்சுக்க. உனக்கு விசா எல்லாம் ஃபேக்ஸ்லயே வந்துரும்." அவன் எஜமானியும் உரக்கக் கூவினாள். நாளையும் டெலிபோன் செய்வதாகச் சொன்னாள்.

அவர்கள் வெளியே போவதை ஒத்திப்போட்டார்கள். மறுபடியும் வீட்டிற்கு வந்து உட்கார்ந்து கொண்டார்கள்.

"என்னடா?"

"லண்டன்லே வேலை கிடைச்சிருக்குக்கா."

"இவளை என்ன பண்ணப்போறே?"

"இங்கதான்க்கா விட்டுட்டுப் போகணும்."

"இங்கன்னா, இந்த வீட்டுலயா? இந்த வீடு நரகம்டா. நான் என்னா சித்ரவதைப்படறேன்னு உங்க யாருக்கும் சொன்னதில்லே. இங்க இவளை விட்டுட்டுப் போனே, இந்தாளு பாழ்படுத்திடுவான். உன் கூடயே கூட்டின்னு போயிடுறா."

"இப்பவே போயிடறதா, இல்ல உங்க வீட்டுக்காரரு வந்தவுடனே போறதா?"

"இப்பவே போனா இந்தாளு என்ன வேணா செய்வான். நீ பத்து பவுன் நகை திருடிட்டுப் போயிட்டேன்னு போலீஸ்ல புகார் கொடுத்திடுவான். 'போலீஸ் கேஸை வாபஸ் வாங்க னும்னா பொண்டாட்டியை படுக்கறதுக்கு அனுப்பு அப்படின்னுவான். அதனால இந்த ஆள் கிட்ட மாட்டாதே."

"வேற என்னக்கா பண்ணச் சொல்றீங்க?"

"நீங்க ரெண்டுபேரும் சண்டை போட்டுக்கங்க. இத்தினி நேரம் யோசனை பண்ணி இந்த முடிவுக்குத்தான் வந்தேன்."

"என்ன முடிவுக்கா?"

"லண்டன் போக வேணாம்னு அவ சொல்றா. லண்டன் போவேன்னு நீ பிடிவாதம் பிடிக்கிறே. உங்க ரெண்டு பேருக்கும் அடிதடி, ரகளை மாதிரி நடக்குது. 'நான் வீட்டை விட்டு போறேன். எங்க அப்பா கிட்டே போறேன்'னு அவ சொல்ல, 'போ, தொலைஞ்சு போ'ன்னு நீ சொல்லி அப்படியே ராவோட ராவா அவளை அவங்க வீட்டுக்கு கொண்டுபோய் விட்டுட்டு வந்துடு. எதிராளி ஒத்துமையா இருந்தா இவர் வெறுப்பாயி, 'அது எப்படி நீ சந்தோஷமா இருக்கலாம்'னு இடிக்க ஆரம்பிப்பாரு. நீங்க சண்டை போட்டா சந்தோஷமாயிடுவாரு. ஜோடியைப் பிரிச்சுட்டோம்னு மனசு நிம்மதியாயிடும். அது பிரிச்சி சந்தோஷப்படற ஜாதி. அதனால அவரு எதிர்க்க சிரிச்சி பேசாதீங்க. சண்டை போடுங்க. நல்லா செமத்தியா, நீ அவளை நாலு அறை விடு. அடிதாங்காம அலறி, 'உன் சங்காத்தமே வேணாம்டா'ன்னு அவ தாலியை அறுத்து வீசி எறியட்டும்."

"அக்கா! அவ்ளோ செய்யணுமா?"

"ஆமாண்டா. அப்படி செஞ்சாதான் இவரு மிரளுவாரு. 'நிஜமாவே சண்டையாயிடிச்சி போல இருக்கு. நான் அப்பவே சொல்லலை, இவ பஜாரி'ன்னு அப்படின்னு சொல்வாரு."

"அக்கா, அவர் இதை ஊர் முழுக்க சொன்னாருன்னா?"

"சொல்லிட்டுப் போட்டண்டா. ஊர்ல இருக்கறவங்களும் இதையே நம்பட்டும். நீ அங்க போய் நல்லபடியா சம்பாதிச்சி திரும்பி இங்க வந்தவுடனே அழகா, அற்புதமா இந்த பொண்ணை வெச்சி குடித்தனம் பண்ணலாம். ஊர் எதிர்க்க ரொம்ப சந்தோஷமா இருந்திரக்கூடாதுடா. இருந்தா சரியா வராது. ஓடிப்போனவங்க தோத்துப்போனா தான் இவங்களுக்கெல்லாம் நிம்மதி.

நான் காதல்ல தோத்துப் போனதாலதான் ஊர்ல இருக் கறவங்க என்னைப் பார்த்து, அய்யோ பாவம்னாங்க. நான் ஜெயிச்சிருந்தன்னா, என்னை விதவிதமா கொன் னுட்டு இருப்பாங்கடா. எனக்கு ஒழுங்கா கல்யாணமே ஆயிருக்காது. மேல பேசறதுக்கு நேரம் இல்லை. அது ஆறு மணிக்கு ட்யூட்டி முடிஞ்சு வந்துடும். இங்க வந்தவு டனேயே ரகளையை ஆரம்பிச்சிடு."

"அக்கா, எங்களால உங்களுக்கு ரொம்ப கஷ்டமாக்கா."

"போனா போவுதுடா. பழசு எல்லாத்தையும் மறந்துடு. இனிமே நடக்கப்போற விஷயங்கள்ல தெளிவா இரு. லவ் பண்ற பொண்ணை கடைசிவரைக்கும் கைவி டாம காப்பாத்தறியே, அது எனக்கு ரொம்ப சந்தோஷமா இருக்கு. இப்படித்தான் என்னை லவ் பண்ணினவனும் காப்பாத்து வான்னு நினைச்சேன். அவன் நாலு பேர் சேர்ந்து மிரட்டினவுடனே பொட்டியைத் தூக்கிக்கிட்டு ஓடியே போயிட்டான். அவன் பொட்டியைத் தூக்கிக் கிட்டு ஓடிப்போன உடனே அந்த நாலுபேரும் திரும்பி, 'பார்த்தியா எப்படி ஓடிப்போயிட்டான் பாரு. எங்கூட வர் றியா, எங்கூட வர்றியா'ன்னு தனித்தனியா கேட்டாங் கடா. ஒரு லவ்வை இவங்க ஏன் தெரியுமா பெஃலியர் ஆக்கறாங்க. அவங்க சாப்பிடறதுக்காக. தயவு செய்து நீ அதில் மாட்டாத. நீங்க ரெண்டு பேரும் சண்டை போட் டாபோல இருந்தாக்கா, அவங்களுக்கு கொண்டாட்ட மாயிடும். இனிமே இந்த ஜோடி சேராதுன்னு சொல்லி விட்ருவாங்க. அதுக்கப்புறம் அவங்க வீட்டுக்குப் போயி, அந்தப் பொண்ணைத் தொடறதுக்கு எவனுக்கும் பெரிய தைரியம் வராது.

என்ன, இவ கொஞ்சம் வெளிய நடமாட முடியாது. வீட் டோட உக்காந்துகினு 'ராமா, ராமா'ன்னு சொல்லிக் கினே இரு. அது மொத்தமும் உன் புருஷனுக்கு பலமா இருக்கும். அங்க ஒருத்தி தனியா நமக்காக காத்திருக்

கான்னு நீ நினைச்சினா. அது லண்டனோ அமெரிக்காவோ உன்னால 'ஆஹா, ஓஹோ'ன்னு வேலை செய்ய முடியும்.

எனக்குத் தெரியுது, சின்னஞ்சிறுசுங்க மூலைக்கு ஒருத்தரா எங்கியோ இருக்கறது கஷ்டம்தான். ஆனாலும் இதான் நல்லது. நல்லா காசு சம்பாரிச்சிக்கிட்டு வந்து நூறு பேருக்கு சோறு போட்டு இன்னொரு தடவை தாலி கட்டுறா. ஊர்ல நாலு பேருக்குத் தெரியற மாதிரி தாலி கட்டு. அதான் அவளுக்கும் மரியாதை அவளைச் சேர்ந்தவங்களுக்கும் மரியாதை.'

அக்கா சொல்ல, சதாசிவமும், துர்காதேவியும் விரைவாக யோசித்தார்கள்.

"ஏன்க்கா. தாலி அறுத்து வீசலாமா?" துர்காதேவி கேட்டாள்.

"அந்த மாதிரி பெரிய டிராமா பண்ணாதாண்டி இவங்கள்லாம் நம்புவாங்க. இல்லைன்னா நம்பமாட்டாங்க.

நீங்க சேர்ந்து சந்தோஷமா இருக்கறது ஊர் கண்ணு பட்டிருக்கு. நீங்க லவ் பண்றது ஊர்கண்ணு பட்டிருக்கு. நீங்க பிரிஞ்சி இருந்தா எல்லா திருஷ்டியும் தானா புடுங்கினு போயிடும். அதனால கவலைப்படாத நான் சொல்றபடி செய்ங்க.

"ஏன்க்கா, இவளோ திடமா சொல்றே?"

"இதே மாதிரி பண்ணுன்னு அந்த வாத்தியார் எங்கிட்ட சொன்னாரு. நாம் ரெண்டுபேரும் சண்டை போட்டா மாதிரி பிரிஞ்சிக்கலாம். அப்புறம் ஒண்ணா சேர்த்துக்கலாம்னாரு. நான் நம்பலை. விட்டுட்டேன். மூணு வருஷம் கழிச்சி, அந்தாளு நிறைய காசோட திரும்பி வந்தான். 'நீ நம்பலையே பாரு. நான் நல்லா சம்பாரிச்சுட்டேன். நிறைய காசு கையில் வைச்சிருக்கேன். நான்

இன்னும் கல்யாணம் பண்ணிக்கலை. என்னை நம்பி யிருக்கலாம் நீ' அப்படின்னு வந்து சொன்னான். அப்ப எனக்கு ஒரு குழந்தை பிறந்து. ரெண்டாவது அபார்ஷன் ஆன நேரம்.

நான் செய்து ஜெயிச்சிருக்க வேண்டிய விஷயத்தை உங்களுக்கு சொல்லித் தரேன். நம்ம சுத்தி இருக்க றவங்களை நாம இப்படித்தான் ஏமாத்தணும்!" அக்கா சொன்னாள்.

புருஷனும், மனைவியும் அறைக்குள் போனார்கள். ஆரத் தழுவிக் கொண்டார்கள். கன்னத்தில் முத்தமிட் டுக் கொண்டார்கள், இதழோடு இதழ் பதித்துக் கிடந் தார்கள். இறுக்கிப் பின்னிக் கிடந்தார்கள். அவள் விக்கி விக்கி அழுதாள். அவன் விசும்பினான். அவள் அவன் காலில் விழுந்து நமஸ்கரித்தாள்.

"நான் பண்ணப்போற தப்புக்கு இப்பவே மன்னிச்சி டுங்க."

"நானும்தான் மன்னிப்பு கேக்கணும். அவன் குனிந்து அவள் கால்களைத் தொட்டான். கண்களில் ஒற்றிக் கொண்டான் மறுபடியும் இறுக்கித் தழுவிக் கொண்டான்.

"மணி ஆறேகால் ஆயிடிச்சி. நீங்க கிளம்புங்க." அவள் அவனை மெல்ல வெளியேற்றினாள். அவன் வெளியே போனான்.

அடுத்த அரை மணி வீடு ரகளைப்பட்டது. தான் லண் டனுக்கு போவதாக இவன் சொல்ல. 'கூடாது' என்று இவள் சொல்ல, வாக்குவாதம் பெரிதாகி சப்தம் போட்டு ஒருவரை ஒருவர் ஏசிக்கொள்ள, அவன் பாய்ந்து வந்து இவள் தலைமுடியைப் பிடித்து தரையில் தள்ளினான். முதுகில் அறைந்தான். எட்டி உதைத்தான். அவள் தாலியை அறுத்து இவன்மீது வீசினாள்.

அவர் இந்த மாற்றத்தை எதிர்பார்க்கவில்லை. அத்தான் சின்னசாமி ஆடிப்போனார். அவர்களைச் சமாதானப்ப டுத்த முயற்சித்தார். சட்டென்று மைத்துனன் பக்கம் சேர்ந்து கொண்டார்.

"டேய்! முதல்ல இந்த பஜாரியைக் கொண்டுபோய் அவ வீட்ல விட்டுடுடா.'

"நான் என்னத்துக்கு விடணும் - அவளா போய்த் தொலையட்டும்."

"அப்ப... போய் பஸ்ஸாவது ஏத்திவிடுறா."

"வேணாங்க. எல்லாம் அவளே பார்த்துப்பா."

"வா.நான் ஏத்திவிடறேன். வா!" அவர் துர்காதேவியைப் பார்த்துப் பேசினார்.

"நான் வரமாட்டேன்" அவள் அடம் பிடித்தாள்.

"யேய். நீயும் கிளம்புடி." சின்னசாமி மனைவியை யும் துரிதப்படுத்தினார். மனைவியோடு துர்காதேவியை யும் அழைத்துக்கொண்டார். பஸ் ஸ்டாண்டிற்கு போய் காட்டு மன்னார்கோவில் போகும் பஸ்ஸில் ஏற்றிவிட் டார். கையில் காசு கொடுத்தார்.

"எல்லாம் சரியாயிடும். அடிக்கடி போன் பண்ணு" என்று நம்பிக்கை கொடுத்தார்.

"நீ என் வீட்டிலே இருந்திருக்கலாம். எதுக்கு கிளம்பிப் போறேன்னு தெரியலை."- அவளிடம் கேட்டார்.

"அது நல்லா இருக்காதுங்க. அவர் இதைவிட அசிங் கமா நடத்துவாரு. அவருக்கு ஆத்திரமே நான் உங்க வீட்டுல இருக்கறதுதான். நான் உங்களுக்கு சோறு போடறேன், உங்க துணியை துவைக்கிறேன். உங் களுக்கு உதவி பண்றேன்னு அவருக்கு ஆத்திரமா

போச்சு. அதனாலதான் வீணா லண்டன் போறேன்னு சொல்லி கலாட்டா பண்றாரு."

"அப்படியா பண்றான்."

"ஆமாங்க. அவருக்கு உங்களோட நான் பழகறதுதான் புடிக்கலை.

"இப்பத்தான் அவன் லண்டன் போறானே. நீ எங்க வீட்டுலேயே இருந்துரேன்."

"அது இன்னும் மோசமா போயிடுங்க. என்னை தேவடியான்னு ஊர் முழுக்க சொல்லிடுவாங்க. நான் கொஞ்சநாள் பொறுத்து வர்றேன். நீங்க போங்க." பஸ் நகர விடைபெற்றாள்.

மெரீனா சாலையில் பஸ் சிக்னலுக்காக நிற்கும்போது அதில் சதாசிவம் தாவி ஏறினான். ஓடிப்போய் துர்கா தேவியின் அருகில் அமர்ந்து கொண்டான். 'தாம்பரம் வரைக்கும் ஒரு டிக்கெட் கொடுங்க' என்று வாங்கினான். சிறிது நேரம் அவள் கையைப் பற்றிக்கொண்டு அமைதியாக இருந்தான்.

"இப்பவும்கூட முதலாளியம்மாகூட பேசினேன்.சம்பளம் நான் நினைச்சதைவிட அதிகம். போய்ட்டம்னா எப்படியாவது அவங்களுக்கு இன்னொரு நல்ல ஜாப் கிடைச்சிடும். அந்த நல்ல ஜாப் அவங்களுக்கு கிடைச்சிடுச்சின்னா, நான் இன்னும் நல்லா சம்பளம் வாங்கிடுவேன். அதனால எனக்கு என்னமோ நம்பிக்கையிருக்கு. நாம ரொம்ப நல்லபடியா இருப்போம்னு ஒரு ரெண்டு வருஷம் இந்தப் பக்கம் தலைகாட்ட முடியாது. அதான் வேதனை. அதை உன்னால் பொறுத்துக்க முடியுமா?"

"வேறவழி... வெளியே எங்கயாவது போய் தொங்கறதுக்குப் பதிலா, வீட்டோட இருக்கறதுதான் நல்லது. புருஷன் இல்லைன்னாகூட பரவாயில்லை. பத்திரமா

இருக்கோம்ன்ற ஒரு நினைப்பு போதும். நீங்க லண்டன் போயி, எந்தக் கலவரமும் இல்லாம, எந்த இம்சையும் இல்லாம நிம்மதியா காசு சம்பாதிக்க ஆரம்பீங்க. வீட்டுக்குப் போய் சேர்ந்தவுடனே உங்களுக்கு போன் பண்றேன். நைட் அவருக்கு ட்யூட்டி இருக்கும். அவரு ஏழு மணிக்கு போயிடுவாரு. அதுக்கப் புறம் உங்களோட பேசறேன். நீங்க கிளம்பிப் போறதுக்கு முன்னாடியும் எனக்கு போன் பண்ணுங்க." தாம்பரத்தில் விடை பெற்றான்.

காட்டுமன்னார்கோவில் போய்ச் சேர்ந்ததாக இரவு ஒன்பது மணிக்கு ஒரு டெலிபோன் வந்தது. இருநூற்று இருபது ரூபாய் காசுக்கு அவள் டெலிபோன் பேசினாள். டெலிபோனில் அழுதாள். புலம்பினாள். உளறினாள். சதாசிவம் சகலமும் கேட்டுக்கொண்டு அவளைச் சமாதானப் படுத்தினான்.

ஐந்தாம் நாள் விசா வந்தது.

ஆறாம் நாள் டிக்கெட் கிடைத்தது.

ஏழாம் நாள் பயணத்தின்போது அக்காவின் காலில் விழுந்து விக்கி விக்கி அழுதான்...

"எனக்கு ரொம்ப சந்தோஷம்டா. நீங்க தோத்துட்டிருந்தா உலகம் முழுக்க அதைப் பேசிக்கிட்டு இருக்கும். காட்டுமன்னார்கோவில் முழுக்க அலசிக்கிட்டு இருக்கும். 'இரட்டைக் கரை கட்சிக்கும், மூணு கரைக் கட்சிக்கும் எப்படி சம்பந்தம் வரும். அப்படிச் சம்பந்தம் வந்தாலும் எப்படி அது நிக்கும். கூட்டணியே நிக்காதபோது கல்யாணம் நிக்குமா?' அப்படின்னுல்லாம் உளறிட்டு இருப்பாங்க. அந்தப் பொண்ணை 'அய்யோ, பாவம்'ன்னு வாங்க. உன்னை அடப்பாவின்னுவாங்க.

ஆனா, நீங்க ஜெயிச்சிட்டிகன்னு எனக்கு நல்லா தெரியுண்டா. ஒருவேளை, இதுக்கு சம்மதிக்க மாட்டீங்

களோன்னு நினைச்சேன். உங்களுக்குள்ள ஒத்துமை நல்லா இருந்தது னாலதான் 'சரக்'குன்னு சண்டை போடறதுக்கு சம்மதிச்சுட்டீங்க. சாதாரணமா யாருக் கும் இப்படிச் சம்மதிக்கத் தோணாது. நீங்க ஒருத்தர் மேல் ஒருத்தர் ரொம்ப பிரியமா இருக்கீங்கன்னு இதி லேர்ந்தே எனக்குத் தெரிஞ்சு போச்சு, உங்களை யாரும் பிரிக்க முடியாதுடா.தைரியமா போ.அழாம போ. அங்கே போய் பிசாசா வேலை செய். அப்பப்ப போன் பண்ணு. நல்லா இருடா. நீ கிளம்பி ஏர்போர்ட்டுக்கு போய் ஃப் ளைட் ஏறிட்டேன்னு நான் இங்கிருந்தே அவளுக்கு போன் பண்ணி சொல்றேன்."

அவன் ஏர்போர்ட்டிலிருந்து அக்காவுக்கு போன் செய் தான். அக்கா காட்டுமன்னார்கோவிலுக்குப் போன் செய்தாள். எதிர்முனையில் அவள் ஓடிப்போய் போன் எடுத்தாள். "நான் துர்காதேவி பேசறேன்" என்று உரக் கக் கத்தினாள்.

"அவன் கிளம்பிட்டாண்டி. இன்னும் பத்து நிமிஷத்துல ஏரோப்ளேன் கிளம்பிடும். நேரே லண்டன் போகுது. எங்கியும் நிக்காது. இன்னும் பதினாறு மணி நேரத்தில் அவன் லண்டன் போய் இறங்கிடுவான். இறங்கி அங் கேர்ந்து உனக்கு போன் பண்றேன்னு சொல்லி இருக் கான். அதனால போன்கிட்டேயே இரு."

"சரிக்கா, நான் பக்கத்திலேயே இருக்கேன்." துர்கா போனை வைத்துவிட்டு கேட்டன.

"அவருக்கு லண்டன் போறதுக்கு வாய்ப்பு கிடைச்சி ருக்கு. அதனால லண்டன் போயிருக்காரு" - அவள் அ மைதியாகப் பேசினாள்

"கல்யாணம் ஆயிடுச்சா?"

"ஆயிடுச்சுங்க. அவங்க அக்கா முன்னாடியும், அக்கா புருஷன் முன்னாடியும் நாங்க கல்யாணம் பண்ணிக்கிட் டோம்."

"அப்படியா, ரொம்ப சந்தோஷம். புருஷன் மனைவின்னு தீர்மானமாயிடுச்சுல்லே. அப்புறம் உள்ளுக்குள்ளே யாரும் வரமாட்டாங்க. ரொம்ப நல்லது. நீ இங்கனவே இரு. அவரு லண்டன் போயிட்டு வரட்டும். ஆமா, லண் டன்லே என்ன சம்ப ளம்?"

"ஒரு மாசத்துக்கு இருபத்துநாலாயிரம் ரூபாய் ஆரம்பத் துல கிடைக்கும்."

"மாசம் இருபத்துநாலாயிரமா?" சட்டென்று அங்கு ஒரு அமைதி எழுந்தது. வெள்ளை வேஷ்டிகள் எழுந்து உட் கார்ந்தன.

"போகப் போக நாப்பதாயிரம் வரைக்கும் கிடைக்கும்னு சொல்றாங்க. தனியா காண்ட்ராக்ட் எடுத்தா ஒரு மாசத் தில ஒரு லட்சம் ரூபா வரைக்கும்கூட சம்பாதிச்சுடலாம். அந்த காண்ட்ராக்ட் கிடைக்கணும்னும் வேண்டிக்கிட்டி ருக்கேன். நம்ம சிவன் கோயிலுக்கும் ஜலம் ஊத்துனா நிச்சயம் எல்லாம் நல்லபடியா நடக்குதுங்க. அவர் லண் டன் போறதுக்கு காரணம்கூட தினம் பதினோரு குடம் தண்ணி ஊத்தினதுதான்."

"அப்படியா சொல்ற. நம்ம சிவன்கோயில் அவ்ளோ பவர்ஃபுல்லா!" அவர்கள் கேள்வி கேட்டார்கள்.

அவள் வீட்டிற்குப் போனாள். வராண்டாவில் உட்கார்ந்து கொண்டு எஸ்.டீ.டி. பூத்தையே பார்த்துக் கொண்டிருந் தாள். வராண்டா முழுவதும் வெள்ளைச் சுவர் இருந்தது. ஒரு வெள்ளைச்சுவரை சதாசிவம் எந்த விதமாக அழகு படுத்துவான் என்று யோசித்தாள். அவனைப் போலவே, அவன் செய்கின்ற வேலையையே நாமும் செய்தால் என்ன... எதற்கு வெறும் சமையலும். பெருக்குவதும்

துடைப்பது மாகவே இருக்கிறேன். அவனுடைய இன் டீரியர் டெக்கரேட்டர் வேலையை நான் இங்கு செய்து பார்க்கக்கூடாதா?"

காவிக் கலரை கொண்டுவந்தாள். துணியை நனைத் தாள் சுவரில் பென்சிலால் கோலங்கள் போட்டாள். உட் கார்ந்திருக்கிற இடத்துக்கு அருகே வராண்டாவில் பற வைகள் போட்டாள். நிலவு போட்டாள். சற்று தள்ளி சூரி யன் போட்டாள். பொங்கல் பானையும், கரும்பும் போட் டாள். சுவர் முடிந்து திரும்பும் இடத்தில் ஒரு பெரிய வெள்ளைச் சதுரத்தில் புள்ளி வைத்து தேர்போல கோலம் எழுதினாள், அதில் குதிரைகள் வரைந்தாள். அழகிய கொடி வரைந்தாள். அந்தத் தேரில் சதாசிவம் என்று எழுதினாள்.

அவள் கண்களில் நீர் வழிந்தது. குனிந்து அந்தத் தேருக்கு நமஸ்காரம் செய்தாள்.

'தப்பிச்சுக்கறதுக்காக தாலியை அறுத்து வீசினேன். தய வுசெய்து அதை மன்னிச்சுடணும். எந்தக் கெடுதலும் இல்லாம மறுபடியும் வந்து சேரணும். நீ வந்து சேர்ற வரையில் நாள் தவறாம சிவனுக்கு பதினோரு குடம் தண்ணி ஊத்து வேன். இது சத்தியம். நான் தண்ணி ஊத்த ஊத்த உனக்கு பலம் ஜாஸ்தியாகும். உன் மனசு சந்தோஷமாகும். உன் கற்பனை சிறகடிச்சுப் பறக்கும். உனக்கு பாராட்டு குவியும். காசு பணம் நிறைய சேரும். எந்த நேரமும் என் நினைப்பாவே நீ இருக்கற துக் காகவும் ஒரு குடம் தண்ணி ஊத்துவேன்." சிரித்தாள் குடத்தை எடுத்துக் கொண்டு வாசலில் இறங்கினாள்.

"அண்ணே!இங்கேதான் சிவன் கோயிலுக்குப் போறேன். ஒருவேளை போன் வந்தா அங்கே வந்த சொல்றீங்களா?'

"நிச்சயம் சொல்றேன் தாயி. ஒரு பத்து நிமிஷம் கழிச்சி போன் பண்ணுடான்னு சொல்லிட்டு டப்புன்னு வண் டியை எடுத்துக்கினு வந்திடறேன். கவலைப்படாதே."

"ரொம்ப நன்றிண்ணே!" துர்காதேவி கையெடுத்து வணங்கினாள்.

"இத பாரு... லவ்வு கிவ்வுல்லாம் நம்ம ஊருல தப்பு, கல் யாணம் கட்டிக்கிட்ட பிறகு அவங்களைக் காப்பாத்த

"அப்படியா, ரொம்ப சந்தோஷம். புருஷன் மனைவின்னு தீர்மானமாயிடுச்சுல்லே. அப்புறம் உள்ளுக்குள்ளே யாரும் வரமாட்டாங்க. ரொம்ப நல்லது. நீ இங்கனவே இரு. அவரு லண்டன் போயிட்டு வரட்டும். ஆமா, லண் டன்லே என்ன சம்பளம்?"

"ஒரு மாசத்துக்கு இருபத்துநாலாயிரம் ரூபாய் ஆரம்பத் துல கிடைக்கும்."

"மாசம் இருபத்துநாலாயிரமா?" சட்டென்று அங்கு ஒரு அமைதி எழுந்தது. வெள்ளை வேஷ்டிகள் எழுந்து உட் கார்ந்தன.

"போகப் போக நாப்பதாயிரம் வரைக்கும் கிடைக்கும்னு சொல்றாங்க. தனியா காண்ட்ராக்ட் எடுத்தா ஒரு மாசத் தில ஒரு லட்சம் ரூபா வரைக்கும்கூட சம்பாதிச்சுடலாம். அந்த காண்ட்ராக்ட் கிடைக்கணும்னும் வேண்டிக்கிட்டி ருக்கேன். நம்ம சிவன் கோயிலுக்கும் ஜலம் ஊத்துனா நிச்சயம் எல்லாம் நல்லபடியா நடக்குதுங்க. அவர் லண் டன் போறதுக்கு காரணம்கூட தினம் பதினோரு குடம் தண்ணி ஊத்தினதுதான்."

"அப்படியா சொல்ற. நம்ம சிவன்கோயில் அவ்ளோ பவர்ஃபுல்லா!" அவர்கள் கேள்வி கேட்டார்கள்.

அவள் வீட்டிற்குப் போனாள். வராண்டாவில் உட்கார்ந்து கொண்டு எஸ்.டீ.டி. பூத்தையே பார்த்துக் கொண்டிருந்

தாள். வராண்டா முழுவதும் வெள்ளைச் சுவர் இருந்தது. ஒரு வெள்ளைச்சுவரை சதாசிவம் எந்த விதமாக அழகு படுத்துவான் என்று யோசித்தாள். அவனைப் போலவே, அவன் செய்கின்ற வேலையையே நாமும் செய்தால் என்ன... எதற்கு வெறும் சமையலும். பெருக்குவதும் துடைப்பது மாகவே இருக்கிறேன். அவனுடைய இன் டீரியர் டெக்கரேட்டர் வேலையை நான் இங்கு செய்து பார்க்கக்கூடாதா?"

காவிக் கலரை கொண்டுவந்தாள். துணியை நனைத் தாள் சுவரில் பென்சிலால் கோலங்கள் போட்டாள். உட் கார்ந்திருக்கிற இடத்துக்கு அருகே வராண்டாவில் பற வைகள் போட்டாள். நிலவு போட்டாள். சற்று தள்ளி சூரி யன் போட்டாள். பொங்கல் பானையும், கரும்பும் போட் டாள். சுவர் முடிந்து திரும்பும் இடத்தில் ஒரு பெரிய வெள்ளைச் சதுரத் தில் புள்ளி வைத்து தேர்போல கோலம் எழுதினாள், அதில் குதிரைகள் வரைந்தாள். அழகிய கொடி வரைந்தாள். அந்தத் தேரில் சதாசிவம் என்று எழுதினாள்.

அவள் கண்களில் நீர் வழிந்தது. குனிந்து அந்தத் தேருக்கு நமஸ்காரம் செய்தாள்.

'தப்பிச்சுக்கறதுக்காக தாலியை அறுத்து வீசினேன். தய வுசெய்து அதை மன்னிச்சுடணும். எந்தக் கெடுதலும் இல்லாம மறுபடியும் வந்து சேரணும். நீ வந்து சேர்ற வரையில் நான் தவறாம சிவனுக்கு பதினோரு குடம் தண்ணி ஊத்துவேன். இது சத்தியம். நான் தண்ணி ஊத்த ஊத்த உனக்கு பலம் ஜாஸ்தியாகும். உன் மனசு சந்தோஷமாகும். உன் கற்பனை சிறகடிச்சுப் பறக்கும். உனக்கு பாராட்டு குவியும். காசு பணம் நிறைய சேரும். எந்த நேரமும் என் நினைப்பாவே நீ இருக்கற துக் காகவும் ஒரு குடம் தண்ணி ஊத்துவேன்.' சிரித்தாள். குடத்தை எடுத்துக் கொண்டு வாசலில் இறங்கினாள்.

“அண்ணே! இங்கேதான் சிவன் கோயிலுக்குப் போறேன். ஒருவேளை போன் வந்தா அங்கே வந்த சொல்றீங்களா?

“நிச்சயம் சொல்றேன் தாயி. ஒரு பத்து நிமிஷம் கழிச்சி போன் பண்ணுடான்னு சொல்லிட்டு டப்புன்னு வண்டியை எடுத்துக்கினு வந்திடறேன். கவலைப்படாதே.”

“ரொம்ப நன்றிண்ணே!” துர்காதேவி கையெடுத்து வணங்கினாள்.

“இத பாரு... லவ்வு கிவ்வுல்லாம் நம்ம ஊருல தப்பு, கல்யாணம் கட்டிக்கிட்ட பிறகு அவங்களைக் காப்பாத்த வேண்டியது இந்த ஊரோட கடமை. அத இந்த ஊரு செய்யும். நீ கவலைப்படாதே. அந்த ஊர் உரக்கச் சொல்லிற்று.

அவள் சிரித்துக்கொண்டாள். குடத்தோடு கோயில் நோக்கி நடந்தாள். அந்த வீட்டிலுள்ள குங்குமத்தேரில் மாலை வெயில் மெல்லியதாய் பட்டு, தேர் ஜொலிக்கத் துவங்கியது.

முற்றும்


குங்குமத் தேர்
பாலகுமாரன்